
# நெஞ்சாங்கூட்டு நினைவுகள்



ஆ. இரத்தினவேலோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சாங்கூட்டு நினைவுகள்

புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்

மீரா பதிப்பகம்
65ஆவது வெளியீடு
191/23, ஹைலெவல் வீதி, கிருலப்பனை,
கொழும்பு - 06.
தொலைபேசி : 2513336

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் : நெஞ்சாங்கூட்டு நினைவுகள்

வகை : சிறுகதை

ஆசிரியர் : புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்

பதிப்புரிமை : மீரா பதிப்பகத்தினருக்கு

முதற் பதிப்பு : 25.12.2006

பதிப்பு : மீரா பதிப்பகம்
65ஆவது வெளியீடு
191/23, ஹைலெவல் வீதி, கிருலப்பனை,
கொழும்பு - 06.
தொலைபேசி : 2513336

அச்சிட்டோர் : ஈகுவாலிட்டி கிராப்பிக்ஸ் (பிரைவேட்) லிமிடட்.
317, ஜம்பட்டா வீதி,
கொழும்பு 13.
தொலைபேசி : 2389848

விலை : ரூபா 200.00

# அணிந்துரை

எழுத்தை ஆள்பவனே எழுத்தாளன். எழுத்தினைக் கருவியாக்கி உள்மனதில் தான் கொண்ட எண்ணக் கருத்துக்களையும் உள்ளத்தில் கிளர்ந்து எழுந்த உணர்ச்சிகளையும் அவன் இலக்கியமாக்கி வெளியிடுகிறான்.

**எழுதுவதன் நோக்கம் படிப்பவன் மனதில் ஒத்த எண்ணத்தையும் உணர்ச்சி அலையையும் ஏற்படுத்துவதே ஆகும்.** இதில் சகலரும் வெற்றி பெறுவதில்லை. காத்திரமான சமுதாய நிகழ்வுகள் கூட சில சமயங்களில் சில எழுத்தாளர்களின் படைப்பில் உப்புச்சப்பற்றதாகி விடுகின்றன. இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஒரு சமுதாய நிகழ்வைக் கையாளும்போது அந் நிகழ்வு எழுத்தாளனின் உள் மனதில் ஏற்படுத்திய தாக்கம், அதிலிருந்து அவன் புரிந்து கொண்ட பாடம், அதனால் ஏற்பட்ட மனத் தெளிவு ஆகியன அப்படைப்பில் இழையோட வேண்டும்.

ஒரு வாசகன் படித்து முடித்ததும் எழுத்தாளன் கூறமுனையும் பாடத்தையே, புரிந்து கொள்கின்றான். வாசகர் மனதிலும் அதையொத்த தாக்கம் ஏற்படும் போது எழுத்தாளனின் முயற்சி பூரணத்துவமடைகின்றது. அசுர வேகத்தில் சமுதாய நிகழ்வுகளை அதி நவீன ஊடகங்கள் மூலமாக வெளிக்கொணரும் இவ்வவசர யுகத்தில் **அமைதியான போக்குடனும் தெளிவான சிந்தனையுடனும் சிறுகதை இலக்கியமாக தன் எண்ணக் கருவூலங்களை சமுதாயத்திற்கு அளிக்கும்** புலோலியூர் இரத்தின வேலோன் அவர்களது பணி மிகச் சிறந்த முயற்சியாகும்.

அவரின் இப்பணி அவர் பிறந்த வடமராட்சி மண் செழுமையைப் பிரதிபலிப்பதுடன் ஈழத்துச் சிறுகதை இலக்கிய வளத்திற்கும் செழுமை சேர்க்கும் பணியாகவும் நிச்சயம் அமையும்.

வாழ்க அவரது இலக்கியப்பணி! வளர்க அவரது எதிர்கால முயற்சி!

*33, 2ஆவது ஒழுங்கை,*
தெஹிவளை.

***– எஸ். பாலச்சந்திரன்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சாங் கூட்டிலிருந்து.........

பிற பாத்திரங்களைச் சிருஷ்டித்துக் கதை சொல்வதை விட நான் நானாகவே நின்று கதை கூறுவதையே பெரிதும் விரும்புகின்றேன். அப்போது தான் மன எழுச்சிகளை, மனித முரண்பாடுகளை மனக் குமுறல் களை இயல்பானதாக வெளிக் கொணர முடியும் என நான் நம்புகின்றேன்.

அந்த வகையில் பத்துப் பதினொரு வயது முதல் (1970 கள்) நாற்பத்து எட்டு வயது வரையிலான மூன்று தசாப்த கால கட்டத்தில் தனிப்பட்ட எனது வாழ்க்கைக் கோலத்தினூடே எம் தேசியத்தின் சமூக மாறுதல்களை முதல் ஐந்து கதைகளும் சித்திரித்து நிற்க கடைசி நான்கு கதைகளும் புற அனுபவச் சித்திரிப்புகளாக அமைந்து இந்நூலினை முழுமைப்படுத்த முயல்கின்றன.

இக்கதைகள் வெளிவரக் களம் தந்த ஈழத்தின் தேசியப் பத்திரிகை களான தினக்குரல், வீரகேசரி மற்றும் சுடர் சஞ்சிகைக்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

வீரகேசரி நிறுவனத்தின் முன்னாள் முகாமையாளரும், பிறிண்ட் கிராப்பிக்ஸ் நிறுவன முன்னாள் நிர்வாக இயக்குனருமான திரு. எஸ். பாலச் சந்திரன் அவர்களின் அணிந்துரையுடனும் கொழும்பு மீரா பதிப்பகத்தின் 65ஆவது அறுவடையாகவும் எனது நெஞ்சாங்கூட்டு நினைவுகள் பதிவுக்குள்ளாவது பெருமை தருகிறது.

வழமைபோல் இந்நூலாக்கத்திற்கு உதவிய என் துணைவியார் சாந்தகுமாரி, மகள் மீரா, மகன் துவாரகனுக்கும் கணினியில் தட்டெழுத் திட்டு உதவிய செல்வி கீதாஞ்சலி மற்றும் அச்சுப் பதிப்பில் உதவிய நண்பன் ரஞ்சகுமார் ஆகியோருக்கும் வாசகர்களாகிய உங்களுக்கும் எனதன்பு என்றும் உண்டு.

**—புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்**

மீரா அகம்,
புற்றளை, புலோலி.
*25.12.2006*

## உள்ளே.........


நெஞ்சாங்கூட்டு நினைவுகள் --------- --------- --------- 01

சரவணை --------- --------- --------- 15

பிறந்த நாள் --------- --------- --------- 31

புத்துணர்ச்சி --------- --------- --------- 39

தந்தையுமாகி --------- --------- --------- 45

அறிமுக விழா --------- --------- --------- 60

ஒற்றைப் பனை --------- --------- --------- 68

புதிய தரிசனங்கள் --------- --------- --------- 85

அம்மா --------- --------- --------- 96



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் பிற நூல்கள்

### கொழும்பு மீரா பதிப்பக பிரசுரங்கள்

*சிறுகதை*

- *புதிய பயணம்*
- *விடியட்டும் பார்ப்போம்*
- *நிலாக் காலம்*
- *விடியலுக்கு முன்*

*பத்தி எழுத்துக்கள்*

- *புதிய சகத்திரப் புலர்வின் முன் ஈழச் சிறுகதைகள் (இரண்டு பதிப்புகள்)*
- *அண்மைக்கால அறுவடைகள்*

### சென்னை மணிமேகலைப் பிரசுரங்கள்

- *திக்கற்றவர்கள் (சிறுகதைகள்)*
- *ஈழத்துச் சிறுகதைகள் (பத்தி)*

### சிறுகதைகள் பெற்ற கௌரவங்கள்

- *வட - கிழக்கு மாகாண சாகித்ய விருது - நிலாக்காலம்*
- *கனகசெந்தி கதா விருது - வேட்டை*
- *எம். திருமகள் எனும் யாழ் பல்கலைக் கழக மாணவி தமிழ் சிறப்புக் கலைமாணித்தேர்வின் நிறைவாண்டுப் பரீட்சையின் ஒரு பகுதியைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இவரது சிறுகதைகளை ஆய்வு செய்து சமர்ப்பித்தார்.*

# நெஞ்சாங்கூட்டு நினைவுகள்

நான் அறிந்த நாளிலிருந்தே நடுவிலம்மான் எங்கள் வீட்டிலேயே தங்கியிருந்தாலும் அவரது சொந்தப் பெயர் மண்டலாய் என ஐந்தாம் வகுப்புப் படித்த போதே எனக்குத் தெரிய வந்தது. அதுவும் ஒருநாள் ஆறுமுகப்பாவின் கடைக்கு கூப்பன் எடுக்க அம்மாவுடன் அவவின் சேலைத் தலைப்பை பிடித்தபடி சென்றபோது "மண்டலாய் இப்ப மாடு மேய்க்க வயல் பக்கம் வாறதில்லையோ?" என்று கூப்பனை வெட்டியவாறே அவர் கேட்க "நடுவிலம்மான் இப்ப கிளைப்பனையடிப் பக்கமாப் போறார் போலை" என அம்மா சொன்னபோது தான் அவரது இயற்பெயரை நான் அறிந்து கொண்டேன்.

எங்களது நாச்சார வீட்டின் கடைசி அறையோடு தெற்குப் புறமாக ஒரு ஒத்தாப்பு இறக்கி அக்கொட்டிலிலேயே நடுவிலம்மான் வசித்து வந்தார். டச்சுக்காலத்து வாங்கில் ஒன்றில் முதுகுப்பாட்டிற்கு மாந்தோலும் கால்மாட்டிற்கு சாக்கும் விரித்து அதில்தான் படுத்தெழும்புவார்.

ஒத்தாப்பு மூலையில் பிய்ந்துபோன பழைய கதிரை ஒன்றின் மேல் பென்னம் பெரிய சூட்கேஸ் ஒன்று வைத்திருப்பார். அதற்குப் பக்கத்தில் முண்டு கொடுத்துக் கொண்டு ஒரு ஸ்ரூல் பழி கிடக்கும். அவருக்குரிய தேத்தண்ணி, கோப்பியோ அல்லது சோறுபோட்ட வட்டிலோ அதில்தான் வைக்க வேண்டும் என்பது அஞ்சாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருஷங்களுக்கு முந்தியே அவர் போட்ட உத்தரவாம். அம்மாதான் ஒருநாள் அவர் ஆறுமுகப்பாவின் கடையடிப் பக்கம் போனபின்பு பரமரகசியம் போல் எனக்குச் சொன்னா.

நடுவிலம்மானுக்கு இடதுகால் ஏலாது. இழுத்திழுத்துத் தான் நடப்பார். சின்ன வயதில சிங்கக்குட்டி மாதிரித் திரிந்தாராம். இடையில் பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்டு கால் இப்படி சூம்பிப் போயிற்றாம். ஆனாலும் தேகத்தை வளைத்து பம்பரமாகத் தொழில்கள் செய்வார்.

ஒவ்வொரு நாளும் கருக்கலோடு எழுந்து அரிசியைக் கழுவி உரலில் போட்டால் போதும், நொடிப் பொழுதில் மாவாக்கி அம்மாவின் கையில் கொடுத்து விடுவார். அவர் அரிசி இடிக்கும் போது இடுப்பில் கை வைத்து நான் பார்த்துக் கொண்டு நிற்பேன். நெற்றியிலும் நெஞ்சிலும் வியர்வை வழிந்தோட மூசி மூசி இடிப்பார். பார்க்கப் பாவமாக இருக்கும். அம்மா தான் இடிப்பதாகக் கேட்டாலும் உலக்கையை விடமாட்டார். "புட்டுக்கு உலையை வைச்சு மற்ற அலுவல்களைக் கெதியாப் பார். பொடியளுக்கு பள்டத்துக்கு நேரமாச்சு" என்பார். ஒவ்வொரு நாளும் விடியப்பறம் அவரது வேலை அதுவாகத்தான் இருக்கும்.

பள்ளிக்கூடத்திலை மூத்ததம்பி வாத்தியார், கந்தப்பு வாத்தியார் போலை ஆக்கள் சவடலாகப் பேசி முசுப்பாத்திக் கதைகள் கதைச்சு காலத்தைப் போக்காட்ட பெரியதம்பி வாத்தியார் மட்டும் நேரசூசி தவறாது பாடமெடுப்பார். அது மாதிரி நடுவிலம்மானும் எல்லா அலுவல்களையும் நேரங்கட்டியே செய்வார். காலம்பற அரிசி இடிச்சு முடிய எங்கள் மூண்டு பேருக்கும் குளிக்க வாப்பார். "மூத்தவன் வா, பிள்ளை வா அடுத்தது செல்லத்தம்பி நீ வா!" எனக் கூப்பிட்டு எண்ணி ஆளுக்குப் பத்துப் பட்டை தண்ணி கிணற்றில் தானே அள்ளி வாப்பார். குளிக்க வரச் சொல்ல அண்ணன் கொஞ்சம் குளப்படி





பண்ணுவான். நடுவிலம்மான் முழுசிப் பார்ப்பார். பெட்டிப் பாம்பாய் அடங்கி நடுங்கியபடி அவன் கிணற்றடி தொட்டியடியில் வந்து குந்திக்கொண்டிருப்பான்.

நடுவிலம்மான் குளிக்க வாத்து முடிய மூன்று வட்டிலில் அம்மா ஆவி பறக்கும் அரிசிப் புட்டுடனும், மணக்கும் பழைய ஆணத் துடனும் தயாராக இருப்பா. நாங்கள் இழுத்தடிச்சு பள்ளிக் கூடம் சென்ற பின்பு தனது மாடுகளை அவிட்டு விட்டு அவற்றினை மேய்ப்பதற்கு நடுவிலம்மான் வயல் பக்கமாகவோ அல்லது வேறெங்காவதோ சென்று விடுவார்.

நாங்கள் பள்ளிக்கூடத்தால் வந்து சாப்பிட்டு, ஏவறை விட்டு நீண்ட நேரத்திற்குப் பிறகே மாடுகளை "ச்சாய், ச்சாய்," என சாய்ச்சுக் கொண்டு வளவுக்கு வருவார். கரைச்சியான், குடத்தனையான் கூவிலான் என மூண்டு நாலு பசுக்களை அவர் வளர்த்து வந்தார். பசுக்கள் என்றால் பிள்ளையார் கோவில் தெற்குப்புற உள்வீதியில் வைச்சிருக்கிற காராம்பசு மாதிரி கொளுகொளுவென அவை இருக்கும். மேய்ச்சலால் வரும்போது படலையடியில் கலன் கணக்கில் சலம் பெய்து பொத்துப் பொத்தென்று சாணம் போட்டுக்கொண்டு வாலைக் கிளப்பியபடி வளவுக்குள் நுழையும். கட்டுக் கொடியில் மாடுகளைக் கட்டி அதுகள் நாக்கைப் பிரட்டி அசைபோடத் தொடங்கிய பின்பே நடுவிலம்மான் தனது அன்றாட அலுவல்களைப் பார்க்கத் தொடங்குவார்.

வளவு முழுக்க மாடுகள் போட்ட சாணத்தை கடகத்தில் நிரப்பி எருக்கும்பியில் கொட்டி, மாட்டுக் கொட்டிலைத் துப்பரவு செய்து அதன்பிறகு குளித்து விட்டு வந்து அவர் சோத்தில் கைவைக்க நான்கு மணியாகிவிடும். சாப்பிட்ட பின் வாங்கிலில் கொஞ்சநேரம் சரிந்து கொள்வார். பத்து நிமிடத்தில் சொல்லி வைத்தபடி கூப்பிடு துூரத்தில், நறுவிலியடி பனங்கூடலில் மாணிக்கன் பனை ஓலை வெட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தம் கேட்டு விழித்துக் கொள்வார். எழுந்து சென்றாரென்றால் பத்துப் பதினைஞ்சு ஓலைகளை பச்சை நாரால் கட்டி தலையில் சுமந்தபடியேதான் திரும்புவார்.

ஓலைகளைச் சிறாய்த்துக் கிழித்து கட்டுக் கட்டாக விறாந்தையில் போடுவார். ஒவ்வொரு கட்டிலும் அடிமட்டம் வைத்து அடுக்கியதைப் போல ஓலைகள் ஒழுங்கிலிருக்கும். ஓலை கிழித்து முடியுமட்டிலும் நடுவிலம்மான் எவருடனும் பறையவே மாட்டார். அந்நேரங்களிலும் நொங்குச் சேர்வை சீவும்போதும் வாய்திறந்தால் மாட்டுக்கு ஏதோ நாணமாம். அதனால் ஏன் பிரச்சினை எண்டு சூட்சும புத்தி கொண்ட அம்மா அநேகமாக அந்நேரம் பார்த்து நல்லதண்ணி அள்ள வயலடிப்பக்கம் போய்விடுவா. நாங்களும் மாங்கொட்டை விளையாடப் போய் விடுவோம்.

பொழுது மைமலாக நாம் படிக்கத் தொடங்கும் போது அரிக்கன் லாம்பைக் கொளுத்திக் கொணந்து அம்மா விறாந்தை வளையில் தொங்க விடுவா. கந்தப்பு வாத்தியார் சுத்த மோசம். ஒவ்வொருநாளும் வீட்டுவேலை தருவார். அது செய்யவே ஒரு மணித்தியாலயம் பிடிக்கும். கணக்குப் பாடத்திலையோ தமிழ், சமய பாடங்களிலையோ ஏதாவது தெரியாவிட்டால் நடுவிலம்மான் சொல்லித் தருவார்.

நான் படிச்சு முடிஞ்சு அலுத்துப்போய் கொப்பி புத்தகங்களை அடுக்கத் தொடங்கும் போது நடுவிலம்மான் கிழித்த ஓலைகளைத் தும்பாக்கத் தொடங்குவார். ஐயா லீவிலை வந்து நிற்கிற நேரங்களிலை ஐயாவும் அம்மானுக்கு ஒத்தாசை புரிவார். ஆனாலும் நடுவிலம்மான் ஐயாவுடன் நேருக்கு நேர் கதைத்ததை நான் ஒரு போதும் கண்டதில்லை.

தும்பாக்கிய ஓலையை மாடுகளுக்கு போட்டு விட்டு மாட்டலுவல்கள் எல்லாம் முடித்து வர அடுத்த வீட்டு ஓடையம்மான்





வளவு றேடியோப் பெட்டி இரவுச் செய்தி சொல்லிக் கொண்டிருக்கும்.

நடுவிலம்மானிடமும் ஒரு றேடியோப் பெட்டி இருந்தது. ரவுணில் அச்சுக் கூடமொன்றில் வேலை செய்த போது ஆரோ அரை விலைக்கு கொடுத்ததாக அடிக்கடி சொல்லுவார்.

திருச்சி லோகநாதன், கண்டசாலா பாடல்களை 'கறகற' வெனப் பாடிக் கொண்டிருந்தது. ஒரு நாள் 'டமார்' என்ற சத்தத்துடன் அப்பிடியே நின்றுவிட்டது. ஆலடிச் சந்தையடியிலை சயிக்கிள் கடை வைச்சிருக்கிற சங்கரப்பிள்ளையிடம் கொண்டு போய் காட்டிப் பார்த்தார். 'பாட்ஸ்' ஏதோ மாத்த வேணுமெண்டு சொன்னானாம். "அதுக்கெல்லாம் இப்ப கட்டாது" எண்டு சொல்லி அப்படியே திருப்பிக் கொண்டு வந்து பற்றியைக் கழற்றி விட்டு சூட்கேசின் அடியில் வைத்து விட்டார்.

அச்சுக் கூடத்தில் வேலை செய்ததால் நடுவிலம்மானை 'அச்சுக் கூடத்து அம்மான்' எண்டும் இடைக்கிடை அம்மா அவை சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறன். அச்சுக் கூடத்தில் வேலைசெய்த காலத்தில் தான் நடுவிலம்மான் கலியாணம் செய்தாராம். பென்னம் பெரிய புதிய சூட்கேசுக்குள் நடுவிலம்மானின் வேட்டி, சேட்டுகளை வைத்து வெள்ளைத்துணி ஒன்றால் மூடி அம்மம்மா தலையில் சுமந்து செல்ல கூடவே நடுவிலம்மானும் அம்மா அவையும் பொம்பிளை வீட்டுக்குப் போய் 'சோறு குடுப்பிச்சு' மிக எளிமையாத்தான் கலியாண வீடு நடந்ததாம். மூன்று மாதங்கள் கூட ஆகியிருக்காதாம். ஒரு அமாவாசை கும்மிருட்டில் அழுவாரைப்போல அதே சூட்கேசை தலையில் சுமந்து கொண்டு அவர் திரும்பி வந்திட்டாராம். நடுவிலம்மான் பாவம் எண்டு சொல்லி அம்மாதான் வீட்டிலை தங்க இடம் கொடுத்தாவாம். அம்மம்மாதான் இந்தக் கதையை ஒரு நாள் எமக்கு விஸ்தாரமாகவும் கவலை தோய்ந்த முகத்தோடையும் சொன்னா. அப்ப அவவின்ரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களிலையிருந்து 'பொல பொல' வெண்டு கண்ணீர் வழிந் தோடியது.

"இதெல்லாம் எனக்கு கொஞ்சம் கொஞ்சம் ஞாபகத்திலை இருக்குது" கதையைக் கேட்டுக் கொண்டிருந்த அண்ணன் பெருமை யாகச் சொன்னான். "எனக்கு ஒண்டுமே ஞாபகத்திலை இல்லை" அப்பிராணியாக நான் சொன்னன். "அப்ப நீ சவலை மோனை" என்றா அம்மம்மா.

"அதுக்குப் பிறகு நடுவிலம்மான் அங்கை போகேல்லையோ?" வேகத்துடன் அக்கா கேட்டாள். இப்படி வேகமான கேள்விகள் அவளுக்குத்தான் வரும்.

"இல்லைப் பிள்ளையள்" என்ற அம்மம்மா பெருமூச்சுடன் தொடர்ந்தா. "பிள்ளையள் நீங்கள் நடுவிலம்மானை நடுவில் தாத்தா எண்டு சொல்லுங்கோ. அவர் கொம்மாவுக்குத் தான் மோனை அம்மான்."

"ஓம் அம்மம்மா இனி நாங்கள் அப்படியே சொல்லுறம்" என வில்லுப்பாட்டு சின்ன மணிக்கு பின்னால் இருக்கும் பக்கவாத்தியக் காரர்கள் மாதிரி மூவரும் ஒத்தூதினோம். ஆனால் மறுநாட் காலையிலேயும் 'நடுவில் அம்மான்' என்றுதான் நாக்குப் பிரண்டது.

எங்களூர் பிள்ளையார் கோயில் திருவிழா ஆனிப் பறுவத்தோடு வரும். அந்தப் பத்து நாட்களும் அம்மான் ஆளே மாறிவிடுவார். பழுப்பு நிற வேட்டி கட்டி கழுத்தில் உருத்திராக்க மாலையுடன் தேகமெங்கும் தீட்சை தரித்து கோவிலே கதியெண்டு கிடப்பார். கையில் கமண்டலம் இல்லாத குறையொன்றுதான். மறந்தும் வீட்டில் பச்சைத் தண்ணீரும் குடிக்க மாட்டார். கோயிலிலிருந்து கொண்டு வரும் பிரசாதங்களையே ஒரு நேரச் சாப்பாடாகச் சாப்பிடுவார். "செல்லத்தம்பி இஞ்சை ஒருக்கா வா" எண்டு கூப்பிட்டு மோதகத்தில்





ஒண்டைப் பாதியை எனக்கும் தருவார். அதை நாங்கள் மூவரும் பங்கிட்டுக் கொள்வோம். அநேகமாக அண்ணன் தான் மோதகத்தைப் பிரிப்பான். பாகைமானி வைத்தது போல சரியாக நூற்றியிருபது பாகையில் மூண்டு துண்டுகளாகப் பிரிச்சுத் தருவான்.

திருவிழா இரவு நிகழ்ச்சி இருந்தால் நடுவிலம்மான் எங்களையும் கூட்டிக் கொண்டு போவார். மேளக்கச்சேரி முடிய கதாப்பிரசங்கம் நடக்கும். அதுக்குப் பிறகுதான் வில்லுப்பாட்டு, பாட்டுக்கச்சேரி, சின்னமேளம் என நான்கு திக்கிலிருந்தும் திருவிழாவுக்குச் சனம் குவியும். வில்லுப்பாட்டு சின்னமணி குழுவினராக இருந்தால் "பொடிச்சி நீயும் வெளிக்கிடு" என அம்மாவையும் வருமாறு அழைப்பார். நித்திரை கொள்ளாது கொட்டாவி விடாது சன மெல்லாம் வில்லுப்பாட்டுடன் ஒன்றிப்போகும்.

பாட்டுக் கச்சேரி முடிந்ததுதான் தாமதம் எங்களை வீட்டுக்கு வருமாறு நடுவிலம்மான் கூப்பிடுவார். அரைமனத்துடனும் அரைத் தூக்கத்துடனும் இழுபட்டவாறே நாம் அவர் பின்னால் செல்வோம்.

தேர்த்திருவிழா அண்டைக்கு வடம் பிடிக்கிற சனங்களோடை தானும் சேர்ந்து கொள்ளாமல் விடமாட்டார். இயலாத காலை பிறர் மிரிச்சுத் தள்ளினாலும் நசுங்கிக் கொண்டு நின்று "அரோகரா அரோகரா" எண்டு சொல்லி அவர் வடம் பிடிக்கைக்குள்ளை பார்க்கப் பரிதாபமாக இருக்கும்.

நடுவிலம்மானிடம் ஒரு திறமை இருந்தது. ஆத்திசூடி, கொன்றை வேந்தனையோ, திருக்குறளையோ சந்தர்ப்பத்திற்கு உகந்ததாக அவ்வப்போது சொல்லிக் கொள்வார். அதனால் அவரை 'இலக்கணக் கொத்தர்' என்று அண்ணன் பழிப்பான். அப்படிப் பழித்ததில் ஒரு நாள் ஐயாவிடம் பிடரியில் வசமாக வாங்கிக் கட்டியும் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்களுக்குப் பட்டங்கள் வைப்பதில் அண்ணனுக்கு டிகிரி கொடுக்கலாம். றேடியோ சிலோன், தட்டுவாணி, ஈப்பிணி, புளுகர். பல்லுக்கொதி, பச்சைத்தண்ணி என்பன அவன் வைச்ச பட்டங்களில் மிகப் பிரசித்தம். தனக்கும் பட்டம் வைத்த சங்கதி கசிந்ததாலோ என்னவோ நடுவிலம்மானுக்கு அண்ணனை அவ்வளவாகப் பிடிப்ப தில்லை. செல்லத்தம்பி, செல்லத்தம்பி என என்னுடனேயே விழுந்து விழுந்து சாவார்.

நடுவிலம்மான் சமையல் செய்தாரென்றால் வெறும் பாணையும் அந்த மணத்திலேயே வைத்துச் சாப்பிட்டு விடலாம். அவரது சமையல் என்றதுமே முதலில் நினைவுக்கு வருவது அவர் காய்ச்சும் ஒடியல் கூழ்தான். நெத்தலி, இறால், பயித்தங்காய், பிலாக்கொட்டை எல்லாம் போட்டு ஒடியல் கூழ் வைச்சார் எண்டால் நாலு வளவுகள் தள்ளி நறுவிலியடி வரை கமகமக்கும். இப்படித்தான் ஒரு தடவை அவர் ஒடியல் கூழ் காய்ச்சும் போது தெருவால் சென்று கொண்டிருந்த பழைய வளவுப் பின்புறத்து சிவலை பெண்சாதி படலையைத் திறந்து கொண்டு உள்ளே வந்து அம்மாவைக் கூப்பிட்டு "பாறுவதிப் பிள்ளை நாச்சியார் வளவுக்கை இண்டைக்கேதோ விசேஷம் போலை கிடக்கு" எண்டு கேட்டது எனக்கு இப்ப எண்டாப் போலை கிடக்குது.

அவர் கூழ் காய்ச்சும் போது அதைப் பார்த்துக் கொண்டு பல தடவைகள் பக்கத்தில் அம்மா நின்றிருந்தாலும் அவரைப் போல் கூழ் காய்ச்ச அம்மாவால் இறுதிவரை முடியாமற் போயிற்று. இன்று நான் கேட்டாலும் அம்மா அதைப் பகிரங்கமாகவே ஒத்துக் கொள்வா. "ஒடியல்கூழ் காய்ச்சுறதுக்கும் ஓலை வெட்டிக் கிழிக்கிறதுக்கும் நடுவிலம்மானை வெல்லேலாது" என்பா.

ஒடியல்கூழ் எண்டதும் தான் இன்னொரு விசயமும் எனக்கு நினைவுக்கு வருகுது. ஒடியல் கூழ் காய்ச்ச மரக்கறி, மீன்கள் வாங்கிற துக்கென அம்மா ஒரு நாள் ரவுணுக்கு போக வெளிக்கிட்டா. அழுது





அடம் பிடித்து நானும் அவவுடன் சென்றேன். கிளைப் பனையடியால் திரும்பி வடக்குப் பக்கமாய் நடந்து கொண்டிருந்தோம். காந்தித் தாத்தா சிலையைத் தாண்டும் போது அம்மா என் முதுகைச் சுரண்டி இரகசியமாச் சொன்னா. "பங்கார் அதிலை போற மனுசிதான்ரா நடுவிலம்மான் பெண்சாதி".

நடுவிலம்மான் பெண்சாதி பற்றி மேலும் என்னென்னவோ அம்மா சொல்லிக் கொண்டு வந்தா. ஆனால் எனக்கு இன்னமும் ஞாபகமிருப்பதெல்லாம் பின் கொய்யகம் வைத்து சேலை உடுத்தி எடுப்பாக அவ நடந்து சென்று கொண்டிருந்த காட்சி மட்டும் தான்.

சில நாட்களின் பின்னர் ஒருநாள் பரபரவென ஓடிவந்த அம்மம்மா, அம்மாவைக் குசினிக்குள் கூப்பிட்டு வைத்து ஏதோ குசுகுசுத்துக் கொண்டிருந்தா. போகும் போது "நடுவில் பாவம் யோசிக்கப்போகுது" எண்டு சொல்லிக் கைகளை உதறிக் கொண்டு போனா.

"என்னம்மா? என்ன பிரச்சினை?" என்று கேட்டாள் மாங் கொட்டை விளையாடப் போவதற்கு வெளிக்கிட்டுக் கொண்டிருந்த அக்கா.

"அது ஒண்டுமில்லை, நீங்கள் போய் விளையாடுங்கோ" என்றா அம்மா.

அன்றிரவு படிக்கும் போது, வகுப்பில் பெரியதம்பி வாத்தியார் படிப்பிச்ச ஒரு பாட்டுக்கு பொருள் தெரியாது நான் முழுசிக் கொண்டிருந்தேன். வழமைபோல் நடுவிலம்மான் மேசையடிக்கு வந்தார்.

"இண்டைக்கு படிக்க என்ன இருக்கு?" என்று கேட்டார்.

"ஔவையாற்றை மூதுரையிலை ஒரு பாட்டு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன அது?"

"தீயாரைக் காண்பதுவும் தீதே" என நான் தொடங்கு முன்னரே கண்களை மூடிக்கொண்டு நாலடியையும் அவரே பாடி முடித்தார். "தீயாரோ டிணங்கி யிருப்பதுவும் தீது" என்ற கடைசி வரியை திரும்ப திரும்ப மூன்று நான்கு தடவைகள் சொன்னார்.

சில நிமிடங்கள் மௌனமாக இருந்தார். பின்னர் எதுவுமே சொல்லாது எழுந்து சென்றார். நடையில் வழமையான நிதானம் தெரியவில்லை.

ஐந்தாறு கிழமைகளின் பின்னராக இருக்க வேண்டும்....

ஒரு நாள் பின்னேரம் வழமை போலை நடுவிலம்மான் சாப்பிட்டு விட்டு சாடையாகக் கண்ணயர்ந் திருந்தார்.

மூத்ததம்பி வாத்தியார் வீட்டு முடக்கில் நிற்கும் இலந்தை மரத்தடியில் பொறுக்கிக் கொண்டு வந்த இலந்தைப் பழங்களை அக்காவும் நானுமாக ஆளுக்குப் பாதியாகப் புறித்துக் கொண்டிருந் தோம். தனது பங்கை கையிலிருந்த தையல் பெட்டியைத் திறந்து அக்கா போட்டு மூடும் போது வாசலில் யாரோ வந்து நிற்பது தெரிந்தது.

நிமிர்ந்து பார்த்தோம்.

நாவலப்பிட்டி மாமா நின்றிருந்தார்.

"சின்னவன் எப்பவடா வந்தனீ?" குசினிக்குள் இருந்த அம்மா தடக்கி விழாத குறையாக ஓடி வந்தா.

"மத்தியானம் தான் அக்கை" என்றவாறே கையிலிருந்த பாசலை மாமா என்னிடம் தந்தார். தேயிலைப் பக்கெட்டும், சொக்கலேட், பிஸ்கட்டுகளும் அதற்குள் கிடந்தன.





உரத்துக் கதைத்துக் கொண்டிருந்த மாமாவின் குரல் திடீரென்று தாழ்ந்தது.

"அக்கை நடுவிலம்மானின்ரை விசயமெல்லாம் கேள்விப் பட்டன். அம்மானோடை ஒண்டாக, ஒற்றுமையாக வாழத்தான் விருப்பமில்லாட்டிலும் ஐஞ்சாறு வருஷத்துக்குப் பிறகு அந்த மனுசி இப்படி இன்னொருத்தனோடை ஓடினது எவ்வளவு பெரிய வாழ்மானமாப் போய்ச்சுது. எங்கள் எல்லாருக்கும் தீராத கவலையாகவும் போச்சு. கொஞ்சக்காலம் நடுவிலம்மான் நாவலப்பிட்டிக்கு வந்து என்னோடை இருக்கட்டும். புது இடம் அவற்றை மனதுக்கு கொஞ்சம் ஆறுதலாகவும் இருக்கும். நீ என்ன அக்கை நினைக்கிறாய்?"

"ம்.... எனக்கும் அது நல்ல யோசனை போலத்தான் தெரியுது. நீ கேட்டால் நடுவிலம்மான் மாட்டன் எண்ட மாட்டார் தான். எதுக்கும் ஒருக்கால் கேட்டுப் பாரன்" என்றா.

ஒத்தாப்பினுள் சென்ற நாவலப்பிட்டி மாமா ஒரு மணித்தியா லத்திற்குப் பிறகு சிரித்த முகத்துடன் வெளியே வந்தார்.

"அம்மான் ஓமெண்டிட்டார் அக்கை. வளர்த்த மாடுகளைப் பற்றித் தான் கலைப்படுகிறார் போலை ...." என இழுத்தார்.

"அதுகளை நான் வளர்க்கிறன். வாற வருஷத்தோடை கொத்தானும் ஊரோடை மாற்றலா வாறார் தானே? பிரச்சினை இல்லை" என்றவாறே அம்மா குசினிக்குள் சென்றா.

அநாதையாய் விறாந்தையில் கிடந்த எனது பங்கு இலந்தைப் பழங்களைப் போடுவதற்கு மூடல் எடுப்பதற்காக அம்மாவைத் தொடர்ந்து நானும் குசினிக்குள் நுழைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நாட்கள் கழித்து ஒரு சனிக்கிழமை அன்று......

மாடுகளை மேய்ப்பதற்கோ ஆறுமுகப்பா கடையடிப் பக்கமோ செல்லாது நடுவிலம்மான் ஒத்தாப்பிற்குள்ளேயே முடங்கிக் கிடந்தார். வைக்கோல் போரிலிருந்து ஒரு கத்தை வைக்கோலைப் பிடுங்கி இழுத்து வந்து மாடுகளுக்கு அம்மா பரவி விட்டிருந்தா.

நீண்ட நேரமாகவே நடுவிலம்மான் வெளிப் பாடின்றி இருந்தார். நேரந் தவறாது அவருக்குக் குடுக்கும் தேத்தண்ணி கூட அன்று அம்மா கொடுக்கவில்லை.

பொழுது ஷ்மமலான போது நடுவிலம்மான் உரத்த குரலில் என்னைக் கூப்பிட்டார். அருகிலழைத்து மடியிலிருத்தினார்.

"நீ நல்லா படிச்சு வரோணும். ஐயா அம்மாவின்ரை பெயர் சொல்ல வைக்கோணும்" என்றார். வழமைக்கு மாறாக அவர் வாயிலிருந்து ஏதோ வித்தியாசமான, வயித்தைக் குமட்டுமாப் போல வாடை வீசிற்று.

"செல்லத்தம்பி...... தீயார் குணங்கள் உரைப்பதுவும் தீது" என்று சொல்லியவாறே குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தார்.

எனக்கும் அழுகை வருமாப் போல் இருந்தது.

அம்மா ஓடி வந்தா.

"அம்மான்...... ஆருக்குத் தான் வருத்தமில்லை? என்ன செய்யிறது.... பேசாமல் இருங்கோ..... காலமைக்கு வெள்ளன எழும்பவெல்லோ வேணும்" என்றா.

"செல்லத்தம்பி..... நீ நல்லாப் படிக்கோணும் என்ன?" என்று உச்சியில் முத்தமிட்டு என்னை அனுப்பி வைத்தார்.





வட்டிலில் சோற்றைக் கொண்டு போய் வைத்து விட்டு அம்மாவும் எங்களது அறைக்குள் வந்தா.

"அம்மா நடுவிலம்மான் எப்ப நாவலப்பிட்டிக்குப் போறார்?"

"காத்தாலைக்குப் போறார்"

"பிறகு எப்ப அம்மா வருவார்?"

"ஒவ்வொரு திருவிழாவுக்கும் வருவார்"

"அம்மா இவ்வளவு நல்ல நடுவிலம்மானை ஏன் அந்த மனுசி வேண்டா மெண்டது.... அம்மானுக்கு என்னம்மா குறை?"

"அம்மானிலை என்ன குறை எண்டது தானே மோனை. எங்களுக்கும் விளங்கேல்லை...."

அன்றிரவு நீண்ட நேரமாக அம்மாவை இடித்தபடி பாயில் உழன்று கொண்டிருந்தேன்.

"ம்மா......... ம்மா" என மாடுகள் அழும் சத்தம் இடைவிடாது கேட்டுக் கொண்டிருந்தது.

பதறியடித்துக் கொண்டு எழுந்தேன். உள்ளங்கையிலிருந்த நாணயமொன்று கையைவிட்டு நழுவி உருண்டோடிற்று. குனிந்து அதை எடுத்துக் கொண்டு அறைக்கு வெளியே வந்தேன்.

கழுவிய அரிசியை உரலில் போட்டு அம்மா இடிக்க ஆரம்பித்தா. ஒரு பாட்டம் அழுது முடித்ததில் அவவின் முகம் வீங்கியிருந்தது.

"என்னம்மா இது காசு ஐம்பது சதம். என்ரை கையிலை கிடந்தது?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நடுவிலம்மான் தந்த பயணக்......" வார்த்தைகளை முடிக்காது அம்மா விம்மத் தொடங்கினா.

ஓடிச்சென்று ஒத்தாப்பைப் பார்த்தேன்.

வாங்கிலில் கிடந்த சாக்கு சுருட்டிக் கிடந்தது. அந்த மாந்தோல் சுவரில் தூக்குத் தண்டனைக் கைதிபோல் தொங்கிக் கொண்டிருந்தது. பென்னம் பெரிய சூட்கேஸ் மூடிக்கிடந்த துணிமட்டும் அந்தப் பிய்ந்த கதிரையில் அனாதையாய்க் கிடந்தது.

மேற்குப் புறமாக.... மாட்டுக் கொட்டிலில் மூன்று மாடுகளும் கட்டுக் கொடியை அறுக்குமாப் போல் காலை உதறி உதறி, படலையை நோக்கி "ம்மா.... ம்மா...." எனக் கத்திக் கொண்டு நின்றன.

***(2006)***



# சரவணை

**சரவணை** தான் அவரது பெயரென்பது எனக்கு நல்ல நினைவில் இருக்கிறது. நான் ஆறாம் வகுப்பு படித்த போது எங்கள் வளவிற்குச் சற்று முன்னால் உள்ள எங்களது மேட்டுக் காணியில் ஓலைக் குடிசை அமைத்துக் குடியிருந்தார். வாயில் நுழையாத ஒரு ஊரின் பெயர். அதுவே அவரது சொந்த இடமென அம்மா சொன்னதாக ஒரு ஞாபகம்.

நெடிதுயர்ந்து வளர்ந்த தோற்றம். பச்சை குற்றிய மார்பு. 'சாண்டோ' மாதிரி உடற்கட்டு, பிடரிவரை வளரவிடப்பட்டு வெட்டிய சடைத்த பழுப்பு நிற மயிர். எண்ணெய் வார்த்து எப்போதும் மேவி இழுக்கப்பட்ட தலை. நான்கு முழ வேட்டியை கணுக்கால் தெரியக் கட்டியிருப்பார்.

நான் ஆறாம் வகுப்பில் படித்த போதுதான் சரவணை எங்கள் காணியில் குடியிருந்தார் என நான் அறுதியாகவும் உறுதியாகவும் கூறுவதற்கு மூத்ததம்பி வாத்தியாருடன் தொடர்புபட்ட முக்கிய காரணம் ஒன்றும் இருந்தது. ஆறாம் வகுப்பில் எங்களது வகுப்பு வாத்தியாராக இருந்தவரே மூத்ததம்பி வாத்தியார். அவருக்கு சுத்த சூனியமான ஆங்கிலம், விஞ்ஞானம் தவிர்ந்த மற்றப் பாடங்கள் அனைத்தையும் அவரே எங்களுக்குப் படிப்பித்தார். எங்கள் வளவிற்குக் கிழக்கால் நான்கைந்து வளவுகள் தள்ளி, வண்டில் படலை போட்ட வளவில் இருப்பவர். அப்பு வழியில் உறவுக்காரர். அவர் பின்னேரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதுகளில் சத்தகக் கத்தியும் கையுமாக ஆட்டுக்கு குழைஅறுக்கப் போகும் வழியில் சரவணையுடன் வந்து கதைத்துக் கொண்டிருப்பார். அந்த நேரங்களில் ஆறுமுகப்பா கடைக்குப் போய் தேயிலை, சீனி வாங்கி வரச் சொல்லி அம்மா கேட்டால் நான் மெல்ல மெல்ல அடிவைத்து படலையை அமத்தித் திறந்து எதிரில் இருக்கும் மூத்ததம்பி வாத்தியாரின் கண்களில் 'மண்ணைத் தூவியே' செல்ல வேண்டியிருக்கும்.

குளிப்பதற்கும் சமையலுக்குத் தண்ணீர் எடுப்பதற்கும் சரவணை எங்கள் வீட்டிற்குத்தான் வரவேண்டியிருக்கும். தொட்டி யில் இறைக்கப்பட்டிருக்கும் தண்ணீரில் நான்கைந்து பட்டை தண்ணீரை அள்ளிக் 'காக்கைக் குளிப்பு' குளித்து விட்டு சென்று விடுவார். தொட்டியில் தண்ணீர் இல்லாவிட்டால் கிணற்றடியில் துலா ஓடும் நேரம் பார்த்து வருவார். மற்றபடி எதிரில் இருந்தாலும் எங்கள் வீட்டுப் படலையை ஏறிட்டும் பார்க்க மாட்டார்.

ஐயாவுடன் அவர் வலு வாரப்பாடாய் இருந்தார். ஐயாவுடன் இருந்த ஏதோ ஒரு பழக்கத்தில் தான் தங்களூரில் இருந்து வந்த அவர், எங்கள் காணியில் குடிசை அமைத்திருந்தார். சரவணை என்னை மாஸ்டர் ஆறுமுகம் என்று தான் கூப்பிடுவார். "ஏன் ஐயாவின்ரை பெயரைச் சொல்லி என்னைக் கூப்பிடுறியள்?" என்று கேட்டால், "நீங்கள் மாஸ்டர் ஆறுமுகம், ஐயா மிஸ்டர் ஆறுமுகம்" என்று கூறி காவியேறிய கடவாய் பற்கள் தெரியச் சிரிப்பார்.

அவர் குடியிருந்த காணி ஒண்டரைப் பரப்பிற்குள் தான் இருக்கும். காணியின் நடுக்கொள்ள ஒரு ஒதியமரம் ஊரைத் திண்டு கொழுத்துப் போய் நின்றது. நானும் ரவிச்சந்திரனும் வெறும் நெருப்பெட்டியை கையில் வைத்துக் கொண்டு பொன்வண்டு பிடிப்பதற்கு அந்த மரத்தைச் சுற்றியே வட்டமிடுவோம். காஞ்சனாவின் பெயரை வட்டாரியால் ரவிச்சந்திரன் முதன் முதலில் எழுதிப் பார்த்ததும் அதே ஒதியில் தான்.





சரவணை தன் குடிசையை வலு துப்பரவாகவே வைத்திருப்பார். குடிசை முன்றில் கோலம் போட்டது போல பருமிள், ஊமல், கொக்காரை, பன்னாடை போன்றவற்றைக் காயவிட்டிருப்பார். அது தவிர, ஒரு பூவரமிலைச் சருகைக்கூட முற்றத்தில் காண முடியாதவாறு விளக்குமாற்றால் அழகாகக் கூட்டி வைத்திருப்பார்.

அவர் தானே சமைத்துச் சாப்பிடுவார்.

கூத்தாடுவதிலும் கதை சொல்வதிலும் சரவணை வலு சூரனாக இருந்தார். இடையிடையே இரவு வேளைகளில் உடுக்கடித்தவாறே, அவர் காத்தான் கூத்துப் பாடல்களைப் பாடிக் கொண்டிருப்பார். அவர் பாட ஆரம்பித்தார் என்றால் ஐயா மாட்டுக்கு ஓலை கிழிப்பதையும் பாதியில் விட்டு விட்டு எங்கள் வீட்டுப் படலை வெளிக்குந்தில் குந்திக் கொண்டிருந்து தலையாட்டி ரசிப்பார். மாடுகள் மூன்றும் "ம்மா" சத்தம் எழுப்பி கட்டுக்கொடியை விட்டு எழும்பி நின்ற பிறகுதான் ஓலை கிழித்துத் தும்பாக்காது விட்டது ஐயாவுக்கு நினைவு வரும்.

எங்கள் பழைய வளவுக்குப் பின் புறத்தே சிவலை என்றொரு அண்ணாவியார் இருந்தார். சரவணையின் பாடல் கேட்டு அவரும் இடையிடையே வந்து இணைவதுண்டு. அதிலும் சிவலை செம 'மூட்' டில் இருந்தாரென்றால், கழுமரம் ஏறியபின்தான் இருவரும் உடுக்கை நிலத்தில் வைப்பார்கள். அன்று அயலட்டைச் சனங்களுக் கெல்லாம் சிவராத்திரிதான்.

பின்னேரங்களில் விளையாட்டு முடிந்து வரும் போது என்னை யும் ரவிச்சந்திரனையும் கூப்பிட்டு சரவணை சரித்திரக் கதைகள் எல்லாம் சொல்வார். அப்பூதியடிகள், இளையான்குடி மாற நாயனார், கண்ணப்ப நாயனார் கதைகள் எல்லாம் இன்னும் என் நினைவில் நிற்பதற்கு சரவணை தான் காரணம். கதைகள் சொல்லும் போது அந்தந்த பாத்திரங்களாகவே அவர் மாறிவிடுவார். சிவனின் கண்ணில் இருந்து இரத்தம் பீறிட்ட போது, கண்ணப்ப நாயனார் கூட அப்படிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதை பதைத்திருக்க மாட்டார். "அறுவடை எல்லாம் முடித்துத் தந்தபின் நீ சிதம்பரமென்ன எங்கு வேண்டுமானாலும் போய்வா!" என்ற சொற்கேட்டு நந்தனார் கூட அந்தளவிற்கு கதி கலங்கியிருக்க மாட்டார்.

அப்போது தான் ஒரு நாள் ரவிச்சந்திரன் காதுக்குள் எனக்கு ஒரு இரகசியம் சொல்லி எவருக்கும் சொல்ல வேண்டாம் என்றும், குறிப்பாக மூத்த தம்பி வாத்தியார் வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் சாவித்திரிக்குத் தெரியவே கூடாது என்றும் கூறி சத்தியமும் வாங்கிக் கொண்டான். அப்படி மீறி ஆருக்காவது தெரிய வந்துதெண்டால் என்ரை நாக்கு அழுகும் என்றும் எச்சரிக்கை செய்திருந்தான். மூத்ததம்பி வாத்தியாருக்கு நாயன்மார் கதைகள் எல்லாம் சொல்லிக் கொடுப்பது சரவணைதானாம். அதைக் கேட்டுப் போட்டு வந்து தான் வாத்தியார் வகுப்பிலை எங்களுக்கு 'றீல்' விடுகிறவராம்.

எனக்குக்கூட அப்படி ஒரு சந்தேகம் மனதில் இருந்தது உண்மை தான். அப்பூதியடிகள் வீட்டில் அப்பர் சுவாமிகள் விருந்துண்ண வந்த போது, அடிகளாரின் மகன் அரவந்தீண்டி மாண்டு கிடப்பான். அப்போது அப்பர் சுவாமிகள் மகன் எங்கே என்று வினவியபோது அப்பூதியடிகளார் "அவன் இப்போ உதவான்" என்று கூறுவார். கதையை இடைநிறுத்திய சரவணை ரவிச்சந்திரனைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார், "அப்பூதியடிகள் அப்படிக் கூறியது எதனால்?" அப்போது ரவிச்சந்திரன் வாயைப் பிளந்தபடி ஒதிய மரத்தில் பறந்த பொன்வண்டையே பராக்குப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அடுத்த நாள் சமய பாட நேரத்தில் அந்தப் பாடத்தைப் படிப்பித்துக் கொண்டிருந்த மூத்ததம்பி வாத்தியார் கதையை இடைநிறுத்தி அதே கேள்வியைத் தான் தங்கராஜனைப் பார்த்துக் கேட்டார். இலவசப் 'பணிசை' எதிர்பார்த்துக் கொண்டிருந்த தங்கராஜன், வாத்தியார் என்ன கேட்டார் என்று புரியாமல் பரக்கப்





பரக்கப் முழுசிக் கொண்டிருந்தான். அதனால், அன்று சமயபாடம் முடியுமட்டிலும் அவன் முட்டுக்காலில் நிற்க வேண்டியதாயிற்று.

"சரவணை என்ன வருமானத்திலை அப்பா சீவிக்கிறார்?" என ஒருநாள் இரவு அம்மா, ஐயாவைக் கேட்கும் போது நான் நித்திரை குழம்பிய நிலையில் பாயில் படுத்திருந்தேன்.

"அது தானே ரவுணிலையிருந்து ஒவ்வொரு கிழமையும் வந்து மோன் காசு குடுத்துட்டுப் போறான்" என ஐயா கூறிய கையோடு அம்மா கேட்ட அடுத்த கேள்வி அரையும் குறையுமாக எனது காது களில் விழுந்தது.

பொன்வண்டு பிடித்துக் களைத்த ஒரு பொழுதில் ஆறுமுகப்பாவின் கடைப்பக்கம் சரவணை சென்ற இடையில் நானும் ரவிச்சந்திரனும் அவரது குடிசையை கிடுகுப்படலைக்குள்ளால் எட்டிப் பார்த்தோம். பனம்பாத்தியில் ஊமல் பறித்த பின் பாத்திகட்டிவிட்டு விடுமாப் போல் குடிசையை இரண்டு பகுதிகளாகப் பிரித்து வைத்திருந்தார். மண்ணடுப்பு, அதன் பக்கத்தில் கைவிளக்கு, எரிவதற்கு தயார் நிலையிலுள்ள காவோலைச் சிறகுகள் மற்றும் பனம் மட்டைகளுடன் பின்புறமும், சாணத்தால் வடிவாக மெழுகப்பட்டு வடலி ஓலை மட்டையால் வரியப்பட்டு முன்புறமும் இருந்தது. முன்புறத்தில் பெரும்பகுதியைக் கள்ளிப்பெட்டி ஒன்று விழுங்கிக் கொண்டிருந்தது. கள்ளிப்பெட்டிக்கு மேல் பாய்களும் தலையணி களும் பொட்டளிகளும் ஒண்டை ஒண்டு தள்ளிவிழுத்துவதற்குத் தருணம் பார்த்துக் கொண்டிருந்தன.

"டேய்... அந்தக் கள்ளிப் பெட்டிக்குள்ளை என்னடா வைச்சிருப்பர்?" ரவிச்சந்திரன் குசுகுசுத்த குரலில் எனது முதுகைச் சுரண்டினான்.

"அதைப் பற்றித்தான்ரா நானும் யோசிக்கிறன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உடுப்புக் கிடுப்பு, தட்டுமுட்டுச் சாமான்கள் ஏதாவது வைச்சிருப்பாரோடா?"

"ஏன் அப்படி நினைக்கிறாய்?"

"பங்கார் உற்றுப் பாரடா மாங்காப் பூட்டு போட்டு பூட்டியிருக்கிறார். ஐமிச்சமில்லை, தட்டுமுட்டு சாமான்கள் தான் வைச்சிருக்கிறார்."

வேறு வழியின்றி நான் ஓணான் மாதிரி தலையாட்டியபோது எங்கள் வளவுக் கிணற்றடியிலிருந்து அம்மா என்னைக் கூப்பிட்டுக் கொண்டிருந்தா.

சரவணையிடம் ஒரு பழக்கம் இருந்தது. அடிக்கடி வளவில் கண்டாயம் இருக்கும் இடத்தை மாற்றிக் கொண்டிருப்பார். மேற்குத் திசையில் அலம்பல் வேலிப்பக்கமாக இருந்த கண்டாயம் சில நாட்களின் பின் நடுவில், சீமைக் கிளுவைகளுக்கு இடையிலும் இன்னும் கொஞ்ச நாட்கள் செல்ல கிழக்கே கம்பி வேலிப்பக்கமாகவும் இருக்கும். பிறகு மீண்டும் அலம்பல் வேலிப் பக்கமாகத் திடீரென்று முளைத்திருக்கும். எங்கள் வீட்டில் கூட ஏதாவது அடிக்கடி மாற்றப்பட்டிருந்தால் "என்ன, சரவணை கண்டாயம் மாத்தினது மாதிரி அடிக்கடி மாத்திக் கொண்டிருக்கிறியள்?" என்று அம்மா ஏசுவா. பாவம் அண்ணன்தான் அடிக்கடி அம்மாவிடம் அப்படிப் பேச்சு வாங்குவான்.

அது தவணை விடுமுறையில் ஒரு நாளாக இருக்க வேண்டும். நானும் ரவிச்சந்திரனும் எங்கள் வீட்டுப் படலையடியில் கிட்டியும் புள்ளும் விளையாடிக் கொண்டிருந்தோம். அப்போது செருப்பு ஒலி எழுப்ப வெள்ளை வெளேரென்று வேட்டி சட்டையுடன் தெருவழியே விறுவிறுவென வந்த ஒருவர் சரவணையின் குடிசைக்குள் நுழைந்தார். வஞ்சகமில்லாத வளர்த்தி, வாலிபத் தோற்றம்.





பத்து நிமிடமும் சென்றிருக்காது. படபடவென்று கதைத்துக் கொண்டிருந்த அவர் வேறு உடையுடன் கிழக்குப் பக்கமாகச் சென்று கொண்டிருந்தார். சரை ஒன்றை கையில் காவியவாறே சிறிது நேரத்தில் குடிசையிலிருந்து வெளிப்பட்ட சரவணை எங்களைப் பார்த்துச் சொன்னார். "உவர்தான் என்ரை ஒரே மகன். ரவுணிலை வேலை பார்க்கிறார். ஒவ்வொரு புதனும் அவருக்கு லீவு. காலமையிலை என்னட்டை வந்தால் இனி சாப்பிட்டுக் கீப்பிட்டு ஆறுமணி பஸ்ஸைப் பிடிச்சுத் தான் போவார்."

சரவணை குடிசைக்குள் போனது தான் தாமதம் ரவிச்சந்திரன் என்னருகே வந்தான்.

"டேய் உந்தாளை எனக்கு முன்னமே தெரியும்."

"என்னெண்டு?"

"கிளைப்பனையடி மதகிலை இடைக்கிடை காணுறனான்."

"விசர்க்கதை கதைக்காதை. இவை இஞ்சை இருக்க வந்த அஞ்சாறு மாதங்களுக்கை இண்டைக்குத்தான் எனக்கே ஆளைத் தெரியுது. நீ எப்படியடா காண்பாய்?"

"இல்லை, இப்ப கொஞ்ச நாளா நான் காண்றனான்" என்றவாறே கிட்டியால் எங்கள் வீட்டுத் தகரப்படலையில் ரவிச்சந்திரன் ஓங்கி அடித்தான்.

இப்பேர்ப்பட்ட சமாச்சாரங்களில் ரவிச்சந்திரனுக்கு வேகம் அதிகம் என்பதை ஏற்கனவே நான் அறிந்து வைத்திருந்ததால் மேலும் கதையை வளர்த்து என் மீதும் கிட்டிபடும் ஆபத்திலிருந்து நான் விலகிக் கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன், அன்றைய ஆட்டமும் நிறைவு பெற்றது. அதற்கு மேலும், விளையாடினால் 'அழாப்பல் ரவிச்சந்திரன்' என்ற தனது பட்டப் பெயரை உறுதிப்படுத்தி விடுவான் என்ற பயமும் எனக்கு உள்ளூர இருந்தது.

மறுநாள் காலையில் முகங் கழுவிய கையோடு வேர்க்க விறு விறுக்க வந்த ரவிச்சந்திரன் படலையடியில் நின்றவாறே எனது பெயரை உரக்கக் கூப்பிட்டான். "கூட்டாளி இண்டைக்கென்ன கருக்கலோ டையே வந்திட்டார். அவ்வளவு விளையாட்டுக் கம்மக்கை" அடுப்படிக்குள் இருந்தவாறே அம்மா முணுமுணுத்தா.

வழமையாக விளையாட வந்தால் நான் போகுமட்டிலும் சரவணை இருக்கும் காணியின் முன்புற வேலியிலுள்ள சீமைக் கிளுவைக் கதியால்களுக்குக் கிட்டியால் மந்திர வித்தை காட்டிக் கொண்டிருப்பவன் இன்றேன் வாய்கிழியக் கத்துகிறான் என்று எண்ணியவாறே காற்சட்டைக்குப் பொத்தான் கூடப் பூட்டாமல் இழுத்துக் கட்டிக் கொண்டு நான் படலையடிக்கு ஓடினேன்.

"டேய்..... நேற்று நான் சொன்னன். நீ கேட்கேலைப் பாத்தியே" என்றான் வலது கையை நீட்டியவாறே.

"ஏன்ரா என்ன சங்கதி?"

"அந்தாளை நேற்றும் கிளைப்பனை மதகடியிலை கண்டன்."

நான் எதுவுமே கூறாது அவனையே உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றேன்.

மூக்கால் வழிந்த சளியைப் புறங்கையால் துடைத்து காற் சட்டையில் பிரட்டியவாறே ரவிச்சந்திரன் தொடர்ந்தான். "மதகிலை ஆள் மண்டிக் கொண்டு இருந்தார். கிடுகு வேலிக்குப் பிறகாலை நிண்ட யாரோடையோ கதைச்சுக் கொண்டு நிண்ட மாதிரிக் கிடந்தது.





என்னைக் கண்டதுந்தான் தாமதம் பேச்சுப் பறைச்சல் சத்தமே இல்லாமல் இருந்தது. அந்தாள் குந்தியிருந்து கொண்டு பொக்கற்றுக்குள்ளை இருந்த பீடிக்கட்டிலை ஒரு பீடியை எடுத்து பத்த வைச்சுக் கொண்டிருந்துது. ஆளளவு உயரத்துக்கு வேலியும் முன்னுக்கு பாவட்டம் புதர் மண்டிக்கிடந்ததிலையும் அங்கால்ப் பக்கம் நிண்ட ஆளை மட்டுக்கட்டேலாமல் கிடந்துது."

இப்படியான சங்கதிகளில் ரவிச்சந்திரனுக்கு இருந்த அக்கறையும் ஆர்வமும் படிப்பில் இருந்திருந்தால் மூத்ததம்பி வாத்தியார் பிரம்பு கொண்டு திரிய வேண்டிய அவசியமே இல்லாமல் இருந்திருக்கும். பாவம் லீவு விடுறதுக்கு இரண்டொரு நாளைக்கு முந்திக்கூட மனக் கணக்குப் பாடத்திற்கு காற்சட்டை கிழிய அடிவாங்கினான்.

"மூத்ததம்பி வாத்தியார்ப் பிள்ளை அடிக்கில் எல்லாருக்கும் ஒரே மாதிரி அடிக்க வேணும். அவரென்ன எங்களுக்குக் காற்சட்டை கிழிய அடிச்சுப் போட்டு பெட்டையளுக்கு உள்ளங்கையிலே மெல்லமாய்த் தட்டுறது?" என்ற ஒரு முறைப்பாடு எழும்பக் காரணமாக இருந்தது கூட அன்று அவன் வேண்டியது அகோர அடி தான்.

ஓரிரு நாட்களின் பின்னர்...

தன்னுடைய மனைவியின் திவசமெனச் சொல்லி சரவணை பொங்கலும் வடையும் செய்து படைத்தார். நாங்கள் அந்த நேரம் அங்கு வாய் பார்த்துக் கொண்டு நின்றதில், பூவரசம் இலை இரண்டை ஆய்ந்து எனக்கும் ரவிச்சந்திரனுக்கும் ஆளுக்கு ஒரு அகப்பை பொங்கலும் இவ்விரண்டு வடையும் தந்தார். நாங்களும் ஆவி பறக்கும் பொங்கலையும் சுடச்சுட வடையையும் சாப்பிட்டு விட்டு ஏவறை விட்டவாறே வீட்டுக்குச் சென்றோம். "எங்கடை வீட்டில கூட இப்படி உருசையா வடை சுட மாட்டினம்" என கண்டாயத்தால் கடக்கும் போது எனது வலது கையைப் பிடித்தவாறே ரவிச்சந்திரன் சொன்னான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் வட்டிலில் போட்ட முழுச் சோற்றையும் தின்ன முடியாது நான் வில்லங்கப்பட்டுக் கொண்டிருந்த போது "ஏன்ரா எங்கை சாப்பிட்டனீ?" என்று அம்மா கேட்டா.

"சரவணை புக்கையும் வடையும் தந்தவரம்மா" என்று நான் திறந்த வாய் மூடு முன்னரேயே...

"நாசமறுப்பானே..... அங்கை வேண்டித் திண்டனியோடா?" என்ற அம்மாவின் சத்தமான குரல் கேட்டு ஐயா அடுப்படிக்குள் நுழைந்தார்.

"என்னப்பா சன்னதம் பத்துறாய் என்ன பிரச்சினை?"

"உவன் சரவணை வீட்டிலை மூக்கு முட்டத்திண்டுட்டு வந்திருக்கிறானாம். வாய் திறந்து சொல்லுறான்."

"அதுக்கேன் இப்ப உயிர்போற போலை கத்துறாய்?"

"அதுக்கென்னவோ? எங்கையெங்கை கை நனைக்கிறதெண்டு ஒரு..."

"சும்மா இரப்பா... பிள்ளையளுக்கு உதுகளைப்பற்றி ஒண்டும் சொல்லக் கூடாதெண்டெல்லோ உனக்குச் சொன்னனான்..."

அதன் பின்னர் அம்மா அமைதியாகிவிட்டா.

அடுத்த நாள், ரவிச்சந்திரன் தனது முதுகைப் பார்க்கும்படி எனக்குக் காட்டினான். பூவரசம் கம்பு ஆழமாகப் பதிந்த அடையாளம் தெரிந்தது.

"இனி சரவணை வீட்டுப் பங்கம் கண்டனோ முதுகுத்தோல் தான் உரிப்பன் எண்டு அப்பர் சொன்னார். அப்பராம் அப்பர். அறுவான், நாம்பன் மாட்டுக்கு அடிச்ச மாதிரி தோலுரிய இப்படியே அடிக்கிறது" என்றான். அப்போது அவனது குரல் கம்மிப் போய் இருந்தது.





சரவணையிடம் நாங்கள் புக்கை வாங்கித் திண்டது ஊரெங்கும் பரவியிருக்க வேண்டும். ஆறுமுகப்பா கடையடியிலை வைச்சு ஆதவன் அண்ணா ஆக்கள், "இனி சரவணை வீட்டிலை ஏதாவது விசேஷமெண்டால் எங்களுக்கும் சொல்லுங்கோடா தம்பியவை" எண்டு ரவிச்சந்திரனுக்குச் சொல்லியிருக்கிறார்கள். அடுத்த நாள் அழுவாரைப் போல் என்னிடம் வந்து அவன் சொன்னான்.

அதன் பிறகு, எங்கள் வீட்டுப் படலையடியில் விளையாடிய கையோடு ரவிச்சந்திரன் சென்று விடுவான். "வடிவான பொன்வண்டு ஒண்டு பறக்குது. பிடிப்பம் வா" என்று கேட்டாலும் "ஆளை விடடாப்பா" என்று அடிக்குரலில் சொல்லி அவன் 'பறந்து' விடுவான்.

ஏதோ நேர்த்திக்கடன் கழிக்கவென ரவிச்சந்திரனின் குடும்பம் ரத்தினண்ணனின் கார் பிடித்துக் கொண்டு பெருமாள் கோயிலுக்குப் பொங்கப் போனார்கள். என்னையும் வரச்சொல்லி வீட்டில் வந்து கேட்டதில் நானும் அவர்களுடன் சென்றேன். பொங்கல் எல்லாம் முடிந்து மடத்தில் தங்கியிருந்து விட்டு திரும்பி வர பொழுது மைமலாகிவிட்டது.

அந்நேரம், தங்களது வீட்டில் இருந்து தனியாக என்னை அனுப்பி வைப்பது சரியில்லை என்று சொல்லி எங்கள் வீடுவரை என்னைக் கொணர்ந்து விடுவதற்காக ரவிச்சந்திரனின் தகப்பன் என்னுடன் வந்தார். சாவித்திரி வீட்டடியில் வரும்போது எங்கள் வீட்டுப் படலையடியிலும் சரவணையின் குடிசையின் முன்னாலும் தீர்த்தக்கரை மாதிரி சனங்கள் குழுமி நிற்பது தெரிந்தது. சத்தமாக ஏதோ பேசிக் கேட்டது. வேகமாக முன்னேறிச் சென்றோம்.

அங்கு குழுமி நின்றவர்கள் கிளைப்பனையடியில் இருப்பவர்கள் என்பதை அண்மித்தபோதுதான் அவதானித்தேன். பெரும்பாலும் இளந்தாரிகளே நின்றார்கள். கையில் பொல்லு, கொட்டன்களுடனும் முகத்தில் கடுங்கோபத்துடனும், சரவணையை நிற்க வைத்து ஏதோ கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார்கள். எனது ஐயா சரவணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கமாக நின்று கிளைப்பனை ஆட்களுக்கு அமைதியாக என்னவோ சொல்லிக் கொண்டிருந்தார். சரவணையைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

என்னைக் கண்டதும் வளவிற்குள் செல்லுமாறு ஐயா புறங் கையால் சைகை காட்டினார்.

உள்ளே சென்றதும் சேட் கூடக் கழற்றாமல், "என்ன சண்டை அம்மா முன்னுக்கு?" என்று கேட்டேன்.

"அது ஏதோவாம். அது சரி எப்பிடி பெருமாள் கோயில்?" என்ற வாறே அம்மா நான் போட்டிருந்த கை முட்டச் சட்டையைக் கழற்ற உதவினா.

"ஆறுமுகம் அவனுக்கு மண்டை கிழிச்சிருப்பம். உனக்காண்டி விட்டுட்டுப் போறம். இனிமேற்பட்டு, அவனுக்கு குடியிருக்கிறதுக்கு நிலம் குடுத்தியோ நடக்கிறது வேறை" உச்சஸ்தாயியில் ஒரு குரல் ஒலித்தது. எனக்குக் கொஞ்சம் பயமாகக் கூட இருந்தது.

கம்புச்சத்தம் கேட்கக்கூடாதென்று ஊரிலுள்ள தெய்வங்களை எல்லாம் மனதில் வேண்டினேன். "நறுவிலி வைரவருக்கு சக்தி கூட" என்று அம்மா அடிக்கடி சொல்லுவாவே...

"வைரவா... வைரவா" என்று வாயில் முணுமுணுத்தேன். சிறிது சிறிதாகச் சத்தம் ஓயவே... ஐயா உள்ளே வந்தார்.

வீட்டில் ஐயாவும் அம்மாவும் அதைப் பற்றி ஏதாவது கதைக்க மாட்டார்களா என்று அங்கலாய்த்துக் கொண்டிருந்தேன். ஓலை தும்பாக்கி மாடுகளுக்கு போட்டு கைகால் அலம்பி சாப்பிட்டுட்டு படுக்கும் வரை இடைக்கிடை ஐயா தும்மும் சத்தம் மட்டுமே கேட்டுக் கொண்டிருந்தது.





முளித்திருந்து பயனில்லை என்பது உறுதியாகவே இறுகக் கண்களை மூடிக்கொண்டு பாயில் உழன்று உழன்று நித்திரையாகி விட்டேன்.

அடுத்தநாள், ரவிச்சந்திரனின் வரவை நோக்கி ஆவலுடன் வீட்டுப் படலையடி வெளிக்குந்தில் காவலிருந்தேன். சரவணையின் குடிசைப் படலை சாத்தி பனங்குற்றி ஒன்றினால் முண்டு கொடுக்கப் பட்டிருந்தது.

ஒழுங்கையின் எத்தத்தில் சாவித்திரி வீட்டடியில் ரவிச்சந்திரன் வேகமாக வருவது தெரிந்தது. அந்த நொடியில் என்னையும் அறியாது எழுந்து சென்றேன். முதல்நாள் பெருமாள் கோயிலில் வாங்கிய கடதாசிக் காற்றாடியை கையில் நீட்டிப் பிடித்துக்கொண்டு பூவரசம் இலையால் செய்த குழலை வாயில் வைத்து ஊதியவாறே அவன் என்னை நோக்கி ஓடி வந்தான்.

என் அருகில் வந்ததும் 'சடின் பிறேக்'கில் நின்றவன், குழலை வாயிலிருந்து எடுத்து, இளைத்திளைத்தவாறே கேட்டான்.

"விசயம் கேள்விப்பட்டியோடா?"

"அது தான்ரா நீ வருமட்டிலும் காவலிருக்கிறன். என்ன நடந்தது? வீட்டிலை ஒரு சனமும் மூச்சுக் கூட விடுதுகள் இல்லை."

"ஏன் எல்லாஞ் செத்துப் போச்சுதுகளோ?"

"பகிடியை விட்டுட்டு விசயத்தைச் சொல்லன்ரா"

"கிளைப்பனை மதவடி முடக்கு வளவு அக்காவை, முந்த நாள் ராத்திரியிலையிருந்து காணேலையாம். சரவணையின்ரை மோனோடை. அம்மையப்பரின்ரை ஊர்ப்பக்கம் கண்டதாக வண்டில்கார வடிவேலண்ணன் நேற்று மைமலுக்கை வந்து சொல்லியிருக்கிறார். அது தான் நடந்த பிரச்சினை."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரவணை வீட்டுப் படலையும் வெளியாலை தெண்டிச் சாத்திக் கிடக்குதடா. அங்கை திரும்பிப் பார்."

ரவி என்னையும் சரவணையின் குடிசையையும் மாறி மாறிப் பார்த்தான். பின்னர் பூவரசம் இலை குழலை வாயில் வைத்தவாறே "பிப்பிப்பீ" ஊதினான். எனக்கு வந்த எரிச்சலுக்கு அவனது வாயிலிருந்த குழலை பிய்த்தெறிய வேண்டும் போல இருந்தது.

"சரவணை திரும்பி ஊருக்கை வருவார் எண்டு இனி நான் நினைக்கேல்லை" கையில் வைத்திருந்த காற்றாடியை நீட்டியவாறு என்னை ஒரு சுற்று சுற்றி ரவிச்சந்திரன் சொன்னான்.

அந்த வர்ணக் காற்றாடியும் எனது தலையும் வேகமாகச் சுற்றின.

எங்கள் படலையடி வெளிக்குந்தில் போய் இருந்தேன்.

"வாடா விளையாட" என்றான் ரவிச்சந்திரன்.

"எனக்கு இண்டைக்கு ஏலாதடா. நாளைக்குப் பார்ப்பம்" என்றவாறே எழுந்து உள்ளே சென்றேன். தெருப் புழுதியைக் கிளப்பிய வாறே வந்த வேகத்தை விட கூடிய வேகத்தில் ரவிச்சந்திரன் திரும்பிச் சென்றான்.

சரவணை திரும்ப வருவாரா? என்று எவரிடமாவது கேட்க வேண்டும் போலிருந்தது.

சிவனின் மறு கண்களிலிருந்தும் இரத்தம் பீறிடுவது போலவும் சரவணை தனது காலைத் தூக்கி சிவனின் கண்ணில் அப்புவது போலவும் அன்றிரவு முழுவதும் கனவுகள் வந்தன. நித்திரை குழம்பி பாயில் உழன்றேன். பக்கத்தில் அண்ணனும் அக்காவும் மூசி மூசி நித்திரை கொண்டு கொண்டிருந்தார்கள்.





தெருப்பக்க ஜன்னலை இந்நேரம் பார்த்து யார் திறந்து விட்டது? எங்கும் புகை மண்டலம். பார்வதியும் சிவனும் வானத்தில் தோன்றி ஞானசம்பந்தருக்கு ஞானப்பால் கொடுத்தார்களாமே... அது போல அந்தப் புகைமண்டலத்தில் சரவணை தோன்றுவதும் மறைவது மாக... ஒரே பிரமை. பயப் பிராந்தி. கண்களை இறுக்கி மூடிக் கொண்டேன்.

கண்களைத் திறந்தபோது ஜன்னல் பக்கமாக ஆரவாரச் சத்தங் கேட்டது. ஆதவன் அண்ணா வீட்டுப் புகையிலைத் தீராந்தியில் புகைக்கும் போது எழும் மணத்தை போல ஏதோ நாசி வழி ஏறிற்று.

"அம்மா" என்றேன்.

சத்தமில்லை.

மீண்டும் கூப்பிட்டேன். அம்மாவையோ ஐயாவையோ காண வில்லை. இந்த அண்ணன் அக்காவைக் கூடக் காணவில்லையே?

ஜன்னலால் எட்டிப் பார்த்தேன். பொழுது முற்றாகவே விடிந்திருந்தது.

எங்கள் படலையடியில் பலர் குழுமி நிற்பது தெரிந்தது. படலையை நோக்கி ஓடினேன். திடலடிக்கு 'வெளிக்குப்' போகும் ஆதவனின் ஐயா சுருட்டுப் பிடித்தபடி சென்று கொண்டிருந்தார்.

சனங்கள் சரவணையின் குடிசைப் பக்கமாக 'அற்றேன்ஷனில்' நின்றார்கள். மேட்டுக் காணி ஒரே புகை மண்டலத்துள் மூழ்கிக் கிடந்தது. சீமைக் கிளுவைகள் எல்லாம் வாடி வதங்கிப் போய் இலைகளைத் தொங்கப் போட்டுக் கொண்டு நின்றன.

தெருவில் இறங்கி காணிக்குள் நுழைந்தேன். ஐயாவும், அம்மா வும் கூடவே அண்ணன் அக்காவும் ஒதிய மரத்தடியில் நின்றார்கள். அந்தக் குடிசை இருந்த இடத்தையே அடையாளம் காண முடியாத படி ஒரே சாம்பல் மேடாகக் காட்சியளித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவணை அடிக்கும் உடுக்கு உருகி உருக்குலைந்து போய்க் கிடந்தது.

அந்தக் கள்ளிப் பெட்டியின் மேல் சாம்பல் கும்பி கும்பியாகக் குவித்து கிடந்தது. பெட்டிக்குள்ளிருந்தும் புகை கக்க ஆரம்பித்தது. மாங்காப் பூட்டு மட்டும் கொழுக்கியில் இன்னமும் அப்படியே இறுகத் தொங்கிக் கொண்டிருந்தது.

எங்கள் வீடு சென்று கடகப் பெட்டி ஒன்றுடனும் சுத்தியல் ஒன்றுடனும் திரும்பி வந்த ஐயா அந்தப் பூட்டை உடைத்தார். கள்ளிப் பெட்டிக்குள் இருந்தவற்றை ஒவ்வொன்றாக வெளியில் எடுத்தார். அரிச்சந்திர புராணம், அறுபத்து மூன்று நாயன்மார் சரித்திரம், சங்கரதாஸ் சுவாமிகள் பாடல்கள் என புத்தகங்கள் பல குவிந்தன.

எல்லாவற்றையும் கடகப் பெட்டிக்குள் போட்டு பெட்டியைத் தூக்கினார் ஐயா.

"ஆறுமுகம் எல்லாத்தையும் அப்படியே எரியவிடு. அதைக் கொண்டு போய் அவனட்டைக் குடுக்கப் போறியோ?"

யாரோ குரல் கொடுத்தார்கள். காது கிழியச் சத்தம் போட்டார்கள். கூக்குரலிட்டார்கள். ஐயா எதுவுமே பேசாது ஒரு வன்மத்துடன் பெட்டியைத் தோளில் சுமந்தவாறே வீட்டிற்குள் நுழைந்தார். அம்மாவும், அண்ணாவும், அக்காவும் பின்னால் சென்றார்கள். அவர்களை முந்திக்கொண்டு நான் சென்றேன்.

அந்தப் புத்தகங்கள் யாவும் ஐயா இறக்குமட்டிலும் அவரது புத்தகங்களுடனேயே சங்கமித்திருந்தன.

***(2005)***



# பிறந்த நாள்

இன்று இவனது பிறந்த நாள்.

"நீர் கிறிஸ்மஸ் பேபியா? யூ ஆர் றியலி லக்கி போய்" என்று எல்லோருமே இவனைப் பார்த்துச் சொல்வார்கள். இவனுக்குச் சற்று பெருமையாகத் தான் இருக்கும்.

வெள்ளை பாண்ட், வெளுத்த சேட், சவரமிடப்பட்ட சுத்த முகம். இந்த 25 வயதிலேயும் ஒரு கல்லூரி மாணவனைப் போலவே கம்பீரத்துடன் இவன் காட்சியளித்தான்.

இன்று நத்தார் தினம். ஆனாலும், இன்றும் காரியாலயம் செல்ல வேண்டியதாக இவனது டியூட்டி றோஸ்டர். 'சீ.... இண்டைக்கு மெட்னி ஷோ போனனெண்டால் நல்லா என்ஜோய் பண்ணலாந் தான்' என அங்கலாய்த்தவாறே, சுவர்க் கண்ணாடியில் சிகையலங் காரத்தை இறுதித் தடவையாக உறுதி செய்து கொண்டு "றூம் மேற்" றிடம் விடை பெற்றவாறே படியிறங்கித் தெருவுக்கு வருகிறான்.

"நம்பர் செவண்காரர் செக்ஸிலை கொஞ்சம் பலவீன மானவர்களாக இருப்பார்களாம்" இவனது நண்பன் ஒருவன் சில நாட்களுக்கு முன்னதாக இவனுக்குச் சொன்னான். "அதைப் பற்றி எல்லாம் மச்சான் எனக்கொண்டுந் தெரியாது. ஆனால், அடியேன் அதிலை கொஞ்சம் 'வீக்' கானவன் அவ்வளவுதான்" என்று இவன் பதில் சொன்னான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'செக்ஸ் என்பது மிகவும் புனிதமானது. அது வாழ்க்கையின் ஓர் அங்கம். அதை உரிய வயதிலேயே அறிவுபூர்வமாக அனுபவிக்க வேண்டும். கல்யாணத்தைச் செய்ய வேண்டிய வயதிலேயே முடிக்க வேண்டும். காலந்தாழ்த்தினால் அதிலே சுவை இருக்காது' இப்படியாக ஒரு துணுக்கை அண்மையில் ஏதோ ஒரு சஞ்சிகையில் படித்த போது, இவனுக்குச் சிரிப்பாக இருந்தது.

இளமைக்கு வடிகால்களாக எத்தனையோ வழிமுறைகள் இருக்கும் போது, இந்த 25 வயதுகளில் கல்யாணத்தை முடித்து மாரடிக்க இவன் தயாராக இல்லை.

முச்சந்தியைத் தாண்டி இப்போ இவன் காலி வீதிக்கு வந்து விட்டான். வழமைக்கு மாறாக வீதியில் சன நடமாட்டம் சற்றுக் குறைவாகவே இருந்தது. எந்தப் பெண்களையுமே காணவில்லை. 'என் அதிர்ஷ்டம் இன்று அவ்வளவு தான். சந்தி வரையாவது நடந்து பார்ப்போமே. ஏதாவது சந்திக்குதா எண்டு.' ஆதங்கப்பட்டவாறே வெள்ளவத்தை சந்திப் பக்கமாக நடையைக் கட்ட ஆரம்பித்தான்.

நடந்து செல்லும் போதே இவனைத் தாண்டி சில மினிபஸ்கள் ஆறுதலாகச் சென்று கொண்டிருந்தன. சகல பஸ்களுமே ஆட்கள் குறைவாக. ஆரம்ப காலங்களில் ஐதான பஸ்களில் ஏறி கோணர் சீற்றில் அமர்ந்து வெளியில் 'வாய் பார்த்தவாறே' போகும் பழக்கம் இவனிடம் இருந்திருந்தாலும்..... இப்போதெல்லாம் நெருக்கமாக வரும் பஸ்களையே இவன் விரும்புகிறான்.

"மச்சான், நெருக்கமாக, சன நெரிசலோடை வாற பஸ்களிலை ஏறினால்தான் இதம் பேசும். உரசல் சுகங்களும், பஸ் 'பிரேக்' போடும் இடங்களில் கிடைக்கும் உராய்வுகளும் அப்பப்பா... .... உண்மையில் குறைந்த செலவிலேயே சொர்க்கத்தைக் காணலாம்" என அண்மையில் நண்பன் ஒருவன் அளித்த 'அட்வைஸ்' களின் விளைவே... ஐதாக வரும்





பஸ்களையெல்லாம் கோட்டை விடுத்து, நெரிசலாக வருகிற பஸ்களுக்காக மணிக்கணக்கில் இவன் காவல் நிற்க ஆரம்பித்தான்.

பெண்களில் ஒரு மர்மம், ஒரு கவர்ச்சி, ஒரு இனிமை இருப்ப தாக எங்கேயோ இவன் படித்திருக்கிறான். மர்மம் இருக்கிறதோ என்னவோ இவனைப் பொறுத்தவரை பெண்களில் கவர்ச்சி, இனிமை இவைகளெல்லாம் அதிகம் இருப்பதாக உணர்ந்தான்.

ஆனாலும் கூடப் பணி புரியும் பெண்களில் இவன் ஒரு மதிப்பு வைத்தே பழகி வந்தான், சமயங்களில் அவர்களிடமும் தனது ரசனையை காட்டத் தவறுவதில்லை. இப்படித்தான்... அண்மையில் சக 'ஸ்டாப்பாக' பணிபுரியும் ஒருத்தியிடம் "மிஸ் உங்களை இந்த ஸ்கேட் பிளவுசோடை பார்க்கைக்குள்ளை நக்மா மாதிரி இருக்கு" என்று கூறி முறையாக வாங்கிக் கட்டிக் கொண்டான். அதன் பிறகு எந்தப் பெண்களிடமுமே சற்று நிதானமாகவே பேசப் பழகக் கற்றுக் கொண்டான்.

நெல்சன் பிளேசையுந் தாண்டி வெள்ளவத்தை பஸ் நிலையத் தடிக்கு வந்தவன், காலை ஆகாரத்தை அருகில் இருந்த சைவக் கடை யில் முடித்துக் கொண்டு அன்றைய பத்திரிகை ஒன்றையும் வாங்கியவாறே மீண்டும் பஸ் நிலையத்தை வந்தடைந்தான்.

கடந்து செல்லும் சகல பஸ்களுமே ஐதாகவே சென்று கொண்டிருந்தன. பள்ளிக் கூட 'கிறவுட்' இல்லாதது வேறு இவனுக்கு மேலும் எரிச்சலையூட்டியது.

நெருக்கமான பஸ்களில் மட்டுமல்லாது ஐதாக, சனங்களில்லாது வரும் பஸ்களிலும் 'சொர்க்கம்' காணலாம் என இவனது 'துரோணாச்சாரியார்' சொல்லிக் கொடுத்த வழிமுறைகளும் இப்போது இவனது நினைவுக்கு வந்து மீண்டன. இன்று அதை அரங்கேற்றிப் பார்ப்போம் என்று அவாவுற்றவனாக, வந்த பஸ்சில் ஏறி 'ரிக்கட்' எடுத்தவாறே பஸ்ஸை ஒருமுறை கண்களால் வலம் வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது 'சீற்' றில் ஓர் யுவதி தனியாக இருந்தாள். வேகமாக முன்னேறி அருகில் சென்று அமர்ந்து கொண்டான். இவன் இருந்தது தான் தாமதம், அப் பெண் எழுந்து 'பெல்' அடித்து சவோய் தியேட்டரடியில் பஸ் நின்றதும் இறங்கிச் சென்றாள்.

'சீ...... இண்டைக்கு ஆற்றை முகத்திலை முழிச்சனோ?' பொல்லாத வயிற்றெரிச்சலாக இருந்தது இவனுக்கு. வெளியே பார்வையைப் படர விட்டான். வெள்ளவத்தைப் பாலத்தால் பஸ் சென்று கொண்டிருந்தது.

அடுத்த பஸ் நிலையத்தில் ஏறிய ஒரு முதியவர் கையில் குடையுடனும், சுருட்டு நாற்றத்துடனும் இவனுக்கு அருகில் காலியாக இருந்த 'சீற்றில்' வந்தமர்ந்து கொண்டார்.

இவனுக்குப் பற்றிக் கொண்டு வந்தது. 'இனி ஆமர் வீதி மட்டும் இதே கதிதானா?' பின்னால் திரும்பிப் பார்த்தான். நான்கைந்து 'சீற்' தள்ளி ஒரு 'சீற்' காலியாக இருந்தது. சுருட்டு நாற்றத்திற்கு சகிக்காதவனைப் போலப் பாசாங்கு செய்தவாறே..... அந்த 'சீற்'றை விடுத்து பின் 'சீற்'றை வந்தடைந்தான். பிள்ளையார் கோவிலைத் தாண்டி பஸ் வேகமாக முன்னேறுகிறது.

"இண்டைக்குப் பிறந்த நாளும் அதுவுமாக அம்சமாக ஒண்டையும் காணேல்லையே?" புலம்பியவனாக பத்திரிகை பார்ப்பதற்கும் முடியாதவனாக மூன்று நான்கு பஸ் நிலையங்களைத் தாண்டிச் சென்று கொண்டிருந்தான்.

பம்பலப்பிட்டிச் சந்தியில் பஸ் வந்து நின்றது. சிலர் இறங்கினார்கள். பலர் ஏறினார்கள். இவன் எதிலும் லயிக்காதவனைப் போல 'மார்க்கட்' பக்கமாக வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். திடீரென இவனது மடியில் ஒரு சேலைத் தலைப்பு வந்து விழுந்தது. திடுக்குற்றவனாகத் திரும்பிப் பார்க்கிறான். அம்சமான ஒரு நடுத்தர வயதுப்பெண் இவன் அருகில் வந்தமர்ந்து கொண்டாள்.





ஓரக்கண்ணால் ஒரு கணம் பார்த்துக் கொண்டான். இவனை விட ஒரு எட்டுப் பத்து வயதாவது முதியவளாக இருக்கலாம். 'ஆபத்துக்குப் பாவமில்லை.' புதிய குலுக்கலுடன் பஸ் பௌத்தலோக மாவத்தை வழியாகத் திரும்பி முன்னேறுகிறது.

தனது மடியில் வைத்திருந்த பத்திரிகையை எடுத்து விரித்தான். பத்திரிகையை விரிக்கும் போது பக்கத்துப் பெண்ணில் ஏற்பட்ட உரசலை தற்செயலானது என்பதைப் போலக் காட்டிக் கொண்டான். ஒரு பக்கத்திலேயே நில்லாது பத்திரிகையின் பக்கம் பக்கமாக.... பதினாறு பக்கங்களையும் புரட்டிப் பார்த்தான். பஸ் பல்கலைக்கழகப் பக்கமாக சென்று கொண்டிருந்தது.

பத்திரிகையைப் புரட்டிப் பார்த்ததில் திருப்தி போல மடித்து மீண்டும் மடியில் வைத்துக் கொண்டான். 'கிளாஸ் ஹவுஸ்' நிலையத்தில் இவனது முன் 'சீற்'றில் வெற்றிடம் ஏற்பட்டது. விரும்பியிருந்தால் இவனது பக்கத்தில் அமர்ந்திருந்த பெண் அதில் சென்று இருந்திருக்கலாம். ஆனால், அவள் பக்கத்திலேயே இன்னமும் உட்கார்ந்திருந்தாள்.

பஸ் திரும்பும் போது இவனும் மிகையாகவே திரும்பிக் கொண்டான். இதமாகத் தான் இருந்தது. இந்த வழிமுறைகளை சொல்லித் தந்த 'குருநாதரை' மனதுள் பல முறையும்' வாழ்த்திக் கொண்டான்.

'பஸ்ஸில் பிரயாணஞ் செய்யும் ஆண்கள் தங்களைச் சடப் பொருளாக நினைத்துக் கொண்டு பயணிக்கிறார்கள்' என்று சில வருடங்களுக்கு முன்னதாக ஒரு பெண் எழுத்தாளர் போர்க்கொடி தூக்கியதை இப்போ இவன் எண்ணிக் கொள்கிறான். எல்லாப் பெண்களுக்குமே அது பொருத்தமானதாக இல்லை. இதற்கு உடந்தையானவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெயில் சூடு பிடிக்க ஆரம்பித்தது. பஸ் சீறிக்கொண்டு செல்கிறது. ஏதாவது நாய், பூனை றோட்டுக்குக் குறுக்கே ஓடாதா என இவன் அங்கலாய்த்துக் கொண்டான். இவன் பிரார்த்தனை பலித்ததைப் போல கெம்பிக் கொண்டு ஓடி வந்த குதிரை ஒன்றினால் விகாரமகா தேவி பூங்கா முடக்கில் மிகையான குலுக்கலுடன் பஸ் 'பிரேக்' போட்டு நின்றது. பக்கவாட்டில் இவன் சரிந்ததில் அந்தப் பெண்ணின் முந்தானை இவனது மடியில் வந்து விழுந்தது.

பஸ் சாரதியைத் திட்டுந் தோரணையில் நிமிர்ந்து இருந்தவாறே இவன் வெளியே பார்வையைத் திருப்பினான்.

நகரசபை மண்டபம் கம்பீரமாக நிமிர்ந்து நின்றது.

மீண்டும் பஸ் பயணத்தைத் தொடர்கிறது. ஓரக்கண்ணால் அருகில் இருந்த பெண்ணைப் பார்த்துக் கொள்கிறான்.

மஞ்சள் பூசிய மலர்ந்த முகம், உச்சி வகிடெடுத்து பின்னிவிட்ட கூந்தல், நெற்றியிலும் உச்சியிலும் குங்குமப் பொட்டு, கழுத்திலே தங்கச் சங்கிலி, நிச்சயம் இவள் ஒரு தமிழ்ப் பெண் தான். 'அப்பீலே' இல்லை.

பேச்சுக் கொடுத்துப் பார்த்தால் என்ன? என்னையும் ஒரு தமிழனாக இவள் இனங்கண்டிருப்பாள். கையில் இருந்த பத்திரிகை வேறு நான் ஒரு 'தமிழ்ப் பிரியன்' என்பதைப் பறைசாற்றியிருக்கும், என்று எண்ணியவனாக சுற்றும் முற்றும் ஓர் தடவை பார்த்துக் கொண்டான்.

சலாக்கா, யூனியன் பிளேஸ் யாவையுந் தாண்டி பஸ் இப்போ டார்லி றோட்டை வந்தடைந்து விட்டது. இனி அதிக 'திருப்பங்கள்' ஏதும் இருக்காது, கதைக்க நினைத்தவனாக திரும்பிய போது, அந்தப் பெண், நடத்துநரை அழைத்து தனது மீதிப் பணத்தை வாங்கிக்





கொண்டாள். அவள் சரளமாக சிங்களத்தில் உரையாடியது இவனுக்குச் சங்கடமாக இருந்தது.

மைக்கலம் வீதி சந்தியால் திரும்பி பஸ் மருதானையை நோக்கிக் கொண்டிருந்தது. நியூ ஒலிம்பியாவுக்கு முன்னால் பஸ் ஊஞ்சல் போல் ஆடி ஆடிச் சென்று கொண்டிருந்தது. பஸ்ஸூக்கு ஏற்றபடி இவனும் ஆடிக் கொண்டிருந்தான்.

சந்தியை அண்மித்து பஸ் பஞ்சிகாவத்தைப் பக்கமாகத் திரும்ப எத்தனித்த போது, அந்தப் பெண் சேலையைச் சரி செய்தவாறே எழும்ப ஆயத்தமானாள். "தம்பி" என்று ஒரு இனிய குரல். இவன் ஆடிப்போய் விட்டான். யார் அழைத்தது? அருகில் இருந்து வந்த அதே பெண் தான். இவன் திரும்பிப் பார்க்கிறான்.

"தம்பி.... நானும் பம்பலப்பிட்டியிலையிருந்து உம்மடை சேட்டைகளைப் பார்த்துக் கொண்டு தான் வாறன். உமக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேணுமெண்டுதான் இவ்வளவும் பக்கத்திலேயே இருந்து கொண்டு வந்தனான். நினைச்சிருந்தால்.... ரவுண்ஹோலடியிலேயே உமக்கு என்ரை செருப்பாலை தந்திருப்பன். ஆனால்... உம்மடை வயதிலை எனக்கும் ஒரு மகன் இருக்கிறதாலை பேசாமல் வந்தனான்......" இவனுக்கு மேற்கொண்டு எதுவுமே கேட்காததைப் போன்ற பிரமை.

அந்தப் பெண் இறங்க, பஸ் மீண்டும் புறப்பட்டு.... டவர் ஹோலை தாண்டிச் சென்று கொண்டிருந்த போது தான் இவனுக்கு நினைவு மீண்டது.

முன் பின் சீற்றுகள் காலியாக இருந்ததால் அந்தப் பெண் சொன்னவை எவருக்கும் கேட்டிருக்க நியாயமில்லை.

'இல்லாவிடில் பிறந்த நாளும் அதுவுமா மானம் போயிருக்கும்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'நல்லவேளை ......... தப்பித்தேன் !'*

பஸ் சென்று கொண்டிருக்கிறது. ஆனால் இபபோ குலுக்கல்கள் இல்லை. திடீர் 'பிரேக்' குகள் இல்லை. திருப்பங்களும் இல்லை.

நேரான பாதையில் வலு நிதானமாகவே ஆமர் வீதியை நோக்கி பஸ் சென்று கொண்டிருக்கிறது.

***(1984)***



# புத்துணர்ச்சி

**கால** மாற்றம் அந்த வீதியை வலுவாகக் கற்பழித்திருந்தது. இவனையுந் தான். தலைநகருக்கு வந்த புதிதில் ஒவ்வொரு மணியும் புதிதாக ஏதாவது ஒன்றைத் தேடிய இவன் இன்று தன் நோக்கிழந்து, போக்கு மாறி 'வீடியோக் கிளப்பினைத்' தேடி வருமளவிற்கு, இளமை, முறுக்கு இவனை முற்றாகவே ஆதிக்கப்படுத்தி விட்டது.

'தியேட்டர்' யுகம் சிதறி 'வீடியோ' யுகம் உதயமான கடந்த ஐந்தாறு வருடங்களுள், ஆரம்ப காலம் இவனை அதிகம் பாதிக்க வில்லை. ஆலயம் அமைந்த வீதிகளில் சில வீடுகளின் முன்னால் சீனச்சுவராகியிருக்கும் சுவரொட்டிகள், காலப்போக்கில் அவ்வீதியின் ஒவ்வொரு வீடுகளிலும் தொற்றிக் கொண்ட வேளைகளில் தான் விசுவாமித்திர முனிவனாக இவனது மனமும் தடுமாறத் தொடங்கிற்று,

ஆலயத்தைத் தாண்டி வேகமாக நடந்து சந்திக்கு வந்தவன் மேலும் முண்டியடித்துக் கொண்டு முன்னேறிச் செல்கிறான். வீதியில் நிறைந்து நின்ற சனக்கூட்டம் அன்றைய விடுமுறை தினத்தைப் படம் பிடித்துக் காட்டியது. அந்த மாலைக் காட்சி பாலுமகேந்திராவின் கமராவிற்கு உயிர்க்களை கொடுத்தது.

தேநீர்க் கடைப் பக்கமாக அமைந்திருந்த பெட்டிக்கடைக்கு அருகிலிருந்த போஸ்டரில் பார்வையைச் செலுத்துகிறான். தமிழகத்து இன்றைய 'சுப்பர் ஸ்டார்' ஒருவரின் அண்மைக் காலத்துப் படம். கண்கவர் கவர்ச்சி நடனங்களுடன் பிரமாண்டமான தயாரிப்பாக வெளியாகியிருந்தது. இவனது மனம் அதில் லயிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது நீண்ட கால்களை முன் வைத்துச் செல்கிறான். அடுத்தடுத்து விளம்பரமாகியிருந்தவை யாவும் இன்றைய முன்னணி நாயகர்களது படங்களாகவே இருந்தன. ஒரு மாற்றத்திற்காக சிவாஜி கணேசன் காலத்து கறுப்பு வெள்ளைப் படங்கள் ஏதாவது காட்சி தருகிறதா என ஒரு கணம் நோட்டம் விட்டான். இவனது எதிர் பார்ப்பிற்கு ஏற்றனவாக எதுவும் இருக்கவில்லை.

சென்ற பாதை வழியாக மீண்டும் வலம் வருகிறான். "சேர் வாங்க டிஸ்கோ சாந்தியின்ரை 'டான்ஸ்' இருக்கு. நல்ல சண்டைப் படம் சேர் வாங்க." வழியில், நடுத்தெருவில் நின்றவாறே ஒரு பையன் இவனைப் பார்த்து அடிக்குரலில் கூறுகிறான். யாவற்றையும் விலத்தி மீண்டும் சந்திக்கு வந்தான்.

சந்தியில் ஓர் கணம் ஏதோ ஒரு உந்தலால் வலது பக்கமாகப் பாதை மாறிச் செல்கிறான். ஒரு பக்கம் உடைந்த ஓட்டுக் குவியல்கள், மறுபக்கம் குப்பை கூழங்கள் அடங்கிய கறுப்பு நிற 'பொலிதீன்' மூடைகள். குப்பைக் குவியலில் இருந்து வந்த சிறுநீர் நெடி இவனது நாசி வழி ஏறிற்று. வழமையான தன் நடையை ஆர்முடுகலாக்கி அவ் வழியே மிக வேகமாக முன்னேறிச் செல்கிறான்.

எத்தனையோ படங்கள் கண்களில் திரையிட்டிருந்தும், எதிலுமே மனது லயிக்காது, இவனை வழிநடாத்திச் செல்லும் இவனது அடிமனத்து ஆசை? இவனின் மனதில் அழுக்காகத் தொங்கிக் கொண்டிருக்கும் அந்த விருப்பு?

'இன்று ஒரு புளூபிலிம் பார்த்தால் என்ன?'

'புளூபிலிம் போஸ்டர்கள்' எப்படியாகக் காட்சிக்குத் தொங்கும் என்று நண்பர்கள் வாயிலாக நன்றாகவே இவன் கேள்விப் பட்டிருக் கிறான். அதனால் அந்த இடங்களை இனங் காண்பதில் இவனுக்குச் சிரத்தை ஏதும் இருக்கவில்லை. வேகமாக வந்தவனது கண்களில் அப்படியான ஒரு 'போஸ்டர்' தென்படவே, வீதியின் முன்னும் பின்னும் ஓர் தடவை பார்த்துக் கொண்டான். முன்புறமாகத் தெரிந்த





முகங்கள் ஏதும் தென்படவில்லை. சற்று முன் சென்று திரும்பி வந்தான். மறுபக்கமும் இவனை அடையாளம் காணும் கண்கள் இல்லாது போகவே, திடீரென அந்தப் 'போஸ்டர்' தொங்கிய வீட்டினுள் நுழைந்து கொண்டான்.

வாசலில் நின்ற வாட்டசாட்டமான பையன் வழி மறித்துக் கையை நீட்ட 'பொக்கெட்டிற்குள்' தயாராக இருந்த ஐந்து ரூபாக் குற்றியை எடுத்துக் கொடுக்கிறான். "சேர் இது செக்ஸ் படம். பத்து ரூபா" என்று சிறுவன் கூறவே ஆபாசப் படங்களுக்கு இரு மடங்கு காசு என நண்பர்கள் சொன்னது நினைவுக்கு வரவே, இருந்த இன்னொரு நாணயத்தையும் நீட்டிவிட்டு உள்ளே செல்கிறான்.

வேறொரு பையன் மாப்பிள்ளை போல் இவனை அழைத்து மாடிக்கு கூட்டிச் செல்கிறான். பலகைப் படிகளால் பக்குவமாக ஏறி, உள்ளே நுழைகிறான். ஒரே புகைமண்டலமாக அந்த அறை காட்சி கொடுத்தது. சற்று நின்றவன் கண்மணிகளுக்கு இருளில் பார்க்கும் சக்தி வந்ததும், ஒரு வாங்கிலில் சென்று அமர்ந்து கொள்கிறான்.

'வீடியோ' வில் ஓர் ஆங்கிலப் படம் போய்க் கொண் டிருக்கிறது. அருகிலிருந்தவரை படம் தொடங்கி விட்டதா என மெல்லிய குரலில் வினவுகிறான், 'கமிங்' காட்டுகிறார்களாம், 'அந்தப் படம்' இன்னும் ஆரம்பமாகவில்லையாம். கையை உயர்த்தி அந்த வீடியோ வெளிச்சத்தில் நேரத்தைப் பார்க்கிறான். மணி ஆறு ஐம்பது.

அந்த அறையை நோட்டம் விடுகிறான். 'வீடீயோ' வுக்கு மேலே சுவரில் புத்தர், ஜேசு, பிள்ளையார் படங்களுடன் கூடவே சிலந்தி வலையில் ஓர் சிலந்தியும் தொங்கிக் கொண்டிருந்தன. ஒரு சிறிய மின் குமிழ் படங்களுக்கு முன்பாக விட்டு விட்டு ஒளிர்ந்து கொண்டிருந்தது. பக்கச் சுவர்களில் இன்றைய முன்னணி நடிகைகளின் கவர்ச்சி அபிநயங்கள், படு ஆபாசமான கோணங்களில் ஒட்டப்பட்டிருந்தன.

படம் பார்த்துக் கொண்டிருப்பவர்களை முன்னிருந்து பின்வரை நோட்டம் விடுகிறான். ஏறத்தாழ சகலருமே 'பால் குடிகள்'. சரியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீசைகூட இன்னமும் அரும்பாதவர்கள். கட்டையில் போகும் வயதில் உளள சிலரும் இவனது கண்களில் அகப்படாமல் இல்லை. குறைந்தது ஒன்றை விட்டு ஒருவரது வாய்களிலும் 'ஊதுபத்திகள்' ஒளிர்ந்து கொண்டிருந்தன. மூலையில் ஒரு சிலர் கசிப்பு அடித்தவரைப் போன்ற மயக்கத்தில் ஏதேதோ பினாத்திக் கொண்டிருந்தார்கள். இவனுக்கு வந்த இடம் இசைவானதாக இருக்கவில்லை. தனது ஆளுமைக்கே இது இழுக்கு என்ற நினைப்பு வேறு வந்து தொலைத்தது.

வீடியோவில் போய்க்கொண்டிருச்கும் படத்தில் சற்று மனதை லயிக்க முற்படுகிறான். அது ஒரு வீராங்கனையின் வரலாறு கூறும் படம். தனியாக களத்தில் நின்று பெரிய பெரிய மல்லன்கள் எல்லோரையுமே அவள் பந்தாடிக் கொண்டிருந்தாள். இடையிடையே அவள் பட்ட கஷ்டங்களையும், ஒரு கொள்ளைக் கூட்டம் அவளது குடும்பத்தைக் கொன்று குவித்த நிகழ்ச்சிகளையும் 'விளாஷ் பாக்' கில் காட்டிக் கொண்டிருந்தார்கள். எல்லாத் துறையைப் போலவும் வீரத்திலும் பெண்கள் முன்னுக்கு வந்திருப்பதை அப் படம் சித்திரிக்க முனைந்திருக்கிறது.

"ஓய், படத்தைப் போடுங்க. மணி ஏழேகால் ஆச்சு." - பல குரல்கள் ஒருமித்து ஒலித்தன. விசில் சத்தம் காதைக் கிழித்தது.

கீழிருந்து கையில் ஒரு 'கசற்'றுடன் ஒரு பையன் ஓடிவருகிறான். மின் குமிழ்கள் ஒளிர விடப்படுகின்றன. எல்லாரது முகங்களும் வெளிச்சத்துக்கு வருகிறது. ஒரே வியர்வையில் மூழ்கிய முகங்கள். இவனை இனங்காணும் கண்கள் எதுவுமே இல்லாதது இவனுக்கு நிம்மதியைத் தந்தது.

ஏதோ ஒரு கருத்தைச் சொல்ல முற்பட்டு கலைநயத்துடன், நல்ல அம்சங்களுக்கு உட்பட்டு நிற்கும் இப்பேர்ப்பட்ட படைப்புகளை எங்கே இவர்களால் ரசிக்க முடிகிறது? மீண்டும் இருள் அறையை ஆக்கிரமிக்க எச்சரிக்கை அறிவித்தலுடன் 'அந்தப் படம்' ஆரம்பமாயிற்று.





நான்கு சுவர்களுக்கு மத்தியில் நடைபெறும் அந்தரங்கமான உறவு அநாகரிகமாக, படு ஆபாசமாக அரங்கேறிக் கொண்டிருந்தது. அந்த அம்மண உருவங்கள், உச்சக்கட்ட சிலிர்ப்புகள், காட்சிகள் யாவும் கண்களை உரசிக் கொண்டிருந்தன. உடலில் வெப்ப அலை பரவிக்கொண்டிருந்தது,

பலகைப் படிகளில் 'தடார் தடார்' என்ற ஓசைகள். பலர் ஓடி வருவதைப் போன்ற ஒரு பிரமை. ஆபாசப் படங்கள் பார்த்த பலர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு, அவர்கள் பெயர்கள் எல்லாம் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்த செய்தி ஒன்று ஞாபகத்திற்கு வரவே, இவனது இதயம் மிகவும் வேகமாக அடிக்க ஆரம்பித்தது. கதவு தட்டப்படும் சத்தம் வேறு பயமூட்டிற்று. சகலருமே கலவரம் நிறைந்து காணப்படுபவர்களைப் போல இவனுக்குத் தென்பட்டார்கள். படம் போட்ட பையன் சென்று கதவைத் திறக்கிறான். யாரோ சிலர் படம் பார்க்கத்தான் வந்து கொண்டிருந்தார்கள். 'அப்பாடா'. இவன் அமைதியடைந்தான். மீண்டும் 'வீடியோ'வைச் சகல கண்களும் மொய்க்கின்றன.

ஆனால், இப்போ இவனது மனம் படத்தில் லயிக்கவில்லை. அந்த முனகல்களையும் முழு விரசங்களையும் ஏனோ ரசிக்க முடியவில்லை. ஏதோ ஒரு குற்ற உணர்வு நெஞ்சை உறுத்திக்கொண்டிருந்தது. 'நான் செய்வது தவறா,' தன்னை ஓர் தடவை கேட்டுக் கொண்டான்.

சட்ட விரோதமாகக் கருதப்படும் எந்தச் செயலை மீறுபவர்களும் தவறிழைப்பவர்கள் தான். அப்படியானால், ஆபாசப் படம் பார்ப்பது? 'புளூபிலிம்' பார்ப்பது தவறானது அல்ல. ஏதோ ஒரு நாட்டில் ஓரிரு வருடங்களுக்கு முன்னதாக யாரோ ஒரு 'புண்ணியவான்' கோர்ட்டில் தீர்ப்பளித்திருந்ததையும் இவன் அறியாதவனல்ல. மேனாட்டைப் பொறுத்தவரை, அவர்களது பண்பாடு, பாரம்பரியங்களைப் பொறுத்த மட்டில், அவ்விடத்து கலை கலாசாரங்களின் அடிப்படையில் இது தவறற்றதாக இருக்கலாம். ஆனால், புராணங்களையும் இதிகாசங்களையும் இன்னமும் உசாத்துணை காட்டும் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணின் பாரம்பரியங்களைப் பொறுத்தவரை, இது தவறான வழி நடத்தல் தான்.

படம் ஓடிக்கொண்டு தான் இருக்கிறது. ஆனால், இவனது மனம் அதில் நாட்டங் கொள்ளவில்லை. பக்கத்துக் கோவிலின் மணியோசை கூரையைப் பிய்த்துக் கொண்டு இவன் காதுகளில் வந்து ஒலிக்கிறது.

கையை உயர்த்தி நேரத்தைப் பார்க்கிறான். மணி எட்டை அண்மிக்கிறது. மேலும் இவனால் இருப்புக்கொள்ள முடியவில்லை. பொறுப்பாக நிற்கும் பையனை அழைத்து கதவைத் திறந்துவிடும் படி கேட்கிறான்.

"நல்ல படம் சேர். இனித்தான் நல்ல சீன் இருக்கு." நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டே பையன் கூறுகிறான். கெஞ்சும் பாவனையில் இவன் வெளியேற விரும்புவதாகச் சொன்ன போது ஆச்சரியத்துடன் இவனது ஆறடி உயரத்தையும் மேலிருந்து கீழ் அளந்தவாறே பையன் கதவைத் திறந்து விடுகிறான். அப்போதும் சிலர் முண்டியடித்துக் கொண்டு உள்ளே நுழைகின்றார்கள்.

படிகளால் இறங்கித் தெருவுக்கு வருகிறான். குப்பைக் குவியலடியில் ஒரு பெரிய பொலிஸ் வாகனம் இவனை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. வேகமாக இவன் முன்னேறிச் செல்கிறான். வாகனம் இவனை விட்டு விலத்திச் செல்கிறது. வீறுநடை போட்டு இவன் முன்னேறுகிறான். சந்தியால் திரும்பும் போது இவனது கண்கள் வந்த பாதையை நோக்குகின்றன. சென்று கொண்டிருந்த வானகத்தின் பின்புறம் சிவப்பாக ஒளிர்ந்தது.

கோவில் மணியோசை தெளிவாகவே இப்போ இவனுக்குக் கேட்கிறது. முன்னே தோரண வீதி நீண்டு தெரிகிறது.

***(1986)***



# தந்தையுமாகி

அந்த ஆதார வைத்தியசாலை முன்றில் பார்வையாளர்கள் 'சுனாமி' அலையாகப் பெருக்கெடுத்து நின்றனர். சுருக்குக் கேற்றின் முன்னால் கதிரையை அரியாசனமாக்கி அமர்ந்திருந்த காவலாளியின் கையிலிருந்த மணி ஒலி எழுப்புதற்காய் 'ஒன் யுவர் மார்க்' இல் இருந்தது.

அந்தக் காவலாளி பார்வைக்கு கொஞ்சம் முன்னே பின்னே இருந்தாலும் தன் தொழிலில் சுத்தமாய் இருந்தான். தன்னை மீறி எவராவது உள் நுழைந்தால் தனது பதவியையே துறப்பேன் எனச் சபதம் கொண்டவன் போல கடமையுணர்வுடன் செயற்படலானான்.

இரவுக் கடமைக்காக வைத்தியசாலைக்குள் நுழையும் தாதியர்கள் மற்றும் ஊழியர்கள் கூட அக்காவலாளிக்கு 'சல்யுட்' அடித்தே உட்செல்ல வேண்டியிருந்தது.

பார்வையாளர்களில் பெரும்பாலானோர் நோயாளிகளைப் பார்வையிட வேண்டும் என்பதை விட இருளமுன்னர் பஸ் பிடித்துவிட வேண்டும் என்பதிலேயே முனைப்பாக இருந்தனர்.

தென்மேற்கு மூலையில், ஓங்கி வளர்ந்து காற்றோடு கதை பேசிக் கொண்டிருக்கும் அசோக மரத்தின் கீழ் கைக் குழந்தையுடன் ஒரு பெண் தனித்து நின்றிருந்தாள். அவளது முகத்தில் கருமையும் கூடவே சோகமும் கப்பியிருந்தது. 'சுனாமி' அனர்த்தத்தில் காயப்பட்ட தன் கணவனை 'வாட்டில்' அனுமதித்தவளாக அவள் இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவலாளியின் கையில் இருந்த மணி 'ஹெட் செட்' டாகி ஒரு பாட்டம் ஒலித்தோய்ந்திற்று. நோயாளிகளின் வரவுக்காக வாசலின் இருபுறமும் தவமியற்றிக் கொண்டிருந்த 'ஸ்டெச்சரை' யும் இடித்துத் தள்ளியவாறே சனங்கள் உள் நுழைந்து கொண்டிருந்தனர். ஸ்டெச்சரை இழுப்பதா தனது கதிரையைப் பிடிப்பதா என காவலாளி திணறிக் கொண்டிருந்தான்.

சைக்கிள் பாதுகாப்பில் கொடுத்த ரிக்கெட்டினை சேட் பொக்கெட்டினுள் பத்திரப்படுத்திக்கொண்டு கையில் தொங்கிய ஹோர்லிக்ஸ் போத்தலை மார்போடு அணைத்தவாறே சனங்களில் ஒருவனாக வைத்தியசாலை வாசலை நோக்கி மிதந்து செல்கிறேன்.

வெளிநோயாளர் பகுதியையும் தாண்டி உட்சென்றதும் வைத்தியசாலைக்கே உரித்தான நெடி நாசிவழி ஏறி வயிற்றினுள் இறங்கியது. புதிய நேரம் நாலரை போல் சாந்தி தந்த தட்டை வடையும் தேநீரும் இரைப்பையிலிருந்தும் மேலெழுவேன் எனப் பயங் காட்டிற்று.

சுடுநீர்க் குடுவை, உணவுப் பொதிகள் தாங்கிய பிளாஸ்டிக் பாஸ்கட்டுகளைக் கையில் சுமந்தவாறே ஆளுக்கொரு திக்கில் சனங்கள் அணிவகுத்துச் சென்று கொண்டிருந்தனர்.

நான் தெற்குத் திசையிலேயே செல்ல வேண்டியிருந்தது. எதற்கும் கைகாவலாக "ஆம்பிளையளின்ர வாட் எங்கை இருக்கு?" என்று எவரையாவது கேட்டு வைப்பது நல்லது போல் தோன்றிற்று. முன்னமே பேசிப் பறைந்து வந்தது போல 'மெட்டி ஒலி' தொலைக் காட்சி நாடக சரோவை நினைவுபடுத்தியவாறே ஒரு தாதி இப்போ என் முன்னால் தயார் நிலையில் நின்றாள்.

என் சந்தேகத்தைக் கேட்கலானேன்.

"உப்பிடியே நேரை போய் வலக்கைப் பக்கமாகத் திரும்ப வாற முதல் வாட்" என்றாள் நிதானமாக. நோயாளிகளுடனும் என்னைப்





போன்ற விபரமறியாத பார்வையாளர்களுடனும் எப்படி அன்பாகப் பேச வேண்டும் எனப் பயிற்சிக் காலத்தின்போது இடித்திடித்துக் கூறியிருப்பார்கள் போலும்.

"தாங்ஸ் அம்மா" என்றவாறே முன்னேறிக் கொண்டிருந்தேன். பதிலுக்கு அவளும் ஏதோ கூறினாள். "வெல்கம்" என்று மட்டும் கூறியிருக்க மாட்டாள் என நினைத்துக் கொண்டேன்.

**அடுத்து ஆறேழு கவடு வைத்திருக்க மாட்டேன்...**

"அண்ணை என்ன கனநாளாக இந்தப் பக்கம் காணேலை? இப்ப எந்தத் தேசத்திலை?" என்ற குரல் கேட்டுத் திரும்புகிறேன்.

கிழக்குப் பக்கமாக பிள்ளையார் கோவிலே தஞ்சமெனச் சரணடைந்தவாறே நீண்டு கிடந்த அந்த வாட்டில் இருந்து தாடி வைத்த ஒரு நடுத்தர வயதுக்காரர் பற்பொடிக்கு விளம்பரம் செய்தவாறே என்னையே பார்த்துக் கொண்டு நின்றார்.

"ஓ...! நான் இப்ப கொழும்பிலை இருக்கிறன்" என்றவாறே அவரை இனங்காண எத்தனிக்கின்றேன்.

"என்னைத் தெரியவில்லையா? என்னைப் பார், என் கண்களைப் பார். நன்றாக உற்றுப் பார்" ஏதோ ஒரு திரைப்படத்தில் சிவாஜி கணேசன் செய்தவற்றை 'இமிற்றேற்' பண்ணியவாறே என்னைப் பார்த்து மீண்டும் சிரித்தார்.

அந்த வாட்டைச் சுற்றி முட்கம்பியால் வேலி போடப்பட்டிருப் பதை அப்போததான் அவதானித்தேன்.

நல்ல வேளை எனது முகவரி மற்றும் செலுலர், ஈ-மெயில் விபரங்களையும் கூறாமல் விட்டேனே என்று நினைத்தவாறே எனது வேகத்தினை ஆர்முடுகலாக்கி களஞ்சியசாலையையும் கடந்து நடக்கலானேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப் பார்த்து புன்முறுவலித்தவாறே முன்னால் ஒரு தாதி வந்துகொண்டிருந்தாள். எங்கோ பார்த்துப் பழகிய முகம். யாரது? என்று யோசிப்பதற்குள் "ஆரைப் பார்க்கப் போறியள் அங்கிள்?" என்று கேட்டாள்.

ஓ! புவனமக்காவின்ர பொடிச்சி... யூனிபோமிலை ஆளை உடனடியாக ஐடென்ரி பண்ணேலாமல் போச்சு.

"நான் பிள்ளை இவர் தாமோதரண்ணனைப் பார்க்கப் போறன்."

"தாமோதரண்ணன் எண்டு?" என்பதை அலை போல் உயர்ந்த அவளின் புருவங்கள் வினவிற்று.

"இவர்தான் பிள்ளை. கதையள் எல்லாம் எழுதுவார். கன காலமாக பிள்ளையார் கோயில் மடத்திலை இருந்தார். கந்தபுராண மெல்லாம் படிப்பார்."

"ஓ...ஓ... எங்கடை தாமுவப்பாவையே சொல்லுறியள்?" ஆஸ்பத்திரிக்கே அவர் உரித்தாகிவிட்டமை அவளது பேச்சில் தெரிந்தது.

"இப்ப ஆளைத் தெரியுதுதானே பிள்ளை?"

"தெரியுதுதானேயோ? இப்ப இரண்டு இரண்டரை மாதமா வாட்டிலைத்தானே இருக்கிறார். சுனாமியாலை பாதிக்கப்பட்டு வந்தாக்களிலே அவரைப்போல ஒரு சிலர் தான் இன்னும் டிச்சார்ச் ஆகாமல் இருக்கினம். கொஞ்ச நாளைக்கு முந்தி இண்டைக்கோ நாளைக்கோ எண்டமாதிரித்தான் இருந்தார். இப்ப கொஞ்சம் பரவாயில்லை."

"அவரைப்பற்றி நீங்கள் அறிஞ்சு சொல்லத்தக்கது இவ்வளவு தான் பிள்ளை. ஆனால், அவர் ஆர், எப்படியிருந்தவர் எண்ட தெல்லாம் உங்களுக்குத் தெரியுமோ?"





"கதைகள் எழுதினார் எண்டு அம்மா சொன்னா." பரீட்சையில் பாஸ் பண்ணாத ஒரு பாவத்தனம் அவளது முகத்தில் தெரிந்தது.

"கதைகள் இப்ப இப்ப எல்லாருந்தான் பிள்ளை எழுதியினம். ஆனால், இவற்றை படைப்புகள் சாதாரணமானவை இல்லை. உன்னத தரத்திலை இருப்பவை. பல்கலைக்கழகமே ஆய்வு செய்து பாடப் புத்தகங்களாகப் பேணி வைச்சிருக்கிற அளவுக்கு அந்த நாளையிலை பேரோடும் புகழோடும் இருந்தவர். எழுத்தையே நம்பி வாழ்ந்த சிலரில் ஒருவர். அப்படிப்பட்டவர் இப்ப அநாதையாக ஆதரவில்லாமல் ஆஸ்பத்திரியிலை படுத்திருக்கிறதுதான் பெரிய கவலையாக இருக்கு. ஏற்றுக் கொள்ளேலாமல் இருக்கு." நான் கூறியது ஆறாந்தரத்தில் மூத்ததம்பி வாத்தியார் சரித்திர பாடம் படிப்பித்தது போல் அவளுக்கு இருந்திருக்க வேண்டும். கொட்டாவி விடாத குறையாக நின்றாள். ஏறத்தாழ எங்களை இடித்து விலகியவாறே அந்த ஒடுங்கிய ஓடை போன்ற நடைபாதை வழியே சனங்கள் போய்க் கொண்டிருந்தார்கள்.

"உங்களுக்கு அவர் இருக்கிற வாட் தெரியுமோ அல்லது கொண்டு வந்து விடட்டுமோ?" என்றவாறே நூற்றெண்பது பாகை களில் அவள் திரும்பியது அவளின் பண்பை எனக்கு உணர்த்திற்று.

"எனக்கென்ன இது புது இடமே? இருபது இருபத்தைஞ்சு வருசமா ஊரிலை இல்லாட்டிலும் முந்தி நாங்கள் வந்து மருந்தெடுத்துப் பழகின ஆஸ்பத்திரிதானே? நான் போய்ப் பார்க்கிறன்" என்றவாறே வலப்பக்கமாகத் திரும்புகிறேன்.

காலில் சளி போல ஏதோ மிதிபட்டது.

ஊர் வந்தால் வெறுங் காலுடன் திரியும் எனது கொள்கை எல்லா இடத்திற்கும் ஒத்து வராது என்பதை காலில் இழுபட்ட சளி நிறுவிற்று.

கழிப்பறை நீரைக் குடித்துவிட்டு நீந்தாத குறையாக அதன் வாசலில் கிடந்த சாக்கு ஒன்று ஆபத்திற்கு உதவிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்கள் 'வாட்' டிற்குள் நுழைகின்றேன். வரவேற்குமாப்போல் நடுத்தர வயதுத் தாதி ஒருத்தி அமர்ந்திருந்தாள். இடது கையில் யாரோ ஒரு நோயாளியின் எக்ஸ்ரேயை வைத்துப் பார்த்தவாறே வலது கையால் ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள். ஒரு வேளை நாளை காலை அந்த நோயாளிக்கு சத்திரசிகிச்சையாக இருக்கக்கூடும்.

அத் தாதியை இடையூறு செய்ய விரும்பாதவனாக தாமோதர ண்ணனைக் கட்டில் கட்டிலாகத் தேட ஆரம்பித்தேன்.

"செல்லத்தம்பி ஆரைத் தேடுகிறாய்?" ஒரு பெண்ணின் குரல் கேட்டுத் திடுக்குற்று திரும்பிப் பார்க்க நினைத்தேன்.

சற்று முன்னர் நடந்த சம்பவத்தின் படிப்பினையால் உஷாராகி, இன்னோர் தடவை ஏமாற விரும்பாதவனாக, எதுவுமே கேட்காதவன் போல, சேலைன் இறங்கிக் கொண்டிருக்கும் முதல் மூன்று நான்கு கட்டில்களிலும் அறிவற்ற நிலையில் கிடந்த அந்நோயாளிகளையும் ஏக்கத்துடன் சூழ நின்ற பார்வையாளர்களையும், தாண்டியவாறே நான் உள்ளே சென்று கொண்டிருந்தேன்.

"என்ன செல்லத்தம்பி, கேட்டது விளங்கேல்லையோ, ஆரைப் பார்க்கவேணும்?" மீண்டும் அதே பெண்ணின் குரல் சற்று உரக்கக் கேட்கவே திரும்பிப்பார்க்கிறேன். தெரிந்த எவரையுமே காணவில்லை. "தாமோதரண்ணனைத் தேடுறன்" என்று சொல்லாமலே திரும்பியது எவ்வளவு நல்லதாகப் போயிற்று. அல்லாட்டி நாலு பேர் மத்தியில் மரியாதை கழன்றிருக்கும்.

அந்தத் தாதி என்னை நோக்கி வந்து கொண்டிருந்தாள்.

"கேக்கிறன்... கேக்கிறன்... பேசாமல் நிக்கிறாய்" இதுவரை ஒலித்தது தன் குரலே என உரிமை கோரிய வண்ணம் என்னை நெருங்கிக் கொண்டிருந்தாள்.

"எட... எங்கட காஞ்சனா..." என்றேன்.





**"ஆளை** மறந்தாலும் பெயரை மறக்காமல் இருக்கிறாய்."

"காஞ்சனா உனக்கு ஒண்டு தெரியுமே? வாழ்க்கையிலை ஆரைத் தான் மறந்தாலும் சின்ன வயதிலை கூடப் படிச்சாக்களின்ரை பெயரை மட்டும் நாங்கள் சாகுமட்டும் மறக்க மாட்டம்."

எங்களூர் பாடசாலையில் புவனேசு அக்காவிடம் முதலாம் வகுப்பு படித்ததிலிருந்து நாகபூசணி ரீச்சரிடம் ஏழாம் வகுப்பு படித்தது வரை காஞ்சனா எனது வகுப்பிலேயே படித்ததும், ஐந்தோ ஆறாம் வகுப்பில் படிக்கும்போது ஒரு நாள் பள்ளிக்கூடம் விட்டுச் செல்லும் வழியில் மூத்ததம்பி வாத்தியார் வீட்டு முடக்கில் வேலியோரமாக நின்ற இலந்தை மரத்தடியில் ரவிச்சந்திரனுடன் சேர்ந்து காஞ்சனா இலந்தைப்பழம் பொறுக்கும்போது, எவராலோ ஏற்கனவே எறியப் பட்ட கல் மரத்தில் தொங்கிக் கிடந்து அந்நேரமென்று பார்த்து வீழ்ந்து காஞ்சனாவின் மண்டையைப் பதம் பார்த்ததும், ஓடும் குருதியைக் கட்டுப்படுத்த ரவிச்சந்திரன் தன் சேட்டையே கிழித்து காஞ்சனாவின் மண்டைக்குக் கட்டுப்போட்டதும்.... அதன் பின்னர் ரவிச்சந்திரன் 'பாரி' எனவும் காஞ்சனா 'முல்லை' எனவும் சில காலங்கள் பழிக்கப் பட்டதும், காஞ்சனாவைக் கண்டதும் என்னுள் 'பிளாஷ்பாக்கில்' ஓடியது.

இன்னும் காஞ்சனா, ரவிச்சந்திரன் பற்றிய சில சுவாரசியமான 'பிளாஷ்பாக்குகள்' என் கைவசம் இருந்தன. காஞ்சனாவின் கேள்வி எல்லாவற்றையும் நாசமாக்கிவிட்டது.

"அது சரி... இஞ்சாலை ஆரைப் பார்க்க..."

"எழுத்தாளர் தாமோதரத்தைப் பார்க்கவெண்டு..."

"ஓ! உன்ரை இலக்கிய ஆசான். உன்ரை பிரசுரங்களிலைகூட அவரைப்பற்றி எழுதியிருந்தாய் பார்த்தன். அதோ அவர் அந்தக் கோணரிலை இருக்கிறார்... வா பார்ப்பம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழெட்டுக் கட்டிலைக் கடந்து மடியும் ஸ்கிறீனால் மறைக்கப் பட்ட மூலைக்கட்டிலை அடைந்தோம். காஞ்சனா ஸ்கிறீனை மடித்து விலக்க நான் கட்டில் அருகே சென்றேன்.

உடலில் தோல் சுருங்கி எலும்போடு படிந்திருக்க, வற்றிய நெஞ்சாங்கூட்டுடனும் பருத்த வயிற்றுடனும், சவரஞ் செய்து பல மாதங்களாகிவிட்ட முகத்தில் வெளித்தெரியும் பற்களுடனும் முகட்டைப் பார்த்தபடியே தாமோதரண்ணன் படுத்திருந்தார். அசாதாரணமாக வெளித் தெரியும் ஒவ்வொரு அங்கமும் அவரது நோயின் அகோரத்தினைச் சொல்லிக் கொண்டிருந்தது. அவரது கீழுடம்பினை மங்கலாகி விட்ட, ஆஸ்பத்திரிக்குரிய சாரமும், ஈக்களும் மூடியிருந்தன.

நான் வந்து சில நாழிகையாகியும் அவரது பார்வை என்னில் படர்வதாய் இல்லை. அவரது அரையில் வழுகியிருந்த சாரத்தைச் சரி செய்தவாறே குனிந்து அவரைக் கூப்பிடுகிறேன்.

"தாமோதரண்ணை... தாமோதரண்ணை"

ஒளியிழந்த அவரது விழிகள் என்னை நோக்கின.

"ஆரது மோனை" ஒரிரு சொற்களுக்கு மூச்சிரைத்தது.

"அண்ணை நான் செல்லத்தம்பி வந்திருக்கிறன்."

"ஆர்" வாய் கோணியது.

"செல்லத் தம்பி வந்திருக்கிறன் அண்ணன்."

அவரது தாடை எலும்புகள் தளர்வுற முகத்தில் ஓர் மலர்ச்சி தோன்றியது. எனது கைகளைப் பற்றியவாறே உமிழ்நீரிற்குள் நீந்திய நாக்கைத் தூக்கி "எப்ப வந்தனீ?" என்றார். கண்களில் மிதந்து வந்த நீர்ப்படலம் வெளியே வரத் தயார் நிலையில் நின்றது.





"நேற்றுத்தான் அண்ணை கொழும்பாலை வந்தனான். இண்டைக்கு மத்தியானமளவிலை உங்கடை நிலவரம் பற்றி அறிஞ்சு உடனை பார்க்க வந்தன்."

தாமோதரண்ணை கட்டிலில் சாய்ந்திருக்கத் தக்கவராக உற்சாகம் கொண்டார்.

"இவர் வார்ட்டுக்கு வந்த இவ்வளவு நாளைக்குள்ளை இண்டைக்குத்தான் இவரைப் பார்க்க எண்டு ஒரு ஆள் வந்திருக்கு" தொடர்ச்சியாக இருமிக்கொண்டிருந்த பக்கத்துக் கட்டில்காரர் இடைவேளை விட்டு அடுத்தடுத்த கட்டிலில் படுத்திருப்பவர்களுக்குக் கூறிக் கொள்வது என் காதிலும் விழுந்தது.

ஒரு பக்கமாக நானும் மறுபக்கமாக காஞ்சனாவும் தாமோதரண்ணனைத் தூக்கி படுக்கையில் சாய வைத்தோம். புதுத்தெம்புற்றவராக அவர் கதைக்க ஆரம்பித்தார்.

ஊர்க் கோவில் மடத்தை விட்டு அமைதி தேடி கடற்கரையடி காளிகோவில் மடத்தடிக்கு தான் இருக்கச் சென்றதும் ஆழிப்பேரலை ஆளைவிடப் பன்மடங்கு உயரத்தில் பொங்கி வந்தபோது அதனின்றும் தப்புவதற்காகத் தான் ஓடி வந்தபோது குழியில் கால் வைத்து விழுந்து காயமுற்று மரமொன்றைப் பற்றியவாறே மணிக்கணக்கில் தண்ணீரில் இருந்ததையும், பின்னர் குற்றுயிராய் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது வரையிலான நடந்த கதைகளை அவர் சொல்லிக் கொண்டிருந்தார்.

உண்மையில் அவர் கூறியதன் அரைவாசிப் பகுதியை காஞ்சனாதான் 'மொழி பெயர்க்க' வேண்டி இருந்தது.

"இண்டைக்கு இந்தளவிலையாவது கதைக்கிறார். அல்லாட்டி மருந்து குடிக்க மட்டுந்தான் இவர் வாய் திறப்பார்" என காஞ்சனா கூறியது தாமோதரண்ணனுக்குக் கேட்டதோ என்னவோ, "தம்பியைக் கண்டது சந்தோஷம்" என இரண்டு மூண்டு தடவைகள் சொல்லிக் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உனக்கொரு புதினம் தெரியுமோ? இவரை மீட்புப் பணியாக்கள் ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்தாப்போலை இவரைக் காளி கோயிலடியிலை காணாததாலை, 'முதுபெரும் எழுத்தாளரை கடல்கோள் காவு கொண்டது' என உள்ளூர் பத்திரிகையிலை ஒரு செய்தி கூட வந்ததாம்" என காஞ்சனா சொன்னபோது "தம்பியைக் காண வேணுமெண்டு பலன்" என்று கூறியவர் மீண்டும் எதையோ சொல்வதற்கு முயன்று கொண்டிருந்தார்.

"மிஸ் முன் பெட் பேஷனுக்கு சேலைன் மாத்திறதா?" மூக்குக் கண்ணாடியைச் சரிசெய்தவாறே காஞ்சனா அருகே ஒரு இளந்தாதி வந்து நின்றாள். அவளது வலதுகையில் ஒரு செலூலர் போன் சிறைப் பட்டு இருந்தது. மிக முக்கியமான 'மெசேஜ்' ஒன்றை எஸ்.எம்.எஸ். வழியாக அவள் எதிர்பார்த்திருப்பவளாக இருக்கலாம்.

ஒருவேளை இவளும் ஏதாவது வகையில் எனக்குத் தெரிந்தவ ளாக இருப்பாளோ என்ற ஓர் நப்பாசையில் ஓர் தடவை அவளை உற்றுப் பார்த்தேன்.

என்ன நினைத்தாளோ தெரியவில்லை, தன் புத்தம் புதிய யூனிபோர்மை ஓர் முறை அஜெஸ்ட் பண்ணிக்கொண்டாள். எனக்கு அந்தரமாகப் போய்விட்டது.

"நீ தாமுவப்பாவோடை கதைச்சுக் கொண்டிரு. நான் ஒருக்கால் முன்னுக்குப் போயிட்டு வாறன்" காஞ்சனா முன்னால் செல்ல, ஓடாத குறையாக கண்ணாடித் தாதி பின்னால் சென்று கொண்டிருந்தாள்.

போர்க் காலங்களில் தான் எழுதியவற்றுள் நூலுருப்பெறாத மூன்று நாவல்கள் ஊரிலுள்ள விரிவுரையாளர் ஒருவரிடம் சுனாமிக்கு முன்னரே கையளிக்கப்பட்டிருப்பதையும், தனக்கு இறுதி ஆசை என்று ஒன்று இருக்குமேயானால் அது தன் நாவல்கள் நூலுருவாவது பற்றிய தேயெனவும் தாமோதரண்ணன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்.





"அண்ணை உங்கடை நாவல்களை புத்தகமாக்கித்தாறது என்ரை பொறுப்பு. அது எனக்கொரு கடமையுங் கூட" என்று நான் கூறிய போது "தம்பியைக் கண்டது சந்தோஷம், தம்பியைக் காண வேணுமெண்டு பலன்" என்பதையே மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருந்தார்.

'அட்வான்ஸ் லெவல்' பரீட்சை எழுதிய கையோடு அப்பியாசக் கொப்பி ஒன்றில் நான்கைந்து கதைகளை எழுதிக்கொண்டு அங்கீகாரத் திற்காக அலைந்தபோதுதான் தாமோதரண்ணனின் பழக்கம் எனக்கு ஏற்பட்டது.

பிள்ளையார் கோவிலுக்குத் தெற்காலே றெயில் கொம்பாட் மென்டைப் பழிப்பது போல அமைந்திருந்த மடங்களிலே மகிழ மரத்தோடு ஒட்டியிருந்த மடத்தில்தான் தாமோதரண்ணன் தனித்திருந்தார்.

ஒரு பௌர்ணமி முன்னிரவில்தான் என் கதைகளைப் படித்து விட்டு அவர் தனது அபிப்பிராயத்தைச் சொன்னார். "பிரமாதம், நல்லா எழுதிறாய் தம்பி."

அக்கதைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து தானே பத்திரிகை ஒன்றுக்கு அனுப்பி வைத்ததும், நம்பவே முடியாது நான்காவது கிழமை அக்கதை பத்திரிகையில் பிரசுரமாகியிருந்ததும்...

"ஐயா, மணியடிச்சு எவ்வளவு நேரமாச்சு, இன்னும் என்ன செய்துகொண்டிருக்கிறியள் அங்கை?" வைத்தியசாலை வாசலில் அப்போது நின்ற அதே காவலாளி இப்போது... இதோ என் முன்னால்...

என்னைத் தவிர பார்வையாளர்கள் எவருமே அங்கு இல்லா ததை அப்போதுதான் அவதானித்தேன். சகலரும் வெற்று சுடுநீர்ப் போத்தல்களையும், மதிய சாப்பாட்டுக் கோப்பைகளையும் அள்ளிக் கொண்டு ஏற்கனவே சென்று விட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னால் காஞ்சனாவும் கண்ணாடித் தாதியும் நோயாளி களுக்கு மருந்து கொடுப்பதற்குத் தம்மைத் தயார்படுத்திக் கொண்டிருந்தனர். கண்ணாடித்தாதி எதிர்பார்த்திருந்த எஸ்.எம்.எஸ். வந்திக்க வேண்டும். இப்போது மிகவும் உற்சாகத்துடன் இயங்கிக் கொண்டிருந்தாள்.

நான் அசைந்தால் தான் தானும் அசைவேன் என்பது போல காவலாளி முரண்டு பிடித்துக்கொண்டிருந்தான்.

"தாமோதரண்ணை நான் போயிட்டு வரப்போறன்."

அவரது வலுவிழந்த கைகளைத் தடவியவாறே சொல்கிறேன்.

"தம்பியைக் கண்டது சந்தோஷம்." அவரது கண்களில் ஓர் தந்தையின் கருணை பொங்கிற்று.

நான் ஓர் ஐந்தாறு மீற்றர் தூரம் நடந்ததை உறுதி செய்தபின்னரே காவலாளி அடுத்துள்ள வார்ட்டிற்குச் செல்ல ஆரம்பித்தான்.

"எப்ப பயணம்?" நோயாளி ஒருவரின் வாயினுள் தேமோ மீற்றரைத் திணித்தவாறே காஞ்சனா கேட்டாள்.

"சாந்தியின்ரை காணி அலுவல் ஒண்டுக்காக வந்தனாங்கள். பிள்ளைகள் இரண்டு பேருமே கொழும்பிலை எண்டபடியாலை காலமைக்கே போறம்... உன்னுடைய பிள்ளையள் என்ன மாதிரி?"

"இரண்டு கேள்ஸ், இரண்டு பேருமே ஜவ்னா யூனிவசிட்டியிலை மெடிசின் செய்யினம். அவரும் வாற வருசத்தோட றிட்டயர் பண்ணப் போறார். பிறகு ஒரேயடியா எல்லோரும் ரவுணிலை போய் செட்டிலாகிற பிளான்."

காஞ்சனா தேமோமீற்றரை எடுத்து தன் கண்ணெதிரே உயர்த்தும்போது இடையூறு செய்ய விரும்பாதவனாக விடை பெற்றவாறே வார்ட்டை விட்டு வெளியே வந்தேன்.

* * *





அடுத்த நாள் அதிகாலையிலேயே நானும் சாந்தியும் எழும்பி அவசர அவசரமாகக் காலைக்கடன்களை முடித்துக் கொண்டு எங்கள் பொருட்களையும், தமது உறவினர்களுக்காகப் பிறர் தந்துவிட்ட பொருட்களையும் முதுகொடியச் சுமந்துகொண்டு வீட்டு நுழை வாசலுக்கும் அப்பாலுள்ள கூட்டடிக்கு வந்தபோது சத்தம் எழுப்பி வந்த மோட்டார் வாகனமொன்று இறுதி உறுமலுடன் ஒளியை அணைத்தவாறே எங்கள் வீட்டுவாசலில் வந்து நின்றது.

"ஓட்டோ வந்திட்டுது, ஓட்டோ வந்திட்டுது" என்றாள் சாந்தி ஓட்டோவை ஒருநாளுமே காணாதவளைப் போல.

"ஓட்டோக்காரன் ஒண்டில் வெள்ளைக்காரனட்டை அல்லது வெளிநாட்டிலை வேலை செய்தவனாயிருக்க வேணும், சொன்னபடி சரியா அஞ்சரைக்கே வந்திட்டான் பார்" என்றவாறே வெறுங் காலுடனேயே நான் ஆயத்தமானபோது....,

"இப்ப நாங்கள் போறது கொழும்புக்கு" என்பதை சாந்தி ஞாபகமூட்டினாள்.

"கேற் திறந்தாச்சா" என்று நான் சாந்தியைக் கேட்ட போது "செல்லத்தம்பி" என கேற்வாசலில் ஒரு பெண்ணின் குரல் ஒலித்தது.

"இந்த அதிகாலை வேளையிலும் ஆரோ கொழும்பிலை குடுக் கிறதுக்குப் பாசல் கொண்டு வந்திருக்கினம் போலை கிடக்கு... பாசல் தாறதுக்கு ஒரு நேர காலம் இல்லையா?" என எமக்குள் பேசியவாறே செருப்பை மாட்டிக்கொண்டு கேற்றை நோக்கி நடந்தோம்.

"ஆரது?" முதலில் கேட்டது சாந்திதான்.

"அது..... நான் காஞ்சனா"

எனக்கு நெஞ்சில் ஓர் தீப்பொறி கக்கிற்று.

"என்ன விசயம் காஞ்சனா, இந்த நேரம்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செல்லத்தம்பி ஒரு சாட் நியூஸ். தாமுவப்பா போயிட்டார்."

காவி வந்த 'ரவலிங்பாய்க்' என் தோளை விட்டு நழுவிற்று. கைத்தாங்கலாகக் கேற்றைப் பிடித்துக் கொண்டேன்.

"நேற்று நீ வந்து போனதிலை இருந்து ஒரே சந்தோஷமாக இருந்தார். 'தம்பியைக் கண்டது சந்தோஷம்' எண்டு அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார். இராச்சாப்பாடே வேண்டாமெண்டு நீ கொணர்ந்து குடுத்த கோர்லிக்ஸ்சைத்தான் கரைச்சுத் தரச்சொல்லிக் கேட்டு நாலைஞ்சு கரண்டி குடிச்சார். காலமை இரண்டு இரண்டரை போலை அவற்றை கட்டிலடியிலை கொஞ்சம் வித்தியாசமான சத்தங் கேட்டுது. போய்ப் பார்த்தால் மூச்சுத் திணறிக் கொண்டிருந்தார். உடனே டொக்டரைக் கூட்டிக்கொண்டு வர ஆள் அனுப்பி சளியை எடுக்கவும் ஒக்சிசன் குடுக்கவும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து போட்டு நான் திரும்பிப் போய்ப் பார்த்தால் தலை சரிஞ்சு கிடந்தது."

அடிவயிற்றில் இருந்து கிளர்ந்தெழுந்த அதிர்வால் என் நெஞ்சு பதைபதைத்தது. கேற்றோடு உடல் சாய தொடர்ச்சியாய் என் தோள்கள் குலுங்கிற்று. நெற்றியில் பதித்த உள்ளங்கையில் கண்ணீரும் மூக்குச்சளியும் சங்கமித்து மணிக்கட்டுவரை வழிந்தோடிற்று.

"வாழ்க்கைத்துணை இல்லாமல் கடைசிவரை பிரம்மச்சாரியாகவே வாழ்ந்த தாமுவப்பாவுக்கு தனக்கெண்டொரு சொந்தம் கூட இல்லாததே கடைசியிலை பெரிய குறையாக இருந்தது. அதை நீ வந்து நிறைவு செய்த பிறகே அவற்றை சீவன் போயிருக்கு."

"நேற்றும் ஆஸ்பத்திரியிலை அவரைப் பார்த்ததுக்குப் பிறகு அதாலை நேரை அவற்றை அலுவலாகத்தான் லெக்சறறட்டையும் போயிட்டு இரவு எட்டு எட்டரை மணி போலைதான் வீட்டுக்கு வந்தார் பெரிய பைல் கட்டுகளோடை... இப்ப என்ன மாதிரி அவற்றை இறுதிச் சடங்குகள்." சாந்தியின் குரல் பனிக் குளிரோடு என் காதுகளில் ஏறியது.

"அநாதைப் பிணம் எண்டபடியாலை ஆஸ்பத்திரிதான் அடக்கம் செய்யும். இப்ப மோச்சறிக்கு 'பொடி' போயிட்டுது. இனி 'டீ.எம்.ஓ.' வந்ததுக்குப்பிறகு 'கொறினல்' வந்து விசாரணைகள் முடிஞ்சதுக்குப் பிறகுதான்... எல்லாம். எப்படியும் ஒரு பத்து பதினொரு மணியாவது செல்லும்.

சாந்தி என்னை ஏறிட்டுப் பார்ப்பது பளபளக்கும் என் விழித் திரைகளூடு புலனாயிற்று.

"உதுகள் எல்லாத்தையும் கொண்டே உள்ளை வை சாந்தி!" உடைந்தவாறே என் குரல் ஒலித்தது.

"எனக்கு இப்பதான் டியூட்டி முடிஞ்சது. இண்டைக்கு எனக்கு டே ஒவ். ஆனால், இந்த இன்சிடன்ராலை நான் இன்னுங் கொஞ்ச நேரத்தாலை ஆஸ்பத்திரிக்குத் திரும்ப வேணும். நீ இண்டைக்கு காலமை பயணமெண்டு சொன்னதாலை இப்ப வீட்டுக்குப் போற வழியிலேயே உனக்குச் சொல்லிப்போட்டுப் போவமெண்டு இதாலை வந்தன். அப்ப நான் வரப்போறன்..."

தான் வந்த சீநயின்ரியை 'ஸ்ராட்' செய்து காஞ்சனா தன் பலன்சை எடுத்து வாகனத்தை முன்னெடுக்கும்போது, அவளை இடிக்குமாப்போல கோவில் பக்கத்தால் ஓட்டோ வந்து நின்றது.

"சரிதானே ஐயா போவமே?" சொல்லி வைத்த நேரத்திற்குத் தான் வந்துவிட்டேன்தானே என்பது போல... சாரதி இறங்கி வந்தான்.

"போவம்... பஸ்ஸுக்கு இல்லை... ஆஸ்பத்திரிக்கு... கொஞ்சம் நில்லுங்கோ வாறன்" என்றவாறே கேற்றடியை விட்டு நீங்கி வீட்டிற்குள் நுழைகின்றேன்.

'கூட'டியில் செருப்பைக் கழற்றிவிட்டு வெறுங்காலோடு நான் உள்நுழைகையில் தோய்த்து வைத்த எனது வெள்ளை வேட்டி சால்வையை என் முன் நீட்டினாள் சாந்தி.

***(2005)***







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுக விழா

"அறிமுகமான ஆக்கள். ஆறு தருகினமாம். இனி வீடு வளவு தோட்டத்தறையள் போகப் பொடிச்சிக்கு நகைநட்டு. என்ன மோனை சொல்லுறாய்.?"

"ஆறு இலட்சமும் இந்த நாளையிலை ஒரு காசே? என்னோடை வேலை செய்யிற வேந்தனுக்குப் பத்துத் தாறம் எண்டு ஒரு சம்மந்தம் வந்ததாம். அவன் அதுக்கே ஓம்படேல்லை. நீ உதையும் ஒரு கதையெண்டு என்னைக் கேட்கிறியே?"

"காசையும் ஏறக் கேட்டு என்ன மோனை செய்யிறது? பொடிச்சியும் படிச்சதாம். ஆளும் வலு இலட்சணமானதெண்டு கேள்வி. இதுகளையெல்லாம் பாக்கக்குள்ளை காசு....."

"விசர்க்கதை கதையாதையணை அம்மா. கடைசி பத்தோடை ஆரும் வந்து கேட்டால் சொல்லு. யோசிச்சுச் சொல்லுறன். அதுக்குக் குறைய ஆரும் வந்து கேட்டதெண்டு இண்டு மேற்பட்டச் சொன்னியோ..."

அவள் படித்தவள். அழகானவள். யாவற்றிற்கும் மேலாக வசதி படைத்தவள். இருந்த போதும் தனக்கு வரப்போகும் கணவன் எந்த வித சீதனத்தையும் விரும்பாதவனாகத் தன்னையே விரும்பி வருபவனாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறாள். தனத்தைத் தேடுபவர்கள் அவள் மனதைக் கவரவில்லை. தன் மனதைக் கவர்ந்தவனையே அவள் தேடுகிறாள்.





அருமையான கதை! இத் தொகுதியில் இடம் பெற்றுள்ள முதலாவது சிறுகதை. இந்தக் கதையில் கதாசிரியரின் கற்பனாவாதத்தை விட அவரது முற்போக்கான சிந்தனைகளே கதையின் வெற்றிக்கு வழி கோலுகின்றன.

சுற்றிவளைக்காது நேரடியாகச் சொல்ல வந்ததைச் சொல்லிவிடுந் தன்மை, கதாசிரியரது நுண்மையான காட்சித் திறமை, வாழ்க்கையைப் புரிந்து கொண்ட விதம், நடுநிலைமையாய் நின்று பொருளுணரும் பாங்கு யாவும் இக்கதை முழுக்க விரவியுள்ளன. நல்ல கதைகளை எவரும் எழுதிவிடலாம். ஆனால், அவை சமுதாயத்திற்கு எந்த வழியில் உதவுகின்றன? எவ்வகையில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன? என்பதைப்பற்றியே நாம் சற்றுச் சிந்திக்க வேண்டும். இந்த வகையில் இந்தக் கதை ஆசிரியருக்கு மகத்தான வெற்றியையே தேடித் தந்துள்ளது.

வெறுமனே முற்போக்கான பாத்திரங்களை வலிந்து வரவழைத்து கதை மாந்தர்களாக உலவவிடாது, சமூகவியல் ரீதியில் சிந்தித்து....... செயலாற்றிய இந்த இளம் கலைஞர் அளையூரான் அவர்கட்கு ஒரு சபாஷ் போடத்தான் வேண்டும்.

"நேற்று மைமலுக்கை அரசடியூருக்கையிருந்து ஒரு சம்மந்தம் வந்தது மோனை. அரசடியூர் அப்புக்காத்து அருணாசலத்தாற்றை ஒரே மகளாம். பொம்பிளைப் பிள்ளையளின்ரை பள்ளிக்கூடத்திலை பொடிச்சி சங்கீதம் படிப்பிக்கிறதாம். பத்துப்பரப்பு வளவுக்கை மாடி வீடு, கரைச்சி வயல் நிலத்திலை இருபது ஏக்கர் போக எட்டுத் தருகினமாம். வாய்ச்ச சம்மந்தம் எல்லே மோனை? இதுக்கு என்ன சொல்லுகிறாய்?"

"அப்புக்காத்து அருணாசலத்தார் எண்டால் அந்த நாளையிலே என்னோடை படிச்ச பொடியன்களே காறித் துப்புவாங்கள். அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனுசன் என்ன சாதியிலை சம்மந்தம் செய்தவனெண்டு உனக்குத் தெரியுமே? வசதியாய்ச் சீதனங்கள் வாய்ச்சாப்போலை நல்ல சம்மந்தமே? விசர்க் கதையை விட்டுட்டு வேறை இடத்தைப் பார்."

"அப்புக்காத்தற்றை பெண்சாதி பகுதி எங்களைவிட ஒல்லுப் போலை சாதி குறைவுதான். அதுக்காண்டி? இந்த நாளையிலை உது களையெல்லாம் பார்க்க ஏலுமே மோனை?"

"அம்மா, எங்கடை அப்பு ஆத்தை அவையளின்ரை குலங் கோத்திரமென்ன? இப்ப நீ கேட்கிற இடத்து நிலவரமென்ன? நாலு காசு சேந்தாப்போலை.... நாலெழுத்துப் படிச்சாப்போலை.... பிறந்த குலங்கோத்திரமெல்லாம்... மறைஞ்சு போகுமோ? சீதனம் ஒரு சதமும் இல்லாமல் கட்டினாலும் கட்டுவனே ஒழிய ஒருக்காலும் இப்பேர்ப்பட்ட சம்மந்தத்திற்கு ஒத்துவர மாட்டன் ! ஓ சொல்லிப் போட்டன்!"

'இப்பேர்ப்பட்ட கலப்பு மணங்கள் வரவேற்கப்பட வேண்டியவை. இவைகளால் தான் சாக்கடையாகிவிட்ட இந்த சமூகத்திற்குப் புத்தொளி பிறக்கும் !' என மேடையில் முழங்குகிறான் அவளது அண்ணன், ஆனால்.... அவளோ தாழ்ந்த சாதிக்காரனுடன் காதல் என்பதை அறிந்த போது கொதித்தெழுகிறான்! 'நாடகமென்கிறது வேறை. நடைமுறை என்கிறது வேறை' அந்த வேடதாரியை இனங்கண்ட அவள், அண்ணனது வரட்டுக் கௌரவங் களை விரட்டி, அவனது முகமூடியைக் கிழித்துத் தான் காதலித்தவனையே கைப்பிடிக்கிறாள். பக்குவமான பாத்திர வார்ப்புகள். அருமையான களம், கதையை லாவண்யமாக நகர்த்துவது கதையின் மொழி நடை, யாவற்றிற்கும் மேலாக கதையின் கருவே கதையின் வெற்றிக்கு வழிசமைக்கிறது.

முற்போக்கான சிந்தனை நம் மண்ணுள் உரமாகி நின்ற வேளைகளில் அம் மண்ணிலிருந்து வெடித்தெழுந்த





எழுத்தாளர்களுள் நண்பர் அளையூரான் அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் நிற்பவர்.

வடமராட்சி பகைப்புலத்தினை வலு கச்சிதமாகத் தன் கதைகளில் படம் பிடித்திருக்கிறார் இவர். இத் தொகுதி யில் இரண்டாவதாய் இடம்பெற்ற சிறுகதையில் கதாசிரியரது பரந்த மனப்பாங்கையும் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்கின்ற திராவிட மனப் பாங்கையும் நன்கு இனங்காண முடிகிறது.

"பொன்னுத்துரை மாமா தன்ரை பொடிச்சிக்கு ஆள் விட்டிருக் கிறார் மோனை. பொடிச்சியும் வாசிற்றியிலை படிச்சதெல்லே? அதுபோக கொம்மானின்ரை சொத்து பத்துகளைப் பற்றி உனக்குத் தெரியாதே? வட்டிக் கடை நாகலிங்கதாற்றை ஒரே மோளைக் கட்டினவர்தானே கொம்மான். எப்படிப் பாத்தாலும் உன்ரை படிப்புக்கும் தகுதிக்கும் வேறை ஒரு இடமும் இப்பிடிப் பொருந்தி வராது. இதுக்கு என்ன மோனை சொல்லுறாய்?"

"உனக்கென்னம்மா பைத்தியமே பிடிச்சிருக்கு? போயும் போயும் பொன்னுத்துரையற்றை பெட்டையைக் கட்டச் சொல்லுறியே? படிக்கைக்குள்ளை அந்தப் பெட்டை அங்கையொரு பெடியனோடை சிநேகிதம் வைச்சிருந்ததெல்லே? அந்தப் பொடியன் எனக்குப் பழக்கமானவன். அவன் இவளைக் கூட்டிக் கொண்டு திரிஞ்சதைப்பற்றிக் கதை கதையாச் சொல்லுவான். அவன் 'மோட்டார் பைக் அக்சிடென்ரிலை' செத்தாப் போலை.... அந்தக் கதையள் எல்லாம் மறைஞ்சு போமே? உதையும் ஒரு கதை எண்டு என்னைக் கேட்டனியே? பொடியன்கள் அறிஞ்சாலும் நையாண்டி பண்ணப் போறாங்கள்."

"அதென்ன மோனை கட்டுப்பட்டதோ? அல்லது கட்டி விட்டதோ? உங்கை சில பொடியங்கள் வாழ்விழந்ததுகளுக்குக் கூட வாழ்வளிக்கிறாங்கள் .... நீயும் ஒரு கதை!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்புக்காத்தர் வளவுக்கை செம்பெடுத்தாலும் எடுப்பனே தவிர, ஒருத்தனோடை 'உல்லாசமா' வாழ்ந்த அவளை மட்டும் கட்டுறதுக்கு செத்தாலும், ஓம் பட மாட்டன். முடிவாச் சொல்லிப் போட்டன்".

அவளோ பட்ட மரம். இந்தச் சமூகத்தைப் பொறுத்த மட்டில் அவள் வெள்ளைச் சேலை போர்த்தி ஒதுக்கப் பட்டவள். நடைப் பிணமான தருணத்தில்தான் அதில் படர ஒரு பச்சோந்தி அவாவுற்றது. வேலி என்பது அவளைப் பொறுத்த மட்டில் வேண்டப்படாத ஒன்று. ஆனால், இந்தச் சமூகத்தைப் பொறுத்தமட்டில்....? இதை உணர்ந்த அவளுக்கு வாழ்வளிக்கத் தலைப்பட்டான் ஒருவன். போலிக் கட்டுக்களாலும் முரட்டுப் பிடிவாதங் களாலும் பட்டுப் போன இச் சமூகத்தில் புரட்சிக் காற்றுக் களாலும், புத்தொளிகளாலும் ஏற்படும் 'தளிர்ப்பு' இத் தொகுதியின் மூன்றாவது கதையில் உணரவைக்கப் படுகிறது. குறியீடுகளும், கதையை நகர்த்தக் கையாண்ட யுக்தியும் கதையினை மெருகேற்றி நின்றாலும், சாதாரண மாக உலவ விடப்பட்ட முற்போக்கான பாத்திரங்களே மனதை நிறைக்கின்றன.

எழுபதுகளின் இறுதியில் எழுத ஆரம்பித்து எண்பது களின் ஆரம்பப்படிகளிலேயே அளையூரான் பிரபலமாகி விட்டார் என்றால் அவர் எழுதிய இப்பேர்ப்பட்ட கதை கள்தான் அதற்குக் காரணமோ...? குறுகிய காலத்தில் வெறுமனே எண்ணிக்கைக்காகக் கதை பண்ணாது மன நிறைவைத் தரும் படைப்புக்களை அளித்து வந்தவர் அவர். அளையூரான் அவர்களுக்கு இத்தொகுதியில் இடம் பெற்ற இச் சிறுகதையே மிக வெற்றியளித்துள்ளது என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். பரந்த நோக்கில் சிந்தித்துச் செயலாற்றும் நண்பர் அளையூரான் உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியவர். மிகைக்காக நான் கூற





வில்லை. அவரது இந்தச் சிறுகதை ஈழத்தின் உன்னத முதற் பத்துக் கதைகளுள் அடக்கக்கூடிய தொன்றாகும்.

"வித்துவான்ரை பெட்டைக்கெண்டு நேற்று வீரகத்தியார் வந்தார் மோனை. பெடிச்சியை உனக்கும் தெரியுந்தானே? அதுதான் அந்த நாளையிலிலையிருந்து உன்னோடை கூடி பேப்பர்களிலை கதையள் எழுதித் திரிஞ்சுதே அதுக்குத்தான். சொத்துப்பத்துகள் அவ்வளவு இல்லாட்டிலும் உன்னைப்போல உலகம் அறிஞ்ச பொடிச்சி. நாலுந் தெரிஞ்ச பொடிச்சி, என்ன மோனை சொல்லு றாய்.?"

"என்னணை நீ என்னோடை பகிடியே விடுறாய்? இனி உப்பிடி யான சம்மந்தங்கள் பேசிக் கொண்டு வந்தாயெண்டால் பிள்ளையார் கோயில் பூங்கொல்லைக் கிணத்துக்கை தான் குதிப்பன் ஓ! சொல்லிப் போட்டன். அண்டைக்கும் அளையூர்ப் பள்ளிக் கூடத்திலை நடந்த மாதர் சங்க விழாவிலை பெட்டை மேடையிலை பேசிச்சுதாம். எவன் ஒருவன் சீதனம் இல்லாமல் எனக்குத் தாலி கட்டுவானோ அவனுக் குத்தான் கழுத்தை நீட்டுவன் எண்டு எல்லாக் குமர்களும் வைராக் கியத்தோடை இருந்தால் தான் இந்த உலகம் திருந்துமெண்டு. அம்மாடி ! உப்பிடி வீறாப்புப் பேசுறதுகளைக் கட்டிப் போட்டு என்னாலை மாரடிக்கேலாது. ஆளை விடு."

"நீ என்ன மோனை? நானுந்தான் கேட்க நினைச்சனான். நீயும் உதுகளைத்தானே சொல்லி ஊர் திருந்த வேணுமெண்டு இரவு பகலாக் கதையள் எழுதிறாய். கூட்டங்களிலை பேசிறாய். உப்பிடி யெல்லாஞ் செய்து போட்டு நீயே வாற ஒவ்வொரு சம்மந்தத்திலை யும் அதில்லை, இது குறைவு எண்டு குழப்பியடிக்கிறாய். உன்னைப் பெத்த என்னாலையே உன்னைப் பற்றி புரிஞ்சு கொள்ளேலாமல் கிடக்கு."

"எணை அம்மா கதையள், நாடகங்கள், எல்லாம் பேர் புகழுக் காக எழுதிறது. அதுகளாலை ஒரு சல்லிக் காசு கூடச் சம்பாதிக் கேலாது. அதெல்லாம் வெறும் பேர் புகழோடை சரி. அதையே வாழ்க்கையிலையும் கடைப்பிடிச்சால் வாழ்க்கையும் நாங்கள் எழுதிற சோகக் கதைகளைத்தான் அம்மா முடியும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபாஷ் ! அருமையான கதை இது! மிகவும் அற்புதம்! சொல்வது ஒன்று செய்வது இன்னொன்று! இப்பேர்ப் பட்ட 'மாறுதல்களைச்' செய்பவர்களை இந்தச் சமூகத்தால் மன்னிக்கவே முடியாது. இவர்கள் ஒதுக்கப்பட வேண்டியவர்கள். இந்தச் சமூகத்திலிருந்து விலக்கப்பட வேண்டியவர்கள். இந்த முகமூடி மனிதர்களை, விஷக் கிருமிகளை, நச்சுப் பாம்புகளை விரட்டியடிக்க சமுதாயத் தின் ஒவ்வொரு அங்கத்தவர்களும் திட சங்கற்பம் பூண வேண்டும். தொகுதியின் இறுதிக் கதையில் முடிவாக அளையூரான் வேண்டிக்கொள்வது வாசிப்போர் மனதையே தட்டி எழுப்பி விடுகிறது. இந்தக் கதையிலேயே நூலிலேயே.... நெஞ்சத்தைத் தொடும் உச்சக்கட்டம் இது.

"அப்ப, உன்ரை முடிவுதான் என்ன? ஆரையாவது மனதிலை வைச்சிருக்கிறியோ? அந்த இழவையாவது சொல்லித் தொலையன். இந்த வயது போன காலத்திலை இந்தக் காரியத்துக்காக நானும் எவ்வளவு பங்கப்படுறன்? நான் கவுண்டு போக முன்னம் கடைசியாக உன்னைக் கலியாணக் கோலத்திலையாவது கண்டிட்டுப் போவம் எண்டு பாத்தால் ..... நீ என்னடா வெண்டால்?"

"நான் எழுதின கதையளைத் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிடப் போறன். அந்த வெளியீட்டு விழாவைப் பெரிய அறிமுக விழாவாக அளையூர்ப் பள்ளிக் கூடத்திலை வைக்கப்போறன். அந்த அறிமுகவிழா என்ரை புத்தகத்துக்கு இல்லை. என்ரை பேருக்கு. என்ரை புகழுக்கு. இப்ப 'ஏழெட்டு' கேக்கிறவை அதுக்குப் பிறகு 'பத்து, இருபது' எண்டு கேப்பினம். இப்ப ரீச்சரையும், கிளறிக்கல் பொம்பிளையளையும் தாறவை அறிமுக விழாவுக்குப் பிறகு டாக்குத்தர், எஞ்சினியர், எக்கவுண்டன் பொம்பிளையளையே தர வெளிக்கிடுவினம். வேணுமெண்டால் நீ இருந்து பாரன்."

"இருந்துதான் பார்க்கிறனோ அல்லது அதுக்கிடையிலை கவுண்டுதான் போறனோ அளையூர் விநாயகனுக்குத்தான் தெரியும்.





என்ன கூத்தெண்டாலும் செய்யிறதை கெதியாச் செய்து முடிச்சு நான் கண்ணை மூடுறத்துக்கு முன்னாலையாவது கட்டிப்போடு."

"சம்பாத்தியத்தைப் பாத்துச் சீதனத்தை ஏத்திற இந்தச் சமுதாயம், பேராலை.... புகழாலை..... நான் சம்பாதிச்சதுக்கும் கூடுதலான ஒரு தொகையை ஒதுக்கிறதுக்குத்தான் ஊரளாவிய முறையிலை இந்த அறிமுகவிழாவை நான் நடத்திறன்."

இப்பேர்ப்பட்ட முற்போக்குவாதியை, சிந்தனைச் சிற்பியை, இலக்கியச் சுடரைப் பெற்றதற்கு இந்த அளையூர் மட்டுமல்ல, வடமராட்சி மட்டுமல்ல, ஈழத்திருநாடே ஏன் சருவதேசமுமே பெருமைப்பட வேண்டும், இந்த ஒரு படைப்பை மட்டுமல்ல, அளையூரான் மென்மேலும் நூல்களை எழுத வேண்டும். அவையும் இதனைப் போல ஊரிற்கு..... இந்தச் சமூகத்திற்குப் பயன்படும் உயர் பொக்கிஷங்களாக அமைய வேண்டுமென்று இளம் கலைஞர் நண்பர் அளையூரானை இந்த மேடையில் நான் பகிரங்கமாகவே கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அறிமுகவிழா சாதாரண ஒரு நூல் அறிமுக விழா மட்டுமல்ல. இரண்டு தசாப்தங்களாக இலைமறை காயாக இலக்கிய உலகில் இருந்த ஒரு தரமான இலக்கியவாதியை, சிந்தனைச் சிற்பியை, ஒரு முற்போக்குவாதியை, மேலான ஒரு இலக்கியக் காவலனை சருவ தேசத்திற்குமே இனங் காட்டும் ஒரு மாபெரும் அறிமுக விழா எனக் கூறிக் கொண்டு, இதுவரை நேரமும் மிகவும் அமைதியாக இருந்து என் கருத்துக்களைக் கேட்ட உங்கள் அனைவருக்கும் நன்றிகூறி, இத்துடன் எனது சிற்றுரையை முடிக்கிறேன்.

வணக்கம்!

**(1983)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றைப்பனை

மாணிக்கனது மனம் இன்று ஒரு நிலையில் இல்லை. மலர்விழி சொல்லப்போகும் அந்தப் பதிலில் தான் அவனது வாழ்வே தங்கியுள்ளது. நல்லதொரு பதிலை அவள் சொல்வாளா?

நெஞ்சில் முட்டிமோதும் நினைவலைகள் மத்தியில் படலையைத் திறந்து, கொட்டிலடிக்கு வந்தவன், இடுப்பில் முட்டி மோதிய முட்டிகள் இரண்டினையும் கழற்றி, அருகிலிருந்த வடலியில் கொழுவிவிட்டு, உள்ளிருந்த பனங்கொட்டிலில் குந்திக் கொண்டான்.

இடுப்பில் கனத்த இயனக்கூடு அவனுக்குப் பெரிதாகத் தெரியவில்லை. கணுக்காலில் அணிந்திருந்த காதோலையும், மார்பை வியாபித்திருந்த மாதோலையும் கழற்றியவன், வெறுமையாகக் கிடந்த வானத்தை நெடுமூச்சுடன் நோக்குகிறான்.

கால்களைப் பிணைப்பதற்காய் அணியும் தளைநாரை எடுத்து அருகே வைத்தவன் இடுப்பை ஆக்கிரமித்திருந்த இயனக்கூட்டையும், ஏறுபட்டியையும் அவிழ்த்துப் படிப்படியாக... இறக்கி வைக்கிறான்.

கடந்த ஆண்டு வயலூரிற்கு வட்ட விதானையார் தறைக்கு வெங்காய வைப்புக்குச் சென்றபோதுதான் அது நிகழ்ந்தது!

வயலூரில் வாழைத்தறையில் வெங்காய வைப்பென்றால் வட்ட விதானையார் கிராமத்தின் கிழக்கேயுள்ள திடலைச் சார்ந்த





'சம்பளகாரரைக்' கொண்டுதான் முன்னர் செய்விப்பது வழக்கம். தனது நண்பர்களுடன் தறையில் இறங்கிய மாணிக்கன், மத்தியானச் சாப்பாட்டு வேளையில்தான், கொத்திற்கு வந்திருந்த வடலித் திடலாரை விட வெங்காய வைப்பிற்கெனச் செம்பாட்டுத்திடல் 'பெண்டுகள்' வந்திருப்பதையும் அவதானித்தான்.

வடலித் திடலில் ஆண்கள் சீவல் தொழில் செய்த மீதி நேரத்திற்கு இப்படித் தறைகொத்துப் போன்ற பகுதிநேர வேலைகளுக்கும் செல்வது முன்னர் வழக்கத்திலிருந்தது. ஆனால், அயலூரான செம்பாட்டுத் திடலில் நிலைமை முற்றிலும் மாறுபட்டிருந்தது. அப்பகுதி ஆண்கள் செருப்புக் கட்டுவதையும், விறகு கொத்துவதையுமே தொழிலாகக் கொண்டிருந்தார்கள். பெண்களே இப்படி வெங்காய வைப்பிற்கென்றும், களை பிடுங்குவதற்கென்றும் சம்பளத்திற்காகப் பக்கத்தூரான வயலூரிற்குச் சென்று வந்தார்கள்.

பலதையும் இனங்கண்டுவந்த மாணிக்கனின் கண்கள் ஓர் இடத்தில் நிலைத்தன. வடலிப் பருவம்... குருத்தோலை மென்மை.... சார்வு நிறம்... பாளைச் சிரிப்புதிர்த்துப்... பார்ப்பதற்குப் புதிதாக வார்த்த பனாட்டுத் தட்டாகப் பளபளப்புடன் காட்சியளித்த அவள், தன்னையே வைத்த கண் வாங்காமல்...?

"மச்சான் பங்கார் பாரடா!" பரந்த மார்பில் நிறைந்து வழிந்த வியர்வையைத் துவாய்த் துண்டால் துடைத்தவாறே, பக்கத்தில் நின்ற வீரனுக்குச் சுட்டிக் காட்டினான் மாணிக்கன்.

"ஆர் வல்லியாற்றை மோளைச் சொல்லுறியே?"

"எந்த வல்லியாற்றை மோள்?"

"அதுதான் மச்சான்... சிலம்படி வல்லியாரெண்டு முடப்பனை முடக்கிலை இருக்குதுகள்..."

"என்ன பூராயக்கதை உது? அவருக்கு உப்பிடி ஒரு லட்சணமான பொடிச்சியோ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியானச் சாப்பாடு முடிந்து பின்னேர வேலை ஆரம்ப மாகியது. மூன்று மணியிருக்கும். வானமே இருண்டது. தறையில் நிற்க முடியாதளவிற்குப் பலத்த மழை. சம்பளகாரர் யாவரும் குடிலை நோக்கி ஓடி வந்தனர்.

தலையில் தலைப்பாகையாகச் சுற்றியிருந்த துவாய்த் துண்டை எடுத்து முகத்தைத் துடைத்தவாறே திரும்பிய மாணிக்கனுக்கு, உச்சிப்பனையிலிருந்து சறுக்கியதைப் போன்ற ஒரு பிரமை. அந்த 'வல்லியாற்றை' மகள்... அதே ஏக்கப் பார்வையுடன்! அருகில் நின்ற வீரனை அழைத்தவாறே, அவளை அணுகுகிறான்.

"உங்கடை பகுதிக்கு என்ன மாதிரி விதானையார் சம்பளம் தாறார்?" அவளது பக்கத்தில் நின்ற சின்னிக் கிழவியை மாணிக்கன் வினவினான்.

"ஏன் மோனை அந்தச் சீத்துவக்கேட்டைக் கேக்கிறாய்? நாள் முழுக்க உழைச்சதுக்கு ஐம்பது ரூபாதான் கூலி" - இருமிக் களைத்த கிழவி குடில் கப்பை பக்கபலமாய்ப் பிடித்தவாறே கூறுகிறாள்.

"என்னணை பெத்தாத்தை, அநியாயக் கதை இது? ஏன், கூட்டித் தரச் சொல்லிக் கேக்கிறதுதானே?"

"கேட்டாப்போலை கிடைச்சிடுமா?" ஓ! ஒலித்தது குயிலா? அன்றி அவள் குரலா? அந்த வல்லி மகள் மலர்விழிதான் கூறினாள்.

நிலத்திலிருந்து கொண்டெழும்பிய காற்று நெடும்பனைக் காவோலைகளைச் 'சரசர'க்க வைத்துவிட்டு, குருத்தோலைகளுக்குத் தாவியது.

"நாளுக்கு எழுபது கேளுங்கோ! இல்லாட்டி வைப்புக்கு வரேலாது எண்டு சொல்லுங்கோ!"

"உங்களுக்கு என்ன மாதிரி?"





"எங்களுக்குக் கொத்து வேலை எண்டபடியாலையாக்கும் நூறு ரூபாத் தாறார்."

"ம்...ம்... மழைதான் விட்டுட்டுதே, பிறகுமென்ன மெனக்கேடு?" வட்ட விதானையார் தறையில் நின்று சத்தமிட்டார்.

அன்றைய... அந்தச்... சந்திப்பின் விளைவு! வயலூருக்கு... சீவலுக்குச் சென்று வரும் வழியில் செம்பாட்டுத் திடலில் வல்லி 'வளவுக்கையும்' வடலிப் பருவப் பனையொன்றை மாணிக்கன் பார்த்துக் கொண்டான்.

"முன்னை உங்கடை பகுதியார் எங்களோடை வலு வாரப்பாடு தம்பி. அந்த நாளையிலை உன்ரை கொப்பு கோத்தை கூட வயலூருக்குப் போகக்குள்ளை மைமல் பொழுதெண்டாலும், இந்தப் படலையையும் ஒருக்கால் திறந்துதான் போவினம்."

ஆரம்ப காலங்களில் செம்பாட்டுத் திடலைப் போலவே வடலித் திடலும் பொருளாதாரத்தில் இருந்ததையும், காலஞ் செல்லச் செல்லப் படிப்பறிவாலும் தொழில் துறையாலும் வடலித் திடலார் மேம்பட்டு செம்பாட்டுத் திடலாருடன் இருந்த தொடர்பைத் துண்டித்ததோடு, 'சம்மந்தம்' வைத்துக்கொள்வதையும் நிற்பாட்டியதையுமே கூட்டிக்காட்ட வல்லி அதைச் சூசகமாகக் கூறினார் என்பதை மாணிக்கன் நன்குணர்ந்து எதையுமே கூறமுடியாதவனாக மௌனியாகிவிட்டான்.

"அந்த நாளையிலை, நான் ஆடு மாடு வளர்த்த காலங்களிலை அதுகளுக்குத் தீனிக்காக சேர்வை சீவுறதுக்கு நொங்கு பொறுக்க வெண்டு கருக்கலோடையே நித்திரைப்பாயை விட்டு எழும்பிப் போடுவன். நொங்கு பொறுக்காலை வந்த பிறகுதான் நான் விறகு கொத்துக்குப் போறது."

"இரண்டு பனை பாறி இறங்கவே எங்களுக்கு நாரி சந்தெல்லாம் உழைப்பு. எப்பிடி அப்பான் இந்த வயதிலையும் உப்பிடி உசாரா விறகு கொத்திறியள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பிடிக் கேள் மோனை. இந்த நாளையில் கூப்பன் மா புட்டிலும், மிச்சாட்டு அரிசியிலும் என்ன சத்துக் கிடக்கு? அந்த நாளையிலை ஒடியல் புட்டையும், பாணிப் பினாட்டையும் திண்டு கூழையும் குடிச்சுத்தான் எங்கடை தேகத்தை வளத்து இப்பிடி வலுவாக்கினம். அந்த அத்திவாரத்தாலைதான் இந்த வயதிலையும் இப்பிடித் தொழில் செய்ய முடியுது. இப்பவும் வாற போற ஆக்களுக்கு குடுக்கிறதே தவிர, உன்னாணை உந்தக் கோப்பி தேத்தண்ணியளை நான் பாவிக்கிறது கிடையாது கண்டியோ? காலம்பற வெள்ளன முகங்கழுவின உடனை நான் இப்பவும் குடிக்கிறது பழந்தண்ணிதான் மோனை."

வல்லியுடன் கதை கொடுத்தாலும், மாணிக்கனின் கண்கள் அடுப்படியிலேயே நிலைத்திருக்கும். தேத்தண்ணிச் சிரட்டையுடனும் பனங்கட்டிக் குட்டானுடனும் அவள் வந்து 'தரிசனம்' கொடுக்கும் அந்த ஐந்து நிமிடங்களுக்காக அவன் மணிக்கணக்கில் காத்திருந்த நாட்கள் ஏராளம்.

அன்றும் வழக்கம் போலச் சீவலை முடித்தவாறே மால் பக்கம் வந்தவன், ஒருமுறை உள்ளே எட்டிப் பார்த்தான். எவருமே இல்லை. ஆனால் அடுப்படிப் பக்கத்திலிருந்து ஒரு முனகல் சத்தம் மட்டுமே வெளிவந்தது. கையோடு குசினிப் படலையையும் திறந்தவனுக்கு ஒரு பேரதிர்ச்சி காத்திருந்தது.

முழங்கால்கள் இரண்டிற்குள்ளும் முகத்தைப் புதைத்தவாறே மலர்விழிதான் முனகிக் கொண்டிருந்தாள். அவசர அவசரமாக உள்ளே நுழைந்தவன், அவளை அணுகியபோது, தாங்க முடியாத வயிற்றுவலியால் அவள் நிலைதடுமாறுவது அவனுக்குப் புரிந்தது.

வயலூர் சென்று ஆயுர்வேதப் பரியாரியாரை அழைத்து வந்து வைத்தியம் பார்த்து, அவளைத் தூக்கிச் சென்று மாலுக்குள் வாங்கிலில் படுக்க வைத்து, காவோலை வெட்டிக் கொக்காரை, பன்னாடை, ஊமல் பொறுக்கி வந்து சூட்டடுப்பை மூட்டி,





'தேத்தண்ணி' போட்டுக்கொண்டுவந்து, நுங்குப் பருமிள் ஒன்றெடுத்து பரியாரியாரின் தூளைப் பாணி கலந்து தீத்தி, பின்னர் தேநீரைக் குடிக்கக் கொடுத்த போதுதான் நாவைக் கூட்டி அவள் கதைக்க ஆரம்பித்தாள்.

"இந்தக் கல்லடைசல் குத்து இடைக்கிடை எனக்கு வாறது. அந்த நேரங்களிலை ஒண்டுமே எனக்குத் தெரியாது. தலைக்கை ஒரேயடியா அம்மிப்போடும். இண்டைக்கெண்டு பாத்து புளியடி வைரவர் கோயிலிலை வேள்வியெண்டு சிலம்படிக்கு அப்பு போனவர்தான்... அப்புவை இன்னும் காணேலை! நல்லவேளை கடவுள் போலை ஆபத்துக்கு வந்து உதவினியள்..." என அவள் மால் கப்பில் சாய்ந்திருந்தவாறே கூறியதும்...

அன்றைய அந்த நெருக்கம்... படிப்படியாகக் கூடிக்கொண்டு வந்தது. அச்சமயத்தில்தான் மாணிக்கன் தனது எண்ணத்தை முடிவாக்கி அதை அவளிடம் கூற, ஒரு நல்ல நாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

வயலூர் பிள்ளையார் கோவிலில் மூன்றாந்திருவிழாவிலன்று வடக்கு வீதியில் வல்லியின் சிலம்படியே விசேட நிகழ்ச்சி என வீரன் மூலம் கேள்விப்பட்ட வேளையில்தான் 'அதைச் சொல்ல' அன்றே நல்ல நாள் என்று அடுக்கெடுத்த மாணிக்கன் மைமல் பொழுதாக மலர்விழி வாவு மாலிற்குள் நுழைகிறான்.

"மலர்! உன்னோட ஒரு சங்கதி பறைய வேணும்."

"என்ன... அப்பிடி... புதுநாணயமா இண்டைக்கு?"

"அப்பிடி ஒண்டுமில்லை மலர்! நான்... உன்னைக் கலியாணங் கட்ட விரும்புறன்."

அதைக் கேட்டதும் அவள் எதுவுமே பேசாது பேயறைந்தவள் போல... ஏன் இவளுக்கு இதில் புறியமே இல்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன மலர்... நான் சொல்லுறன், நீ ஒண்டும் பறையாமல்..."

"நான்... நான் எப்பிடி?"

"என்ன மலர், என்ன சொல்லுறாய் நீ?"

"எனக்கு எப்பவோ கலியாணம் நடந்திட்டுது"

உச்சிப்பனையில் இருந்தபோது புயல் காற்று வீசியதைப் போல இருந்தது மாணிக்கனுக்கு.

"என்ன, ... நீ... என்ன பூராயம் பிடிக்கிறாய்?"

"எனக்கும் அவருக்கும் சோறு குடுப்பிச்சாச்சு. அதுக்குப் பிறகு அவர் தங்கடை ஊரிலையிருந்து இஞ்சை அடிக்கடி வந்து போறவர். நல்ல நாளாய்ப் பாத்து தாலி கட்டை முடிப்பம் எண்டு அப்பு சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் அதுக்கிடையிலை வெளி நாட்டிலை வேலை கிடைச்சு... அவர் போட்டார். போட்டு வந்து உனக்குத் தங்கத் தாலியே கட்டுறன் பார் எண்டு சொல்லிப்போட்டுப் போனார். போனவர் போனது தான். போய் ரண்டு வருசமாச்சு... இன்னும் ஒரு கடதாசி கூடப் போடேல்லை."

"அப்ப இந்தச் சங்கதியை இவ்வளவு நாளும் நீயோ அல்லது உன்ரை கொப்புவோ ஏன் எனக்குச் சொல்லேல்லை?"

"அவற்றை பகுதியிலை ஒரு சின்னப் பிசகு இருந்ததாலை அருளாமல்தான் சோறு குடுப்பிச்சு சடங்கு நடந்தது. பிறகு வெளி நாட்டுக்கெண்டு போயும் ஒரு மறுமொழிகூடப் போடாதபடியாலை அது பற்றி மாப்பிள்ளை பகுதியும் ஒண்டும் பறையாத படியாலை ஒருநாள் யோசிச்சுப்போட்டு அப்புதான் சொன்னார். 'எனக் கெண்டால் அவன் திரும்பி எங்கடை வளவுக்கு வருவான் எண்ட நம்பிக்கை ஒல்லுப்போலையும் இல்லைப் பிள்ளை. எங்களுக்கெண்டு இப்பிடி ஒரு சீலக்கேடு வருமெண்டு நான் கனவிலைகூட நினைக் கேல்லை. பேசாமல்... அந்தக் கதையையே விட்டுடுவம்...' எண்டு. அதுதான் அதைப்பற்றி நான் மூச்சுக்கூட விடேலை."





"சோறு குடுப்பிச்ச அளவிலை தானோ?"

"இல்லை! மூண்டாம் வருஷம் வயலூர் பிள்ளையார் கோவில் திருவிழாவுக்கெண்டு வந்து இரவிலை இஞ்சைதான் பத்து நாளும் தங்கியிருந்தவர்."

"எட... உப்பிடி எல்லாம் நடந்தவனுக்கு ஒரு கடதாசி கூடப் போட...?"

"அதுதான் நாங்களும் யோசிக்கிறம்."

அன்றைய சம்பவத்திற்குப் பிறகு ஏழெட்டு நாட்களாக மாணிக்கன் வல்லி வளவுப் படலையைத் திறக்கவேயில்லை.

பத்தாம் நாள் மைமலுக்குள் மால் வாசலில் நெடும்பனையாக நின்ற அந்த உருவத்தைப் பார்த்து அவள் நிமிருகிறாள்.

"அண்டைக்குப் பறைஞ்ச விசயத்தைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்திருப்பாய் எண்டு நம்புறன்."

எரிந்து கொண்டிருக்கும் கை விளக்கின் சுவாலையைப் பார்த்தவாறே மாணிக்கன் கூறுகிறான்.

"......"

"இப்படியெல்லாம் உன்னை மறந்திருக்கிறவன் ஊருக்கு வந்தாலும் உன்னட்டை வருவான் எண்டு நானும் ஒல்லுப்போலை யும் நம்பேல்லை. அதனாலை நான் கேட்ட மாதிரி ஒரு முடிவுக்கு வாறதுதான் நல்லதெண்டு நம்புறன்."

"பத்து நாளா யோசிக்சு நானும் ஒரு முடிவுக்கு வந்திட்டன். எதுக்கும் அப்புவோடையும் யோசிச்சுப் போட்டு மறுமொழி சொல்லுறன்."

வல்லியின் அந்த முடிவை ஆவலோடு எதிர்பார்த்து இருந்த நாட்களில்... ஒரு நாள் நடந்த சம்பவம் அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று ஒரு பௌர்ணமி தினம். வயலூர் பிள்ளையார் கோவிலிற்கு காத்தான் கூத்துப் பார்க்கவென இரவுச் சாப்பாடு முடிந்த கையோடு வல்லி சென்றுவிட்டார். கூத்துப் பார்க்கவென தனது வளவிலிருந்து கிளம்பி வந்த மாணிக்கன் ஒருக்கால் மலர்விழியினது வளவையும் எட்டிப் பார்த்துக் கொண்டு போவோம் என்ற எண்ணத் துடன் படலையைத் திறந்து உள்ளே நுழைந்தான்.

மாலிற்குள் குந்தியிருந்தவாறே கிழிந்த பன் பாயொன்றிற்கு பொத்தல் போட்டுக் கொண்டு இருந்தாள் மலர். மாணிக்கனின் வரவால் அவளின் முகம் சார்வோலையாக மலர்ந்தது.

"வாருங்கோ, என்ன இந்த நேரத்திலை..."

"காத்தான் கூத்துப் பார்க்கப் போறன். அதுதான் ஒருக்கால்..."

"கூத்து, பிள்ளையார் கோயிலடியில."

"அப்ப நான் போட்டு வாறன்."

"நீங்கள் கூத்துப் பார்க்கப் போறியளோ? இல்லாட்டி கூத்தாடப் போறியளோ?"

"ஏன் மலர் அப்படிக் கேக்கிறாய்?"

"இல்லை, முகமெல்லாம் ஒரே பூசல் மாவாக் கிடக்கு."

"வேர்வையோடை போட்டது. சுண்ணாம்பு போலைப் படிஞ்சு போச்சுது போலை கிடக்கு. அது சரி நீ கூத்துப் பார்க்க வரேலையோ?"

"ஏன் காத்தான் கதை உங்களுக்கு இவ்வளவு நாளும் தெரியாதோ? அதுபோக, இப்ப நீங்களும் பெரிய பெரிய சங்கதிகள் எல்லாம் செய்யிறியளாம்."

"என்னத்தைச் சொல்லுறாய் மலர்?" - முற்றத்து ஒற்றைப்





பனையின் கீழ் குவித்திருந்த வெண் மணலில் குந்தியவாறே மாணிக்கன் கேட்கிறான்.

"வயலூர் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாவிலண்டு உங்களுக்கும் வட்டவிதானையாருக்கும் பெரிய போராமே?"

"எட! அதைச் சொல்லுறியே? உனக்கார் சொன்னது?"

"அப்புதான் சொல்லிப் புளுகினார். மாணிக்கன் மட்டும் அண்டைக்கு இல்லாட்டில் வயலூரார் எங்களையெல்லாம் ஏறி மிதிச்சிருப்பாங்களெண்டு."

"பின்னையென்ன மலர்? நாங்களும் தேர் வடம் பிடிக்கப் போறம் எண்டு கேட்டம். 'காவோலை கட்டி இழுத்தவைக்கு வடம் பிடிச்சு தேர் இழுக்கக் கேக்குதோ?' எண்டு விதானையார் நிண்டார். ஓகோ அப்பிடியோ சங்கதி? அப்ப இண்டு மேற்பட்டு நாங்கள் ஒருதரும் குடிமைத் தொழில் செய்யிறதில்லை எண்டு சொல்லிப் போட்டு எல்லாரும் வந்திட்டம்."

"உப்பிடிக் குடிமைத் தொழிலை விட்டுட்டு எத்தினை நாளைக் கெண்டு சீவிக்கிறது?"

"இதுதான் இனி முடிவு மலர். ஆரம்பத்திலை கொஞ்ச நாளைக்கு கயிட்டமாகத்தான் இருக்கும். போகப்போக எல்லாம் பழகீடும். இந்த இரண்டு கிழமைக்கை நடந்த சங்கதியளை நீ கேக்கேல்லை...! இப்ப நாங்கள் சீவிற கள்ளு, கருப்பணியள் எல்லாம் கோப்பிறேசனுக்குத்தான் நேரை போகுது. முன்னைய மாதிரி வீடு வீடாகக் கொண்டு திரிஞ்சு குடுக்கிறதில்லை. அத்தோட இனி வெங்காய வைப்பு, களை புடுங்கல் எண்டு எங்கடை பகுதிப் பெண்டுகள் எங்கையும் அலையத் தேவையில்லை. மூடல், குட்டான், பாய் இழைக்கிற வேலையோ அல்லது பனங்கட்டி, பாணிப்பனாட்டு, புழுக்கொடியல் போடுற வேலையோ எதுவெண்டாலும் இனி அவையள் எல்லாரும் எங்கடை பனம்பொருள் நிலையத்திலையே வந்து வேலை செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேமாதிரித்தான் சலவைத் தொழிலாளிகளையும், சாய்ப்புக் காரர்களையும் குடிமைத் தொழில் செய்ய வேண்டாமெண்டு அறிவிச் சிருக்கிறம். ஆரும் அப்பிடி இசகுபிசகா நடந்தால், எங்கடை சங்கத் தாலை தண்டனை குடுக்கிறதாகவும் முடிவெடுத்திருக்கிறம். இப்ப என்னெண்டால் வயலூரிலை ரகசியமா வீட்டிலை வைச்சுக் கள்ளுக் குடிச்சவைக்கு வயித்திலையடி. இப்ப மைமல் பட்டத்துக்குப் பிறகுதான் ஒளிச்சொளிச்சு எல்லாரும் தலைக்குத் துண்டைப் போட்டுக் கொண்டு கோப்பிரேசனுக்குப் போயினம். கிழடு கட்டைகள் எல்லாரையும் முகச்சவரஞ் செய்யுறதுக்குக் கூட சைக்கிளிலை ஏத்திக்கொண்டு சாய்ப்புக்குப் போயினம். துடக்குத் துணியளையும் தீட்டுத் துணியளையும் அவையவையே பொட்டளி கட்டிக்கொண்டு லோன்றிக்குப் போயினம். அதைவிட முசுப்பாத்தி, வயலூரிலை ஆரும் செத்தாலும் பிரேதம் காவுறது, சவம் எரிக்கிறது எல்லாம் வெள்ளாமாக்கள்தான். எப்பிடி நாங்கள் தொடங்கியிருக்கிற வேள்வி?''

''பெரிய ஆள்தான் நீங்கள்'' என மலர் சொன்னதும், தொடர்ந் தும் அன்று நள்ளிரவு வரை அவளுடன் அங்கிருந்துவிட்டு பின்னர் கூத்தே பாராது திரும்பியதும்... எண்ணங்கள் கருப்பனீராக இனித்தன.

இவை நடந்த சில நாட்களின் பின்னர்தான்... எவருமே எதிர் பாராத... அது கனவுபோல் நடந்து முடிந்தது!

வெளிநாட்டிலிருந்து திரும்பிய மலரது கணவன் நேராகச் செம்பாட்டுத் திடலிற்கே ஓடோடி வந்து சேர்ந்தது. விரக்தியின் விளிம்பிலிருந்த வல்லி வாயெல்லாம் பல்லாக மாணிக்கன் பகுதிக் குக்கூட அழைப்பு விடுத்து பெரும் 'டீங்காக' மகளின் தாலிகட்டுச் சடங்கை முடித்தது.

ஆறு மாதங்கள் கழிந்தன. இப்போதெல்லாம் வல்லியின் வளவுப் படலையையே மாணிக்கன் திறப்பதில்லை. கள்ளும் காய்வெட்டிக்





கள்ளாகிவிட்டதால் அங்கு சீவலையும் அப்போதே அவன் நிறுத்தி விட்டான்.

அண்மையில் தான் அதிர்ச்சி தரும் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது. திடீரென்று 'ஹாட் அற்றாக்' கால் பாதிக்கப்பட்ட மலர்விழியின் கணவனை கிராமத்து ஆஸ்பத்திரியில் 'டாக்குத்தர்' மார் கை விரிக்கவே பெரியாஸ்பத்திரிக்கு ஏற்றினார்கள். பெரிய 'டாக்குத்தர்' பரிசோதித்து விட்டுச் சொன்ன பதில் பேரதிர்ச்சியாகவே இருந்தது. ஏற்கனவே இருமுறை இந்நோய்க்கு ஆளாகியிருக்கின்றானாம் அவன். இது இறுதி முறை. ''எங்கடை கையிலை ஒண்டுமில்லை. இனிக் கடவுள் விட்ட வழி!''

''புளியடி வைரவா!'' மலர்விழி தன் குலதெய்வத்தை வேண்டிக் கொண்டாள்.

வேண்டியபடியா விடயங்கள் நடக்கின்றன?

ஆறு மாதங்கள்... அவளை வாழவைத்தவன், அதுவே போதுமென்ற ஆறுதலுடன்...!

''ஐயோ என்ரை ராசா! என்னை விட்டுப் போட்டியோ?'' - மலர் விழி ஒப்பாரி வைத்து ஓலமிட்டாள். நெஞ்சு நெஞ்சாக இடித்தாள்.

அயலவர்கள் கூடி வந்து பலவாறும் தேற்றினர்.

''உனக்கெண்டு உது நடந்ததே பிள்ளை? என்ரை நடுவிலாளுக் கும் உன்ரை வயதுதானே? அவளின்ரை புருஷனும் சீவலுக்கு பனை ஏறக்குள்ளை, கைதவறி விழுந்து மோசம் போகேல்லையே?'' நடந்த கதைகளைச் சிலர் உதாரணம் காட்டினர்.

''உங்கை இளவட்டனுகள் என்னமாதிரி அம்பாளிக்குதுகள். என்னை பிள்ளைக்கெண்டு ஏன் இந்த வாழ்மானம்?'' வல்லி தலைதலை யாக இடித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உதுகளெல்லாம் எங்கடை கையிலேயே அம்மான்? இன்னும் அதுகளையே யோசிச்சுக் கொண்டிருந்தால், மற்ற அலுவல்களை ஆர் நிண்டு பாக்கிறது?"- வல்லியின் ஒன்றுவிட்ட தங்கைமகன் தெய்வேந்திரன் ஆறுதல் வார்த்தை கூறினான்.

அது நடந்து ஒரு மாதத்தின் பின்பு... அந்தியேட்டி வளவிற் கென்று சென்றபோதுதான் மாணிக்கன் அவளைச் சந்தித்து அனுதாபம் கூற முற்பட்டான்.

மணிக்கணக்காக... வல்லியின் புலம்பலைக் கேட்டுச் சகித்த மாணிக்கன் நேரஞ் சென்றும் அவள் வராததைக் கண்டு "பழைய வளவுக்கை சீவலுக்குப் பனை பாத்துக்கொண்டு வாறன்" என்று கூறிச் சென்று அடுப்படிப் பக்கம் தலை நீட்டியும் அவள் வெளிவராது போகவே... "பாளை இன்னும் வெளிப்படேல்லை!" என்று வல்லிக்குக் கூறிவிட்டு மெல்லென படலையைத் திறந்து வெளியேறி விட்டான்.

மலர்விழியின் இளமைக்கால விதவைக் கோலத்தைப் பற்றி வடலித்திடலில் கூட பலரும் பரிவாகக் கதைக்க ஆரம்பித்ததன் பின்னர் தான் 'அவளுக்கு நான் வாழ்வளித்தால் என்ன?' என்ற எண்ணம் மாணிக்கன் மனதில் தளிர்ப்பு எய்திற்று.

திக்கற்றிருக்கும் அவளது வாழ்வில் மாறுதல்களை ஏற்படுத்தி அவளது வாழ்வில் புத்தொளி வீச, மனதில் வழிவகுத்து அந்த அங்கலாய்ப்பில் அதற்கு அவளது விருப்பறிய வீரனைத் தூதாக மாணிக்கன் அனுப்பிய போதுதான் "உத்தரத்து வேள்வியண்டைக்கு வரச்சொல்லுங்கோ மறுமொழி சொல்லுறன்" என்று சொல்லி அனுப்பினாள் அவள்.

அந்தப் பதிலை... எதிர்பார்த்துத்தான் இப்போது மாணிக்கன் ஆவலோடு காத்திருக்கிறான்!





'என்ன மறுமொழி அவள் சொல்வாள்?' சருகு பத்திப்போன காவோலைகளைப் பிய்த்தெறிந்துகொண்டு நெடும்பனையிலிருந்து மிக வேகமாக விழுந்த ஒரு பனங்காய் உருண்டு வந்து மாணிக்கனின் முன்றில் நின்றது.

புளியடி வைரவர் கோவிலில் வேள்விப் பறையும்... மேலாக சிலம்படி ஓசையும் ஒலிப்பது மாணிக்கனுக்கு இப்போது தெளிவாகவே கேட்கிறது.

பனங்கொட்டினின்றும் துள்ளி எழுந்தவன்... கிணற்றடி சென்று கால்முகங் கழுவித் தன்னை அலங்கரித்து... செம்பாட்டுத் திடலை நோக்கி நடக்க ஆரம்பிக்கிறான்.

எப்படி நடந்தானோ தெரியாது. படலையைத் திறந்து கொண்டு மாலிற்குள் புகுந்தான் மாணிக்கன்.

"எண்டாலும் ஒல்லுப்போலை கொட்டுப்பட்டுத் தான் போனாள்!"

நீண்ட நாட்களின் பின் அவளைக் கண்ட மாணிக்கன் முதலில் மனதில் எண்ணிக்கொண்டது இது.

"என்ன அப்பிடி யோசனை? நான் ஒருத்தன் வந்ததையும் கவனிக்காமல்."

"ஓ! வாருங்கோ இப்பிடி இந்த ஒத்தாப்படியிலை இருங்கோ." மலரின் முகம் சீக்காயாக இறுகியிருந்தது.

"வீரன் அண்டைக்கு விசயம் எல்லாம் சொல்லியிருப்பான் எண்டு நம்புறன்"

"ம்!..." நீண்ட பெருமூச்சு ஒன்று மட்டுமே பதிலாக வந்தது.

"நடக்கக்கூடாதது நடந்துபோச்சு. இன்னும் அதையே நினைச்சுக் கொண்டிருந்தால்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுக்கு? இப்படி நடக்குமெண்டு ஆர்தான் எண்ணியிருந்தது" நா தடுமாறியது. குரல் 'தளதள'த்தது.

"அதுக்கு இப்ப என்ன செய்யிறது மலர்? இதுதான் நியதி எண்டால் ஆராலை தான் மாற்றமுடியும்? இந்த நேரத்திலை... இதை... சொல்லுறதும் சரியில்லை! ஆனால் உன்ரை நிலவரத்தைப் பார்த்துச் சொல்லாமல் இருக்கவும் முடியேல்லை! உனக்குச் சம்மத மெண்டால்... உன்னை நான் கலியாணங் கட்டுறன்."

"மாணிக்கன்!" என்றுமே தன் பேரைச் சொல்லாதவள் இன்று இப்படிப் பேயறைந்தவளாகக் கத்தியது, மாணிக்கனுக்குப் பேரதிர்ச்சி யாகவே இருந்தது.

"என்ரை வாழ்க்கை முடிஞ்சுபோச்சு. அவருக்குப் பெண்சாதி யாக வாழ்ந்த அந்த ஆறு மாதங்களுமே என்ரை வாழ்க்கையிலை பாளை பூத்த நாட்கள். மலர்... மலர் எண்டு வாய்க்கு நூறு தரம் சொல்லுவியளே, உங்கடை அந்த மலர் இப்ப பூத்து உதிர்ந்து போச்சு."

"மலர் உனக்கென்ன பைத்தியமே?"

"இல்லை. பைத்தியம் தெளிஞ்சு போச்சு. சோறு குடுப்பிச்சிருந் தும் இளமை உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டு, உங்களை விருப்பப் பட்டு, கண்காணாத தேசத்திலை இருந்த புருசனுக்குத் துரோகஞ் செய்தனே...? ஒரு கடதாசிகூடப் போடமுடியாமல் நோயாலை துன்பப் பட்டுக் கொண்டிருந்த அவற்றை வருத்தங்களைக் கூட நினைக்காமல், என்ரை ஆசையளைப் பெரிசா நினைச்சுக் கொண்டு திமிர் பிடிச்சுத் திரிஞ்சனே... அவர் திரும்பி வந்து என்னோடை வாழ்ந்த அந்த ஆறு மாதங்களிலை தான் என்னாலை எல்லாத்தையுமே உணர முடிஞ்சுது. வெறும் உடம்பாலை மட்டுமில்லை, நோயோ நொடியோ... வருத்தமோ துன்பமோ... ஒரு நாளெண்டாலும் புருஷனும் பெண்சாதியும் ஒற்றுமையா வாழ்ந்தால் அதுதான் உயர்ந்த வாழ்க்கை எண்டது இப்ப தான் எனக்குப் புரியுது."





"மலர்! அப்பிடியான ஒரு வாழ்வைத் தான் உனக்கு நான் தாறன்."

"பட்டுப்போன பனையிலை பாளையைப் பாத்துக் கொண்டு நிக்கிறியளே...? விட்டுப்போட்டு நானிப்ப சொல்லுறதைக் கேளுங்கோ."

"மலர், ஏனிப்பிடி எல்லாம் பறையிறாய்? உனக்கென்ன நடந்தது?"

"உங்கடை நல்ல மனசுக்கு ஒண்டும் நடக்கக் கூடாது. என்னாலை நீங்கள் ஏமாந்து போனதாகவும் இருக்கப்பிடாது. அதுக்காகத்தான் இதெல்லாம் சொல்லுறன். சலனமற்ற குளமாயிருந்த உங்களின்ரை வாழ்கையிலை இளமை உணர்ச்சிக்கு இடமளிச்சு ஒரு கல்லைப் போலை நான் வந்து விழுந்தன். ஆனால் உங்களோடையும் வாழ முடியாமல், அவரோடை கடைசி மட்டும் வாழுற பாக்கியமும் இல்லாமல் ஒரேயடியா வாழ்க்கையிலை விழுந்து போயிருக்கிறன். நான் அவருக்குச் செய்த நம்பிக்கைத் துரோகத்துக்கு புளியடி வைரவராப் பாத்துத் தந்த தண்டனை இது. இப்பிடியான ஒரு வாழ்க்கை வேறை எந்தப் பெண்ணாப் பிறந்தவளுக்குமே வரக் கூடாது!"

"அதுதானே மலர் சொல்லுறன். உன்னைக் கண் கலங்காமல் கடைசி மட்டிலை நான் காப்பாத்திறன்."

"நிச்சயம் பண்ணியவன் விட்டுட்டுப் போட்டான் எண்டெ ண்ணித்தான் உங்களின்ரை நிழலிலை நான் வாழ நினைச்சன். ஆனால், கண்கண்ட கடவுளா அவரே திரும்பி வந்து எனக்கு வாழுறதுக்கு ஒரு வழியை அமைச்சுத் தந்து, தன்ரை வாரிசா என்ரை வயித்திலை ஒரு சீவனையுந் தந்திட்டுப் போகக்குள்ளை, இன்னொரு வாழ்க்கைத் துணையை எனக்காக நான் தேடிக் கொள்ளுறது எந்த வகையிலை நியாயம்? அதுதான் நான் சொல்லுறன். உங்களை ஏமாத்தினதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை இந்த ஊர் பழி சொல்லாமல் இருக்கவேணுமெண்டால்... நீங்கள் என்மேலை வைச்சிருந்தது... வைச்சிருக்கிறது உண்மையான அன்பாயிருந்தால் நான் சொல்லுறபடி கேளுங்கோ. இன்னும் உங்கடை வாழ்க்கையைச் சீரழிக்காமல் உங்களுக்கெண்டொரு துணையைத் தேடிக்கொண்டு நீங்கள் நலமா இருக்கவேணும். இதுதான் உங்கடை மலருக்கு நீங்கள் செய்யிற பேருதவி.''

“மலர்... உதுதான் உன்ரை முடிவாயிருந்தால்... என்ரை முடிவையும் நான் சொல்லுறன் கேள். இன்னொரு துணையைத் தேடிக் கொள்ளுறதெண்டது இனி என்ரை வாழ்க்கையிலை ஒருநாளும் நடக்காதது. எண்டைக்காவது ஒருநாள் நீ மனம் மாறுவாய் எண்டு தான் நான் நம்புறன். அப்ப சொல்லியனுப்பு, நான் உன்ரை வளவுக்கு உன்ரை புருஷனாக, உன்ரை பிள்ளைக்குத் தகப்பனாக வாறன். அது வரையிலை ஒற்றைப் பனையாகத் தான் நான் இருப்பன். இப்ப நான் போட்டு வாறன்.''

புளியடி வைரவர் கோவிலில் வேள்வி முடிந்து, ஒலிபெருக்கியில் ஒலிக்கும் பக்தி கானம் காற்றோடு கலந்து கொண்டிருந்தது.

***(1982)***



# புதிய தரிசனங்கள்

ஆலய முன்றிலை ஆக்கிரமித்திருந்த வெண்மணலில் அடி பதித்தவாறே அங்குமிங்குமாக நடந்து கொண்டிருந்தான் சீலன். வெந்நீரின் வெப்பநிலையில் மணல் கொதித்துக் கொண்டிருந்தது. சொந்த மண்ணில் நிற்பதில் நிறைந்த இனம் புரியாத அமைதியில் அவனுக்குப் பாதச் சூடும் பரவசமாயிற்று.

கடந்த இருபது வருடங்களில் ஆலய சூழலில் நிகழ்ந்த மாறுதல் களை இனங் காண்பதில் சீலனின் ஐம்புலன்களும் மூழ்கிற்று.

கலிபோனியக் கட்டடங்களுக்கு ஈடாக கம்பீரமாக உயர்ந்து நிற்கும் ராஜகோபுரம், கோவிலின் கிழக்கே உற்சவ காலங்களில் பாத்திரக் கடைகள், வளையல் கடைகளின் ‘கொம்பிளெக்ஸ்’ ஆகத் திகழும் கொன்றை மரங்கள் நின்ற இடத்தே அவற்றினையே ‘பங்கர்’ அரண்களாக்கி அடாவடித்தனமாய் அமைந்து தற்போது அழிந்து போகும் நிலையில் ஒரு ‘சென்ரி’. அதற்கும் அப்பால் வந்த அகதி களைத் தங்க வைத்து வழியனுப்பி வைத்துவிட்டு வரும் அகதிகளைக் காத்திருக்குமாப் போல இரண்டோ, மூன்றோ அன்னதான மடங்கள். மடங்களின் எல்லைகளில் தொடங்கினால் மூன்று, நான்கு கிலோ மீற்றர் தூரத்திற்கு ஒரே நாவல் காடு. அதன்பின்னரே ஊர்மனைகள் தலை காட்டும்.

மேற்கே கம்பிவேலிக்கு மறுபுறமாய் பக்தர்களின் சைக்கிள்களும் சாலிகளும் அவர்களின் வரவுக்காய் தவமியற்றிற்று. கம்பி வேலியில் தளைத்திருந்த பூவரசில் சாய்ப்பு இறக்கி அதன் கீழிருந்து ஓர் சிலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கச்சான் கடை விரித்திருந்தார்கள். ஆசை காட்டியவாறே அதன் அருகே ஐஸ்கிறீம் வானொன்று கோணலாக நின்றது. கம்பிவேலிக்கு மேற்காக மயான பூமி வரை ஓவென்று ஒரே மணல் காடு. இடையிடையே யார் உயரம் எனப் போட்டி போட்டுக் கொண்டு காற்றிற்கு திசை கூறியபடி சவுக்கு மரங்கள்.

கம்பி வேலியோரமாக குண்டு குண்டாக நாவல் பழங்களைச் சுமந்துகொண்டு ஒன்றுக்கொன்று கதை பேசியபடி ஐந்தாறு நாவல் மரங்கள் நின்றதும் 'அட்வான்ஸ் லெவல்' படித்த நாட்களில் ஒரு நாள் நாலைந்து கிலோ மீற்றர்களுக்கு அப்பாலிருக்கும் கல்லூரியில் இருந்து நண்பர்களுடன் கூட்டாகச் சைக்கிளில் சுற்றுலா வந்து அதில் நின்ற நாவல் மரம் ஒன்றின் கீழ் தரித்து நின்றபோது, வீட்டுக்குத் தெரியாமல் கொம்பாஸ் பெட்டிக்குள் மறைத்து வைத்துக் கொண்டு வந்த அப்புவின் கோடாச் சுருட்டை கட்டை ரவி பற்ற வைத்து பின் சத்தி சத்தியாய் எடுத்து மயங்கி விழுந்ததும், அந்தச் சம்பவம் சடையப்பனால் செய்தியாக்கப்பட்டதில் அடுத்தநாள் கட்டை ரவிக்கு வீட்டில் நல்ல சாத்துப்படி கிடைத்ததும் அதன் பின்னர் சடையப்பன் 'றிப்போட்டர்' என சில காலங்கள் அழைக்கப் பட்டதும் கூடவே சீலனின் நினைவில் மின்னிற்று.

வடமேற்குத் திசையில் கிடுகினால் வரியப்பட்ட தேர்முட்டி, அடியில் இரண்டு வரிசைக்கு தகரமும் கட்டியிருந்தார்கள். இரண்டு தடவைகள் சித்திரத் தேருடன் எரிக்கப்பட்டாலும் 'வெளிநாட்டு பக்தர்கள் இருக்கப் பயம் ஏன்?' என்று கேட்பதைப் போல வானளாவி நின்றது. அதற்கு முண்டு கொடுத்தவாறே அமைந்த படிக்கட்டு விளிம்பில் சிறுவர்கள் மேலிருந்து கீழ் நோக்கி சறுக்கீஸ் விட்ட வண்ணமிருந்தனர். இளமைக்கால நினைவை மீட்டும் அக்காட்சியை தனது டிஜிரல் கமராவிற்குள் சிறைப்படுத்த எண்ணியவனாக கண்ணில் வைத்து கமராவை சீலன் ஒழுங்கு செய்தான்.

மங்கிய விம்பங்கள் தெளிவானபோது தன்னை நோக்கி நகரும் அந்த உருவத்தில் சீலனின் கவனம் தரித்தது.





அது தவத்தானெல்லோ?

கண்ணிலிருந்து கமராவை சட்டென்று அகற்றிய சீலன் சத்த மாய்க் கூப்பிட்டான்.

"டேய் தவத்தான்"

கையில் சேர்ட்டையும் கழுத்தில் சங்கிலியையும் தொங்கப் போட்டுக் கொண்டு 'சிவனே' என்று வந்து கொண்டிருந்த தவம் மாஸ்டர் 'டேய்' போட்டு தன்னை யாரோ அழைப்பது கேட்டு அதிர்ந்துதான் போனார்.

அண்மைக் காலத்தில் கெமிஸ்றிப் பாடத்தில் தன்னிடம் முறையாக வாங்கிக் கட்டிக்கொண்ட மாணவன் யாரோதான் தேர் முட்டிக்குப் பின்னால் ஒளித்து நின்று பழிவாங்கும் படலத்தில் இறங்கி உள்ளான் என்று நினைத்தவராக சந்திர மண்டலத்தில் நடப்பவனைப் போல மிதந்து கோயில் வாசலை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தார்.

"டேய் தவத்தான்"

மீண்டும் அதே குரல் மிக அண்மையில் அட்டகாசமாக ஒலித்த போதுதான் தவம் மாஸ்டருக்கு அந்த அசாத்திய துணிவு வந்தது.

'ஒருக்கால் திரும்பிப் பார்த்தால் என்ன? உயிரா போகப் போகுது?'

மாஸ்டர் திரும்புவதற்கிடையில் சீலன் அருகில் வந்து விட்டான். சீலனை இனங் கண்டதும் சிறுபிள்ளையாய் துள்ளிக் குதித்தார் தவம் மாஸ்டர்.

"அடே சீலன்..."

"என்னடாப்பா... கூப்பிடக் கூப்பிட பாராமல் போறாய்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் கொஞ்சமும் எதிர்பார்க்கேலை மச்சான். மாஸ்டர், சேர் எண்டு கேட்டுப் பழகிப் போனதிலை சொந்தப் பெயரையே மறந்த நிலை. அதுவுமில்லாமல் இப்பிடி உரிமையோடை கூப்பிடுறதுக்கு இப்ப ஊரிலை ஆர் இருக்கிறாங்கள் எண்டு நினைச்சன். அது சரி, திடீரெண்டு இப்ப என்ன இஞ்சாலை காத்தடிச்சிருக்கு? இப்ப எந்த நாட்டிலையடாப்பா இருக்கிறாய்."

இருவரையும் இடித்துக்கொண்டும் இடையாலும் சனங்கள் கோயிலுக்குள் நுழைந்து கொண்டிருந்தபோது தான் வாசலில் தாம் நந்திபோல் நிற்பதை அவர்கள் உணர்ந்தார்கள்.

"இஞ்சாலை ஓரமா வா மச்சான் கதைப்பம். சவுதி, லண்டன் எண்டு திரிஞ்சு இப்ப ஸ்ரேற்றிலை செற்றிலாகி இருக்கிறன்."

"உடம்பு கொஞ்சம் ஊதி, சொக்கும் வைச்சிருக்கே தவிர மற்ற படி நீ அப்ப பார்த்த மாதிரியே இருக்கிறாய் சீலன்" - தவத்தானின் கூற்றில் ஒர் வித அங்கலாய்ப்புத் தெரிந்தது.

சீலன் தவத்தானின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். கடந்த காலங்கள் அவன் முகத்தில் வரைந்திருந்த கோலங்கள் மனதை உறுத்திற்று.

தவத்தானை அணைத்தவாறே அருகிருந்த மரத்தடிக்கு அழைத்துச் சென்றான் சீலன். நூறு, இரு நூறு மீற்றர் ஓட்டப் போட்டிகளில் முதலாவதாக வந்த தவத்தானை தோளில் தாங்கிக் கொண்டு தமது இல்லக்கொடியைத் தூக்கியவாறே கல்லூரி விளையாட்டு மைதானத்தை வலம் வந்த அந்த நாட்கள் சீலனின் மனத்திரையில் பின்நோக்கி ஓடின.

"உன்னைப் பற்றி கொஞ்சம் சொல்லு மச்சான்..."

தவத்தானின் வாழ்வியல் பற்றி அறிவதில் சீலன் இப்போ ஆர்வம் காட்டினான்.





மனைவி பயிற்றப்பட்ட சங்கீத ஆசிரியை. பத்திலும் எட்டிலுமாக பிள்ளைகள் இருவர். படித்த கல்லூரியிலேயே இப்போ இவன் விஞ்ஞான ஆசிரியர்.

"படிச்ச பள்ளிகூடத்திலேயே படிப்பிக்கிறது உண்மையிலேயே பெரிய விசயம் மச்சான். அந்த அசெம்பிளி ஹோல், லாப்புகள், லைபிறறி, ஜிம்னீசியம், மார்க்கு மாஸ்டரின்ரை ஆட்றூம்... நாங்கள் படிச்ச கொலிச்சை சுத்திப் பார்க்க வேணும் போலை கிடக்கு மச்சான். இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை தானே? பின்னேரம் உனக்கு நேரம் இருக்குமே?" மிகுந்த ஆர்வத்துடனும் கொஞ்சம் தயக்கத் துடனும் சீலன் கேட்டான்.

"சீலன்... நீ எதிர்பார்க்கிற கோலத்திலை எங்கடை கொலிச் இப்ப இல்லை. கிறவுண்ஸ், கொஸ்ரல் பக்கம் அறவே போகேலாது. கொலிச்சுக்கும் வெளியாக்கள் போறதெண்டால் எழுபத்திரண்டு மணித்தியாலத்திற்கு முன்பே பெமிசன் எடுத்திருக்க வேணும். ஏனெண்டால் இப்ப அந்த ஏரியாவை அதி உயர் பாதுகாப்பு வலையமாக்கி இருக்கினம்."

"அப்ப இந்த முறை அது சரிப்பட்டு வராது"

சீலனின் முகம் ஆர்வத்திலிருந்து ஏமாற்ற பாவத்திற்கு மாறியது

"அது சரி உன்ரை குடும்பத்தைப் பற்றிச் சொல்லன் சீலன்."

எஞ்சினியரிங் லீட் பதவி. கலிபோர்னியா கம்பியூட்டர் கம்பனியொன்றிற்காக வேலை. ஒன்லி சண். பன்னிரு வயது நிரம்பிய அவனுக்கு எப்படியும் தமிழை எழுதப் படிக்க கற்பித்தே தீருவேன் என்ற சபதத்தை நிறைவேற்ற அல்லும் பகலும் அல்லாடும் மனைவி.

அம்மாவும் தனது இறுதிக் கால்த்தில் ஊரிலுள்ள தெய்வங்களின் பெயரை எல்லாம் சொல்லிக்கொண்டு சீலனுடன்தான் இருந்தா. சொந்த மண்ணிலேயே வேக வேண்டும் என்ற தனது இறுதி ஆசையை நிராசையாக்கி விட்டு சென்ற வருட வின்ரரில் இரு இரவு நித்திரையிலேயே போய்விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மாவின்ரை நினைவா அவ கும்பிட்ட கோயில் குள மெல்லாம் போய், தான தர்மஞ் செய்யிறதுக்காகத்தான் இப்ப வந்திருக்கிறன்.." செல்லிடத் தொலைபேசியில் ஏதாவது அழைப்பு வந்திருக்கிறதா என்பதை 'செக்' பண்ணியவாறே சீலன் கூறிக் கொண்டிருந்தான்.

"அப்ப பமிலி?"

"எல்லாக் கோயிலுக்கும் வந்ததுகள். நாளைக்கு கொழும்பு திரும்பவேணுமெண்டதிலை இண்டைக்கு விசிற்றேஸ் அது இது எண்டு வீட்டிலை ஏகப்பட்ட பிசி. அதனாலை நான் மட்டும் மாயவனைக் கும்பிட்டுப் போவமெண்டு வந்தன்."

"கட்டை ரவி, சடையப்பன், முத்துலிங்கன், மூத்தண்ணன் எண்டு எங்கடை பொடியள் எல்லாரும் எப்பிடியிருக்கிறாங்கள்?"

"அதை ஏன் மச்சான் பேசுவான்? இப்ப பொடியளின்ரை படிப்போடை எல்லாரும் பிசி. முந்தி இஞ்சை நாங்கள் கொலிச்சுக்கு என்ர பண்ண போட்டி போட்டுப் படிச்சது போலை, இப்ப அவங்கள் அங்கை பொடியளை கிறமர் ஸ்கூலுக்கு அனுப்புறதுக்கு போட்டுத் திணிக்கிறார்கள். 'ரியூசன்' அது இதுக்கெண்டு காசைக் கொட்டு றாங்கள். இனி ஈரோப்பியன் கன்றியிலை இருக்கிறவைக்கு தங்கடை பிள்ளையள் இங்கிலீசை படிக்கேல்லை எண்ட கவலை. ஆளையாள் சந்திச்சாலும் நீ பொடியனை எங்க ரியூசனுக்கு விடுகிறாய் எண்டது தான் முதல் கேள்வி. சோட்டச் சொல்லுறதெண்டால் நாப்பத்தைஞ்சு வயசு முடிஞ்சாலும் இன்னமும் அண்ட நயின்ரீன் மென்ராலிற்றி யிலைதான் அங்கை எல்லாரும் இருக்கிறாங்கள்.

"மகனுக்கு யாழ்ப்பாணம் பிடிச்சுதோ?"

"நான் பிறந்து வளர்ந்த இடத்தை அவனும் தரிசிக்க வேணு மெண்டதிலைதான் கூட்டிக் கொண்டு வந்தனான். பனங்கூடல் களைக் காணக்காண அவனுக்கு 'சேப்பிறைஸ்' ஆக இருக்கு.





கோயில்களிலை கேணியளைப் பார்த்ததும் 'ஸ் இற் சுவீமிங் பூல்?' எண்டு கேக்கிறான், என்ன ரடி உங்கடை ஊரிலை எல்லாருமே 'ரமில் ஸ்பீக்கிங் பீப்பிளா' இருக்கு எண்டும் பெரும்பாலும் எல்லாரும் ஓரேமாதிரியா ட்றெஸ் பண்ணியினம் எண்டும் வியப்படைகிறான். ஊர்த் தண்ணியை வாயிலும் வைக்கிறான் இல்லை மச்சான். ஒரு நாளைக்கு மூண்டு நாலு போத்தல் மினரல் வாட்டர் வாங்க வேண்டியிருக்கு!"

"அப்ப எப்ப இனி அமெரிக்கா பயணம்?"

"கொழும்புக்கு போனபிறகுதான் பிளையிட் கொன்வோம் பண்ணவேணும். எப்பிடியும் மூண்டு நாலு நாளைக்கிடையிலை போயிடுவம்."

கனத்த சத்தத்துடன் மணி ஒலித்தது. உள் வீதியில் சப்பாணி கொட்டி இருந்தவர்கள் "மாயவா, மாயவா" என்றவாறே எழுந்து வரிசையாய் நிற்பது தெரிந்தது.

"சீலன் பூசைக்கு நேரமாகுது. உள்ளே போவமோ?" - கையில் தொங்கப் போட்டிருந்த சேர்ட்டை இடுப்பில் வரிந்தவாறே தவம் மாஸ்டர் கேட்டார்.

"நான் அர்ச்சனை எல்லாம் முடிச்சுக் கொண்டு தான் மச்சான் வெளியிலை வந்து நிக்கிறன். நீ போய்க் கும்பிட்டுக் கொண்டு வா! பொறு மச்சான்... உன்ரை பிள்ளையளுக்கு என்ரை அன்பளிப்பா ஏதாவது வாங்கிக் குடு!" என்றவாறே தனது கைப்பையினைத் திறந்து இரண்டு பச்சை மயில்த் தாள்களை உருவி எடுத்தான் சீலன்.

"வேண்டாம் சீலன்... உன்னைக் கண்டு கதைச்சதே பெரிய தரிசனம் கிடைச்சது மாதிரி மச்சான். உண்மையிலை பழைய சிநேகிதனை சந்திக்கிறதிலை இருக்கிற சந்தோஷமும் நிம்மதியும் வேறே எதிலையுமே இல்லை சீலன். அது ஒரு தனி உலகம்." தவம் மாஸ்டரின் முகம் பூரித்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டொலர் கணக்கில் கைமாற்று வாங்கி பத்து வருடங்கட்கு மேலாகியும் சகுந்தலையைப் பிரிந்த துஷ்யந்தன் நிலையில் இருக்கும் வெளிநாட்டு நண்பர்கள் சிலரின் நினைவு தவிர்க்க முடியாமல் சீலனின் மனதில் தோன்றிற்று.

எடுத்த பணத்தை மீண்டும் கைப்பையினுள் வைத்தவாறே ராஜ கோபுர வாசலினூடே கம்பீரமாக ஆலயத்துட் புகும் தவத்தானைப் பார்த்தவண்ணம் நின்ற சீலன், தன்னைக் கடந்து பொங்கல் பானையைப் பின் கரியரில் கட்டியவாறே சைக்கிளை உருட்டிச் செல்லும் நடுத்தர வயதைக் கடந்த மெலிந்த உயரமான ஒருவரின் இருமல் சத்தத்தில் நினைவு திரும்பினான். பொங்கல் பானையின் பாரத்தில் அதை உருட்டிச் செல்பவர் 'பலன்ஸ்' தவறி கவிழவிட்டு விடுவாரோ என சீலன் பயந்து கொண்டிருந்தான். கரியரைப் பிடித்தவாறே வேறும் இரு பெடியன்கள் போய்க் கொண்டிருந்தது நிம்மதி தந்தது.

கமராவையும் கைப்பையையும் தோளில் கொழுவியவாறே தேர்முட்டியை நோக்கிச் சென்றான் சீலன். வடக்குத் தெற்காக சுமார் ஐம்பது அறுபது பேர்வரை அதில் வரிசையாக அமர்ந்திருந்தார்கள்.

பெரும்பாலானோர் முன்றிலில் மூடல் ஒன்று தவங் கிடந்தது, சிலரது முன்னால் புதிய பிளாஸ்டிக் பேசினும் இருந்தது. பொங்கலும், பழங்களும் அவற்றுள் இருந்தன. அதனிடையே ஒளித்துக்கொண்டு நாணயங்களும் பாத்திரங்களின் அடியில் கிடந்தன.

கைப் பையினைத் திறந்து அதற்குள் தயாராயிருந்த இருபது ரூபா கட்டினை எடுத்து ஒவ்வொரு ஒவ்வொரு தாளாகத் தெற்கிலிருந்து வடக்காக அணிவகுத்த வண்ணமிருந்த பாத்திரங்களில் போட்டுக் கொண்டு வந்தான் சீலன்.

இடையில் ஓரிடத்தில் பாத்திரம் மட்டுமே இருக்க, உரியவர் இடத்தினைப் பொட்டளி ஒன்று இடம் பிடித்திருந்தது.

"இதிலை ஆரும் இருக்கினமோ?"





"ஓம் ஐயா, ஒரு ஆச்சி இருக்கிறதா, வெளிக்குப் போட்டு வாறனெண்டுட்டு இப்பத்தான் ஐயா எழும்பி உதிலை போறா."

"சரி இந்தக் காசை அவவிட்டைக் குடுங்கோ!" அருகிலிருந்த கைக்குழந்தைக்காரியிடம் சீலன் தாளை நீட்டினான்.

தானம் முடிந்ததும் எஞ்சிய பணத்தினைக் கைப்பையினுள் வைத்துக்கொண்டே சீலன் நீண்டிருந்த வரிசையை ஓர் கணம் நோட்டம் விட்டான்.

சகலரது முகங்களும் பிரகாசத்தால் மின்னிற்று. கோயில் வாசலை நோக்கி நடந்து கொண்டிருந்தான் சீலன். பொங்கல் மடத்துள் இன்னமும் புகை மண்டிச் சுழன்று கொண்டிருப்பது தெரிந்தது.

அங்கப் பிரதட்சணையை முடித்த பருத்த உடம்புடன் கூடிய வாலிபன் ஒருவன் எழுந்து வந்து உடலில் ஒட்டியிருந்த மணல்கள் உதிரும்படியாய் தேங்காயை மாயவன் சந்நிதானத்தில் ஓங்கி அடித்தான்.

"மாயக் கண்ணனுக்கு அரோகரா!" எனக் கூடவே நின்ற பெண், மனைவியாக இருக்கலாம், உரு வராத குறையாக உரத்துச் சத்தமிட்டாள்.

மடப்பகுதியிலிருந்து நாரிப்பிடிப்புடன் கூடிய மூதாட்டி ஒருத்தி தன்னை நோக்கிக் கையினை நீட்டியவாறே வருவதைக் கண்ட சீலன் தாளொன்றை எடுத்து நீட்டினான்.

பணத்தை பெற்ற அம் மூதாட்டி நிமிர்ந்து சீலனைக் கனிவுடன் பார்த்தாள். பின் நாரியை சவிட்டியவாறே தாண்டித் தாண்டி தேர்முட்டிப் பக்கமாகச் சென்று கொண்டிருந்தாள்.

பூசை முடிந்து ஒருகையில் நீறும் மலர்களும் மறுகையில் சேர்ட்டுமாக ஆண்களும், 'அப்பனே... மாயவா!' எனப் பக்திப் பரவசத்தில் கைகளை நீட்டியபடியே ராஜகோபுரத்தை அண்ணாந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தபடியே பெண்களுமாக பக்தர்கள் நாமப் பொட்டு நெற்றியில் பளபளக்க ஆலயத்தை விட்டு வெளியேறிய வண்ணம் இருந்தனர். ரவுணுக்குச் செல்லும் 'ஒண்டு பத்து' பஸ்ஸைப் பிடித்துவிட வேண்டு மென்ற அவசரம் அவர்களில் தெரிந்தது.

வீடு செல்வதற்கு நாவற்காடுகளையெல்லாம் தாண்டி இன்னும் நான்கு கிலோமீற்றர் ஆட்டோவில் பயணிக்க வேண்டுமே என்ற எண்ணம் மேலிடவே, ஆலய இறுதித் தரிசனத்திற்காக கனத்த வாசல் கதவினைத் தாண்டி உட்சென்று கொண்டிருந்தான் சீலன்.

பத்தடியும் சென்றிருக்க மாட்டான். "ஐயா, ஐயா" என மூச்சிளைத்தவாறே அழைக்கும் பெண்ணின் குரல் கேட்டது. சீலன் திரும்பிப் பார்த்தான்.

வெளியே உண்டியல் பெட்டிக்கருகில் நாரிப்பிடிப்புடன் கூடிய அம்மூதாட்டி வேர்த்தொழுக நின்றவாறே சீலனை அழைப்பது தெரிந்தது.

வெளியே வந்த சீலன் 'ஏன்? என்ன?' என கண்களால் வினவினான்.

"ஐயா... எனக்குத் தர்மக்காசை பக்கத்திலை இருந்த பொடிச்சி யட்டைக் குடுத்திருக்கிறியள். பிறகு இப்ப... உதிலையும் தந்திருக் கிறியள்... அது தான் ஐயா இப்ப உதிலை தந்த காசைத் திரும்பித் தந்திட்டுப் போகலாமெண்டு வந்தன்."

சீலன் வார்த்தைகள் எதுவுமின்றி விக்கித்துப் போய் நின்றான்.

உண்டியல் பெட்டிக்கருகில் படிக்கட்டில் கற்பூரம் புகை கக்கிக் கொண்டிருந்தது.

"அதுவும் உங்களட்டையே இருக்கட்டும் ஆச்சி!" சீலனின் குரல் அசாதாரணமாய் இடறிற்று.





சீலனைக் கையெடுத்துக் கும்பிட்ட அம்மூதாட்டி திரும்பி செங்கோணமாக முதுகை மடித்தவாறே தாண்டித் தாண்டிச் சென்று கொண்டிருந்தாள். சீலனின் கண்கள் தற்செயலாக ராஜகோபுரம் மீது தரித்திற்று.

ஏறிகணைகள் அகோரத்தால் சிற்பங்கள் சில உருக்குலைந்து தொங்கிக் கொண்டிருந்தாலும், அக்கோபுரம் கலிபோனியக் கட்டிடங்களைக் காட்டிலும் இப்போது பன்மடங்கு கம்பீரத் தோற்றம் காட்டிற்று.

***(2004)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா

அம்மாவால் மேலும் ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியவில்லை. ஊன்றிக் கொண்டு வந்த கோலை கெட்டியாகப் பிடித்தவாறே, அருகிலிருந்த மதகில் அமர்ந்து கொண்டாள். கண்களில் ஒளிமங்கிக் கொண்டு வருமாப் போலிருந்தது. வீதி வழியே சென்று கொண்டிருப்பவர்களையோ அல்லது வாகனங்களையோ பார்க்க முடியாத அளவிற்கு, படிப்படியாகக் கண்கள் இருண்டு கொண்டு வந்தன. இங்கிருந்து ஆஸ்பத்திரிக்கு இன்னும் ஒரு கிலோ மீற்றர் தூரமாவது நடக்க வேண்டும். அம்மாவால் இந்நிலையில் எப்படி இவ்வளவு நீண்ட தூரத்தைக் கடந்து செல்ல முடியும்? கண்கள் இருண்டு கொண்டு வந்தாலும், அம்மாவுக்கு இன்னமும் நினைவுகள் தெளிவாகவே உள்ளன.

அம்மாவுக்கு பெற்றோர் இட்ட பெயர் அன்னம்மா. ஆனால், உணவு முத்திரைக்கான அட்டையில் மட்டுமே அப்பெயர் பதியப் பட்டிருந்ததே தவிர, அக்கம் பக்கத்தார் உட்பட பழகிய சகலருமே அன்னம்மாவில் அன்னத்தை விழுங்கி விட்டு வெறுமனே 'அம்மா' என்று மட்டுமே அழைத்து வரலாயினர். உணவு முத்திரைக்கான உலர் உணவுப் பண்டங்களை விநியோகிக்கும் சங்கக்கடை மனேஜர், "அடுத்தது அன்னம்மா" என்று அன்னம்மாவைப் பார்த்து அழைத்தாலும், அது பின்னாலை யாரையோவாக்கும் என்று அம்மா ஆறுதலாக வெற்றிலை போட்டுக்கொண்டு இருக்குமளவிற்கு .... இன்று ஏறத்தாழ தன் முழுப்பெயர் அன்னம்மாவுக்கே மறந்த நிலையில் அம்மா என்ற பெயரே நிலைத்து விட்டது.





அம்மாவுக்கு மறந்து போனது தன் முழுப்பெயர் மட்டுமல்ல. வாழ்ந்த குடும்பமும் தான். அம்மாவுக்கு உடன் பிறப்புகள் ஏழு பேர். அம்மா தான் அப்பு, ஆத்தைக்கு தலைப் பிள்ளை. "உனக்கேன் படிப்பை? சனியன், வீட்டிலை போய் அடுப்பை ஊதன்!" என, அம்மா ஐந்தாம் வகுப்பு படித்தபோது வல்லிபுர வாத்தியார் 'சேட்டிபிக்கட்' கொடுத்த ஒரு சில நாட்களில், அவளது மூன்றாவது தம்பி பிறந்தபோதாகத்தான் இருக்க வேண்டும், ஆத்தைக்கு உதவிக்காக அம்மா பள்ளிக்கூடம் போவதை நிறுத்திக் கொண்டாள். அதன் பிறகு பிறந்த அத்தனை தம்பிமாருமே அம்மாவைத்தான் தமது தாயென எண்ணிக் கொள்ளுமளவிற்கு, தன் உடன் பிறந்தவர்கள் நலனுக்காக அம்மா தன்னையே அர்ப்பணித்துக் கொண்டாள்.

அம்மாவுக்கு பூப்பெய்திய சில நாட்களுக்குள்ளேயே திருமணமும் நடைபெற்றது. திருமணம் என்றால் ரோகிணி நட்சத்திரமும், அமிர்த யோகமும், கன்னி லக்கினமும் கூடிய சுப வேளையில், கெட்டி மேளம் கொட்ட 'மாங்கல்யம் தந்துனானே' என்று ஐயர் சொல்ல, தங்கத் தாலியெல்லாம் கட்டி டாம்பீகமாக அல்ல! அம்மாவுக்குத் தூரத்து உறவில் மச்சான் முறையில் உள்ள ஒருவரை ஒரு நல்ல நாளாகப் பார்த்து அழைத்து வந்து அன்றைய மைமல்ப் பொழுதில் சோறு குடுப்பித்து, மிக எளிமையான சடங்காகத் தான் திருமணம் ஒப்பேறியது. இரண்டு பரப்புக் காணியிலமைந்த ஓரறை வீட்டில் தனிக்குடித்தனமாக அம்மாவின் இல்வாழ்க்கை ஆரம்பமானது.

பிரமன் அம்மாவின் தலை விதியை நிர்ணயித்தது பெரும்பாலும் மஞ்சள் கயிறு கழுத்தில் ஏறியதன் பின்பாகத்தான் இருக்க வேண்டும். அம்மாவுக்கு வாய்த்த கணவன் 'இனிஷலுக்கு' மட்டுமே அந்த ஸ்தானத்தில் இருந்தானே தவிர, குடும்பப் பாரத்தை அம்மாவே சுமக்க வேண்டி இருந்தது. தனக்கு வாய்த்தவன் தன் உழைப்பை எல்லாம் உறிஞ்சி ஆதாரமாக இருந்த சொத்துக்களிலும் கைவைத்து ஊதாரியான போதும் அம்மா தன் கணவனைச் சினக்கவில்லை. இறுதியில், இருக்கும் இரு பரப்புக் காணியும் ஈட்டில் போகும் நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுமோ என்ற பயம் வந்த போது தான் எதிர்காலம் பற்றி கணவனுக்கு எடுத்துரைக்க ஆரம்பித்தாள்.

மனைவியிடமிருந்து புத்திமதிகளைத் தவிர இனி ஒரு சதக் காசுமே கிடைக்காது என்பதை உணர்ந்து கொண்ட பின்பு ஒரு மாரிக் கால காலைப் பொழுதிலிருந்து, அம்மாவின் கணவன் காணாமல் போய்விட்டான். "இவர் இறுதியாகக் காணப்பட்ட போது நீல நிற 'பற்றிக்' சாரமும், வெள்ளை நிற 'சேட்டும்' அணிந்திருக்கக் காணப் பட்டார். அத்துடன் சவரஞ் செய்யப்படாத முகத்துடன் காட்சி யளித்தார். அவரைக் கண்டவர்கள் தயவு செய்து அருகிலுள்ள காவல் நிலையத்துக்கு தகவல் தரவும்", என அம்மா பெரிதாக எதுவும் விளம்பரப்படுத்த விரும்பவில்லை.

கணவனின் இழப்பு 'இட்டு நிரப்பப்படமுடியாத வெற்றிடம்' என்று ஒன்றும் கதிகலங்கிப் போய்விடவுமில்லை. ஆனால் கணவனின் போக்காலும் பாராமுகத்தாலும் பத்தாண்டு களாக உறவுகள் விடுபட்டு, வேறுபட்டிருந்த தன் உடன் பிறப்புகள் மீண்டும் தன்னை நாடி வருவார்கள் என்ற எதிர்பார்ப்பு ஏமாற்ற மாய்ப் போனது தான் அம்மாவுக்கு கவலை அளித்தது.

அருகிலிருக்கும் பல்கலைக்கழக மாணவர் சிலருக்கு உணவு சமைத்துக் கொடுத்து,அதில் வரும் சொற்ப இலாபத்தில் அம்மாவின் வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது. ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டு களாக மாறி மாறி வரும் பல்கலைக்கழக மாணவர்களே அம்மாவுக்கு பிள்ளைகள், குடும்பம், உலகம் எல்லாமே. சாப்பிட வரும் ஒவ்வொரு மாணவனும் சாப்பாட்டு விடயமாக அம்மாவிடம் உரிமையாகப் போர்க்கொடி தூக்கும் வேளைகளில் தனக்குப் பிள்ளைகள் இல்லையே என்ற குறை அம்மாவுக்குப் பெரிதாகத் தெரியவில்லை.

தன் பின் பிறந்த எழுவரில் அறுவர் இலண்டன், கனடா, சுவிஸ் என ஒருவர் பின் ஒருவராகக் கப்பலேறி விட்டதாகவும், கடைக்குட்டி கனகன் மட்டும் மருத்துவக் கல்லூரியில் 'டொக்டருக்குப்' படிப்ப தாகவும் அம்மாவின் காதுகளுக்கு அவ்வப்போது செய்திகள் வந்து





கொண்டிருந்தன. 'எங்கை இருந்தாலும் என்ரை பிள்ளையள் நல்லா இருந்தால் அது ஒண்டே போதும்' எனச் செய்தியாளர்கள் மத்தியில் அம்மா கருத்துத் தெரிவிப்பாள். ஆனாலும், இத்தனை நீண்ட காலங்களாகத் தன் தம்பிமார் தன்னுடன் தொடர்பின்றி அந்நியப் பட்டுப் போவதற்கு அவர்களுக்கு தான் என்ன குறை வைத்ததாக அம்மாவின் மனம் உள்ளூரக் கலங்காமல் இல்லை. "அந்தாள் அமர் கொண்டு திரிஞ்சதுக்கு நான் என்ன செய்ய? அந்தாளிலை உள்ள வெறுப்பை ஏனிதுகள் என்னிலை காட்டுதுகள்? "

அம்மாவுக்கு இப்போது வயது அறுபதை நெருங்குகிறது. ஆனால், தன் பெரும்பாலான காலத்தை வேதனையிலும், விரக்தி யிலும் கழித்ததில் பார்ப்பதற்கு அம்மா எழுபது வயதைத் தாண்டிய வரைப் போலவே காட்சியளித்தாள். கடந்த சில மாதங்களாக அம்மாவுக்கு எதுவுமே முடியவில்லை. சாப்பிட வந்த மாணவர்களும் 'அம்மாவுக்கு இனி இயலாது' என 'அறிவித்தல் பலகையை மாட்டி' விட்டுத் தமது உணவிற்கு வேறிடம் பார்த்து விட்டார்கள்.

சதா அடுப்பு வெக்கைக்குள் இருந்து வேகி பலபேருக்கு அவித்துப் போட்ட அம்மா படுக்கையில் வீழ்ந்த போது பக்கத் திலிருந்து ஒரு வெந்நீர் தானும் வழங்க எவருமே இல்லை. நிலைமை மேலும் மோசமடையவே 'ஒருக்கால் ஆஸ்பத்திரிக்குக் காட்டிப் பார்ப்பம்' என்ற அங்கலாய்ப்பில் தான் இன்று காலையிலேயே கிளம்பியிருந்தாள் அம்மா.

நோயால் உடல் மிகவும் பலவீனப்பட்டுப் போனதாலும் கடந்த நான்கைந்து தினங்களாக எதுவுமே உட்கொள்ளாததாலும் தான் அம்மாவுக்கு இப்படி நடக்கவே முடியாத நிலை ஏற்பட்டது.

மதகில் இருந்த அம்மாவிற்கு இப்போது படிப்படியாக நினைவு களும் மங்கிக் கொண்டு வந்தன.

மீண்டும் அம்மாவுக்கு நினைவு திரும்பியபோது கைகள் இரண்டிலும் வலியெடுப்பது போன்ற ஓர் உணர்வு. ஏதோ ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலில் பஞ்சணையில் படுத்திருப்பதைப் போன்ற பிரமை. கண்களை மெல்லத் திறந்து பார்த்தாள். 'இப்ப நான் எங்கை இருக்கிறன்?' என்ற சினிமாப் பாணிக் கேள்விக்கு அவசியமே இல்லாது, முதல் தெரிந்த திரை மறைவே, இருக்கும் சூழலைப் படம் பிடித்தது. உதயனோ, ஈழநாடோ ஏதோ ஒரு பத்திரிகையில் தன்னை மெய்மறந்திருந்து விட்டு தற்செயலாகத் திரும்பிப் பார்த்த போது, அம்மா விழித்திருப் பதைக் கண்டு விட்ட தாதி ஒருத்தி, அம்மாவின் அருகில் ஓடி வந்தாள். கிட்ட வந்தவள், அம்மாவின் முகத்தை ஒரு தடவை உற்றுப் பார்த்துவிட்டு, பயிற்சி பெறும் தாதியாக இருக்கலாம் சாதாரண உடையில் இருக்கும் இன்னொரு தாதியைக் கூப்பிட்டு கூறிக் கொள்வதும் அம்மாவால் கேட்க முடிகிறது. "இந்தப் பேசன்ரைக் கவனமாப் பார்த்துக் கொள்ளும். இவ டொக்டருக்கு மிக வேண்டியவ. நான் ஓடிப்போய் டொக்டரைக் கூட்டிக்கொண்டு வாறன்."

அம்மாவுக்கு எல்லாமே புதிராக இருந்தது. மெல்ல அண்ணாந்து பார்த்தாள். ஒரு பக்கத்தில் இரத்தமும், மறுபக்கத்தில் 'சேலைனும்' உடலிற்குள் ஏறிக் கொண்டிருந்தன. கைகள் வலி யெடுப்பதற்கான காரணம் புரிந்தது. வெளியே சென்ற தாதி உள் நுழைவது தெரிந்தது. இவள் மிக அண்மையில் தனது தனிப்பட்ட தேவை ஒன்றிற்காக 'டொக்டரின்' சிபாரிசை எதிர்பார்த்து நிற்பவ ளாக இருக்க வேண்டும். நினைவு திரும்பிய அம்மாவின் வியப்பு அவளுக்கும் புரிந்தது. அருகில் வந்து கூறுகிறாள். "நீங்கள் மதகடியில் மயங்கி விழுந்து கிடந்தீங்களாம். காவல்துறைப் பொடியன்கள் தான் தங்கடை 'பிக்கப்பிலை' உங்களை 'ஓ.பீ.டீக்கு' கொண்டு வந்திச்சினம். அப்ப 'ஓ.பீ.டீ'யிலையிருந்த 'டொக்டருக்கு' நீங்கள் தெரிஞ்சனீங்களாம். மிக்க வேண்டியவராம். அவரே முன்னுக்கு நிண்டு உங்களுக்கு வேண்டியதெல்லாத்தையும் செய்தார். இவ்வளவு நேரமா இங்கையே இருந்திட்டு இப்ப தான் சாப்பிட்டுட்டு வாற னெண்டு போனார்."

அம்மா சமைத்துக் கொடுக்கும் காலங்களில் சமையல் முடியு முன்பே மாணவர்கள் சாப்பாட்டிற்கு வந்துவிட்டால் நேரத்தைப் போக்காட்டுவதற்காக முற்றத்திலிருந்தவாறே தாம் முதல் நாள் இரவு 'செக்கண்ட் ஷோ' பார்த்த எம். ஜி. ஆர், சிவாஜி கணேசனது திரைப் படங்களைப் பற்றி விவாதிப்பார்கள். நடைமுறைக்கு முரணான சம்பவங்களையே தமிழ்த் திரைப்படங்களில் காட்டுகிறார்கள் எனக் கூறிக் குறைப்பட்டுக் கொள்வார்கள். ஆனால், தனக்கு இப்போது நிகழ்ந்ததைப் பார்த்தால் வாழ்க்கையின் நடைமுறைகளைத் தான் சினிமா நாடகங்களிலும் சித்திரிக்கின்றார்கள் என ஒரு வேளை அவர்கள் ஒப்புக் கொள்வார்களோ என்னவோ? என அம்மா நினைத்துக் கொண்டாள்.





ஏது எப்படியாயினும் அம்மாவின் வியப்பெல்லாம் எனக்கு இப்படி பெத்த பிள்ளை போல் உதவிற அந்த 'டொக்டர்' யார்? அம்மாவின் கண்கள் 'டொக்டரின்' வரவை நோக்கி அகல விரிந்துகொண்டிருந்தன.

பத்து நிமிடங்கள் கூடக் கடந்திருக்காது. 'டொக்டர்' மிக வேகமாக வருவதை அம்மாவால் உணர முடிகிறது. அம்மாவுக்கு அருகில் வந்து கட்டிலில் ஊன்றியவாறே 'டொக்டர்' கேட்டார் "அம்மா எப்பிடி இருக்கு?."

அம்மாவால் எதையுமே கதைக்க முடிய வில்லை. சொற்களைக் கூட்டிப்பார்த்தாள். நாக்கு நகர மறுத்தது.

"அம்மா என்னை உங்களுக்குத் தெரியேல்லையா? வடிவா உற்றுப் பாருங்கோ!"

அம்மா 'டொக்டரின்' கண்களை உற்றுப் பார்த்தாள். எங்கேயோ மிக அறிமுகமான கண்கள். நித்தமும் பழகியதைப் போன்ற உணர்வு. ஆனால், இன்னாரென்று மட்டுக்கட்ட முடிய வில்லை. 'டொக்டர்' தொடர்ந்தார்.

"அம்மா, பத்து வருஷத்துக்கு முந்தி 'யூனிவசிட்டியிலை' நான் படிக்கைக்குள்ளை உங்களட்டைத்தான் சாப்பிட்டனான். ஒரு நாள், இரண்டு நாளில்லை, ஐந்து வருஷங்கள் உங்களின்ரை கையாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிட்டுத் தான் நான் படிச்சன். டொக்டரானன். கிட்டடியிலை தான் இந்த ஊருக்கு மாற்றலாகி வந்தன். அப்ப நான் முதலிலை உங்களைப் பற்றித் தான் விசாரிச்சன். இப்ப நீங்கள் சமைச்சுக் கொடுக்கிறதில்லை எண்டும், சுகமில்லாமல் இருக்கிறியளெண்டும் அறிஞ்சு உங்களைப் பார்க்க வரவேணும் எண்டு இருக்கைக் குள்ளைதான் காலமை நீங்கள் மயக்கமா வீதியிலை விழுந்து கிடந்ததாக ஓ.பீ.டீ,க்கு கொண்டு வந்திச்சினம்.''


அம்மா ஏதோ சொல்ல விரும்பியவளாக மீண்டும் ஒருமுறை கதைக்க முயற்சித்தாள். "அம்மா, நீங்கள் இந்த நேரத்திலை எதுவும் கதைக்கக் கூடாது. உங்களோடை எவரும் கனக்கக் கதைக்கவும் கூடாது. உங்களுக்கு ஓய்வு தேவை. நீங்கள் சுகப்பட்டதும் இனி எங்கேயும் போய் தனியாகக் கஷ்ரப்படத் தேவையில்லை. என்ரை 'குவாட்டேசுக்கே' வாங்கோ. அம்மா கடைசி வரையில இனி உங்களைக் காப்பாற்ற வேண்டியது என்னுடைய கடமை.''

அம்மாவின் இதயத்துடிப்பை 'டொக்டர்' பரீட்சித்துக் கொண்டிருந்தார். இதுவரை ஆயிரம் பேர் அம்மாவை "அம்மா" என அழைத்திருக்கலாம். ஆனால், இன்று இந்த டொக்டர் "அம்மா அம்மா'' எனத் தன்னை அழைப்பதே அர்த்தமுள்ளதாக அம்மா வுக்குப் பட்டது.

***(1992)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீரா பதிப்பக வெளியீடு - 65

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org